
# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 04 புதன்கிழமை (21.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 299

10 சிதைவடைகிறது மன்னார் கோட்டை



14 ஒரு பயணம் பல குரல்கள்



25 கிண்ணம் வென்றது ஆஸி.

## போர்க்குற்ற விசாரணையே உடனடித் தேவை; வலுத்து வருகிறது சர்வதேசத்தின் ஆதரவு

### பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தீர்வு பெற்றுத் தரப்படும் என்கிறது கிறீன் கட்சி



கொழும்பு, செப்.21

போர்க்குற்றங்கள் குறித்தான அவசரமானதும், நியாயமானதுமான சர்வதேச விசாரணையொன்று இலங்கைக்கு எதிராக நடத்தப்பட வேண்டுமென்ற சர்வதேச ஆதரவு தீவிரமாக அதிகரித்து வருவதாக ஆஸ்திரேலிய கிறீன் கட்சியின் செனட்டர் லீ ரிஹானொன் நேற்று 'உதயனு'க்கு வழங்கிய விசேட பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அதேபோல், இலங்கைக்கெதிரான போர்க் குற்ற சர்வதேச விசாரணையொன்று வருமாயின் அதனைத் தாம் முழுமனதுடன் வரவேற்பார் என்றும் லீ தனது பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்

பக் 27

# நியூயோர்க் நகரத்தில் சிறைப்பட்டார் மஹிந்த

### வேறு இடங்களுக்குச் செல்ல அனுமதி மறுப்பு

நியூயோர்க், செப்ரெம்பர் 21

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் தலைவர்கள் உரையாற்றும் முக்கிய நிகழ்வு நேற்று ஆரம்பமானது. இதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியூயோர்க்குக்கு வெளியே செல்ல வேண்டாம் என்று அமெரிக்க இராஜதந்திரிகள் அறிவுறுத்தியுள்ளனர் என்று ஆங்கில இணைய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. நியூயோர்க்கிற்கு வெளியில் சென்றால் போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படக் கூடும் என்பதாலேயே ஜனாதிபதியை அங்கிருந்து வெளியே செல்ல வேண்டாம் என்று அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் இராஜதந்திரிகளுக்கு நியூயோர்க்கில் மட்டுமே இராஜதந்திர பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பக் 25

## கொக்கிளாயில் பிள்ளையாருக்கு பதிலாகப் புத்தர்!

முல்லைத்தீவு, செப்.21

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் பொது மற்றும் தனியார் காணிகளை உள்ளடக்கி பௌத்த விகாரை ஒன்று கட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்கிளாய் மருத்துவமனைக் காணியின் ஒரு பகுதி கொக்கிளாய் உபதபாலகக் காணியின் ஒரு பகுதி மற்றும் தனியார் ஒருவரது காணி என்பவற்றை இணைத்து இந்த விகாரை அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே பிரசித்தமான அரசடிப்பிள்ளையார் ஆலயம் இந்தப் பகுதியிலிருந்து அழிக்கப்பட்டு

பக் 27

## ஜெனீவா ஐ.நா. மனித உரிமை சபை முன் உணர்வுபூர்வமாக நடந்த 'பொங்கு தமிழ்'

### நிகழ்வில் ஆயிரக்கணக்கில் திரண்டனர் தமிழர்கள்



ஜெனீவா, செப்.21

சுவிற்சர்லாந்து ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முன்பாக உள்ள ஈகப்பேரொளி முருகதாசன் திடலில் இடம்பெற்ற மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகள் பலவற்றிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு ஐரோப்பிய நாடுகள்


பக் 27

## அமைச்சர் காலில் விழ மறுத்த முல்லை மாணவன் சேதுராகவன்

கொழும்பு, செப்.21

வட மாகாணத்தின் கல்வி நிலைகள் மற்றும் பாடசாலைகளின் ஆளுமை விருத்தி தொடர்பாக யாழ். நூலகக் கேட்போர்கூடத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற மாநாட்டி

பக் 25



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் இரண்டாவது அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற பரமேஸ்வரன் சேதுராகவன் அமைச்சர் பந்துல குணவர்தனவால் கௌரவிக்கப்பட்ட வேளை.

## அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பு, நில அபகரிப்பு; சர்வதேச சமூகத்திடம் கூட்டமைப்பு முறையிடும்

### தேவை ஏற்படின் நீதிமன்றம் செல்வோம் என்கிறார் சுரேஷ்

கொழும்பு, செப்.21

இலங்கை அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கை, நில அபகரிப்பு என்பன தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம். நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதையும் செய்யத் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அதிரடியாக அறிவித்துள்ளது.

தமிழினம் என்றொன்று இலங்கைத் தீவில் இருக்கக்கூடாது என்ற முனைப்புடனேயே இலங்கை அரசு திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை தமிழர் தாயகப் பிரதேசங்களில் அரங்கேற்றி வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பக் 27

## மெனிக்பாம் முகாமுக்கு மிக விரைவில் மூடுவிழா

### எஞ்சியிருப்போர் கோம்பாவிலுக்கு

கொழும்பு, செப். 21

வவுனியா மெனிக்பாம் முகாமை விரைவில் மூடிவிடப்போவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுக் கொழும்பில் அறிவித்தது. தற்போதும் முகாமில் தங்கி உள்ளவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கான

பக் 25

## முல்லை. முகத்துவாரத்துக்கு புதிதாக் குடியேற வந்துள்ள சிங்களவர்கள்

### நேற்று 34 குடும்பங்கள் தற்காலிகப் பதிவு

முல்லைத்தீவு, செப்.21

முல்லைத்தீவு, முகத்துவாரம் பகுதியில் நேற்று 34 சிங்களக் குடும்பங்கள் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் 45 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கொக்கிளாய்ப் பகுதியில்

பக் 25

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்.

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 20 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,828.57↓
மிலங்கா(MPI) 6,169.22↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,805.05Mn
பங்குகளின் அளவு(No.) 118.29Mn
வியாபாரம்(No.) 18,486
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
அலையன்ஸ் இன்சூரன்ஸ் 187.90
சிங்கலங்க 335.00
எசியன் அலையன்ஸ் 1190.00
கஹுவத்தை 33.90
ஹொட்டல் டெவலப்பேஸ் 141.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
எ.எம் பைனான்ஸ் 491.00
ஈச்சேன் மேர்சன் 31.30
மேக்கன்ரைல் சிப்பிங் 287.50
ஆஸ்கொட் 135.00
ரெஸ் அக்குரோ 5.80
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# வருட இறுதிக்குள் நல்ல தீர்வு கிடைக்கலாம்; தவறினால் மக்களை அணிதிரட்டிப் போராட்டம்

## ஜனநாயக ரீதியில் நடக்கும் என்கிறார் மாவை



அம்பாறை, செப்.21

'அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுக்களின மூலம் இந்த வருட இறுதிக்குள் நல்ல தீர்வு கிடைக்கும என்று நம்புகின்றோம். தவறினால் ஜனநாயக ரீதியாக எம் மக்களை அணி திரட்டி அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ளத் தயங்கோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட அரசியல் பணிமனை, பாண்டிருப்பு - நற்பிட்டிமுனை பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பணிமனை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வில்லியம் தோமஸ் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

### அரசுக்கு அழுத்தம்

'அரசுடன் மீண்டும் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியா, அமெரிக்கா போன்ற சர்வதேச அழுத்தங்கள் இதற்கு இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் தமிழ் மக்களுக்கான இனப் பிரச்சினைத் தீர்பு பற்றிப் பேச வேண்டும் என்ற அழுத்தங்களும் அரசுக்கு விடுக்கப்பட்டன.

இதற்கும் போர் குற்றங்களுக்கும் சம்பந்தம் இருந்தாலும் அதனை சம்பந்தப்படுத்தாமல் சந்தர்ப்பத்தை விடாமல், மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதை கைவிட்டு விடாமல், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என விரும்புகின்றோம்.

எமது அடிப்படைக் கோட்பாடுகளிலோ, கொள்கைகளிலோ எந்தவித விட்டுக்கொடுப்புகளும் இல்லாத நிலையில் எமக்கு அரசியல் தீர்வை நிறைவு செய்வதற்கு நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசு - கூட்டமைப்பு பேச்சு மூலம் இந்த வருட இறுதிக்குள் நல்ல தீர்வு கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.

அவ்வாறு இந்த ஆண்டு முடிவதற்குள் அரசின் பதில்சரியாகக் கிடைக்காவிட்டால் நாம் சர்வதேச அரங்கிலும், எமது மக்கள் மத்தியிலும் கருத்துக்களை முன்வைத்து எம் மக்களை ஜனநாயக ரீதியாக அணி திரட்டி அடுத்த கட்ட நடவடிக்கையில் இயங்கத் தயங்கமாட்டோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நம் இளைஞர் சமுதாயம் மிகவும் கட்டுப்பாட்டுடன் எம்முடன் அணி திரள வேண்டும் என கோருகின்றோம் - என்றார். (ஒ-30)

# கிளிநொச்சி கல்லாறு கிராம மக்களுக்கு ஆஸி. அரசின் 100 வீடுகள் கையளிப்பு



கிளிநொச்சி,செப்.21

கிளிநொச்சி, கல்லாறு கிராமத்துக்கு ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் 'யூ. என். கபிரற்' நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 100 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்லாறு கிராமப் பகுதியில் வீடுகளின்றி வாழ்ந்த 27 பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பத்தினருக்கும், விசேட தேவைக்குட்பட்டவர்களைக் கொண்ட 9 குடும்பங்களுக்கும், வறுமைக் கோட்டுக்குட்பட்ட 64 குடும்பத்தினருக்குமாக மொத்தமாக 100 குடும்பங்களுக்கு கொத்தணி அடிப்படையில் அமைக்கப்பட்ட வீடுகளை ஆஸ்திரேலிய அரச பிரதிநிதிகள் பயனாளிகளிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உரையாற்றுகையில்:

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒன்றரை வருடங்களுக்குள் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர். இதில் மேலதிகமாக முப்பதாயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு, வாழ்வாதார உதவித்திட்டம் என்பன உள்ளதால் இந்த உதவிகளை யூ.என்.கபிரற் நிறுவனமும் ஆஸி அரசும் செய்யும் என எதிர்பார்க்கிறது இந்த மாவட்டம் - என்றார்.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் இணைப்பாளர் ரி.இராசநாயகம், கிளிநொச்சிமாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கண்டாவளை உதவி அரச அதிபர் சத்தியசீலன் மற்றும் என் கபிரற் நிறுவனத்திட்ட இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-323 - 06)

# பிலிப்பைன்ஸ், சுவிஸில் தங்க நகைகள் அணிந்து செல்வதற்கு அனுமதியில்லை

## தமது அனுபவத்தைக் கூறுகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்.மாவட்ட அரச அதிபரின் அண்மைய வெளிநாட்டுப் பயணத்தின்போது தங்க நகைகள் அணிந்து வெளியில் செல்வதற்கு பிலிப்பைன்ஸ் மற்றும் சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அனுமதி மறுக்கப்பட்டதாக அவரே கூறினார். இது தொடர்பாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்ததாவது:

பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தில் இருந்து எனது தங்க நகைகளைக் கழற்றி கைப்பையினுள் வைக்குமாறு சொன்னார்கள். அத்துடன் அங்கு மலையடிவாரக் கிராமம் ஒன்றுக்குச் சென்றபோது காதிலிருந்த தோட்டைக்கூட கழற்றுமாறு சொல்லி விட்டார்கள்.

பின்பு. சுவிஸ் நாட்டுக்குச் சென்றபோதும் அதே நிலைதான். அங்கும் நகைகளைக் கழற்றி வைக்குமாறு சொன்னார்கள். அங்குள்ள பெண்களும் நகைகள் எதனையுமே அணியாமல்தான் உலாவுகின்றனர்.

அந்த நாடுகளில் நகை அணிந்து சென்றால் அபகரித்துச் சென்று விடுவார்களாம். காதில் தோடு மாட்டியிருந்தால் காதோடு அறுத்துக்கொண்டு சென்று விடுவார்களாம். இந்தக் காரணத்தினால் என்னை நகைகளைக் கழற்றி வைக்குமாறு கூறினர்.

தங்க நகை அணிந்து செல்லும் சுதந்திரம் கூட அங்கு இல்லை - என்றார் அரச அதிபர். (ஒ-15)

# தடை உத்தரவு

மத வெறுப்புணர்ச்சியைத் தூண்டுவதாக உள்ள ஃபேஸ்புக் உள்ளிட்ட இணையத் தளங்களை பாகிஸ்தானில் எவரும் பயன்படுத்தாதபடி தடைசெய்யுமாறு லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.நீதிவான் ஷேக் அஜ்மத் சயீத் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.எனினும், கூகுள் மற்றும் இதர தேடுதளங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யவேண்டாம் என நீதிவான் உத்தரவிட்டார்.

# நிகழ்வுகள்

### சுயமுயற்சிக் கடன் வழங்கும் நிகழ்வு

வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்ந்த வித்தகபுரம், நவற்கிரிப் பகுதியைச் சேர்ந்த 42 பயனாளிகளுக்கு இலங்கை வங்கி கிளையினால் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 21 லட்சம் வரை சுயமுயற்சிக் கடன் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.இ.டி. சுமணசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உதவித் தொகையை வழங்கவுள்ளார். (எ)

### இன்று யாழ். மத்திய கல்லூரியில் புலமைப் பூங்கா ஒலிப்பதிவு

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான புலமைப் பூங்கா முதலாவது ஒலிப்பதிவு யாழ். மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில், இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறும்.வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் அலைவரிசைப் பிரிவு, ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் அறிவுத் திறனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.(த)

### முத்தமிழ் விழா

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய உயர் தர [illegible] மன்றத்தால் நடத்தப்படும் முத்தமிழ் விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.இந்த விழாவில், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ)

### கலாசார விழா

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கலாசார விழா எதிர்வரும்24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் நடனம், நாடகம், நாட்டுக் கூத்து, சிந்துநடைக் கூத்து, இசைப் பாடல் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் கலைத்துறையில் சேவையாற்றிய கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறம். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை வழங்கினால் பங்காளிக் கட்சியினர் கைகழுவி விடுவர் என்ற பயம் அரசுக்கு

## இது ஐ.தே.க.வின் கிண்டல்

கொழும்பு, செப். 21

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அரசு வழங்கினால் சர்வதேச மட்டத்திலுள்ள இலங்கைக்கு எதிரான அழுத்தங்கள் தணிந்துவிடும். அதேவேளை, அரசியல் தீர்வு வழங்கினால், அரசுடன் இணைந்துள்ள பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசை கைகழுவி விடுவர் என்பது நிச்சயம். அந்த பயத்திலேயே அரசு தீர்வை இழுத்தடிக்கிறது.

- இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று 'உதயனுக்கு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்க முயற்சித்தபோது தற்போது ஆட்சியிலுள்ள அரசு அதை வழங்கவிடாது கூச்சலிட்டது.

அன்றிருந்த சில பெரும்பான்மை அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக எழும்பினார்கள்; முட்டுக்கட்டை இட்டார்கள்.

ஆனால், இன்று அரசியல் தீர்வை வழங்க அரசுக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு அரசியல் தீர்வு வழங்கப்படும் பட்சத்திலேயே, இலங்கைக்கு எதிராக உள்ள சர்வதேச அழுத்தங்கள் தணியும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

அரசுக்கு அரசியல் தீர்வை வழங்கும் எண்ணம் உள்ளது. ஆனால், அரசுடன் இணைந்துச் செயற்பட்டு வருகின்ற சில பெரும்பான்மை அமைச்சர்கள், கட்சிகளுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கவிடாது முட்டுக்கட்டை இடுகின்றனர். அதனை மீறியும் அரசு, அரசியல் தீர்வை வழங்கினால் அரசுடன் இணைந்துள்ள பங்காளிக் கட்சிகள் அரசை விட்டு விலகிவிடும் என்பது உறுதி - என்றார். (ஒ-சி)

# யாழ். சிறைச்சாலையில் கைதிகள் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.21

சர்வதேச கைதிகள் தின நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய சிறைச்சாலையில் இடம்பெறவுள்ளது.

சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம், சிறையில் உள்ள கைதிகள் உறவுகளுடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. அத்துடன் சர்வதேச கைதிகள் தினத்தை கருவாகக் கொண்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

சர்வதேச சிறைக் கைதிகள் தினம் செப்ரெம்பர் 12 திகதி ஆகும். அன்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் மாத்தளை ஜயசூரிய விளையாட்டரங்கில் சர்வதேச கைதிகள் தின நிகழ்வு இடம்பெற்றது.

அதில் நாட்டிலுள்ள சிறைச் சாலைகளின் உயர் அதிகாரிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கைதிகள் கலந்து கொண்டனர். அதன் காரணமாகவே யாழ்ப்பாண சிறைச்சாலையில் கைதிகள் தினத்தை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14)

# வடக்கின் தேசிய பாடசாலை அதிபர்கள் கல்வி அமைச்சருடன் நேற்று சந்திப்பு

## அபிவிருத்தி குறித்து கவனத்தில் எடுப்பதாக உறுதி

யாழ்ப்பாணம், செப்.21

வடமாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் தேசிய கல்வியியற்கல்லூரிகளினது அபிவிருத்தி மற்றும் கல்வித் தரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்வித்தரம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. அதில் வடமாகாணத்தைச் சேர்ந்த தேசிய பாடசாலைகள், மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி அதிபர்களால் தமது கல்வி நிறுவனங்களின் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அதிபர்கள் பலரும் தமது பாடசாலைகளில் தேவையாகவுள்ள ஆய்வுகூடங்கள், அவற்றுக்கான உபகரணங்கள் மற்றும் ஆசிரியர் வளம் என்பனவற்றை வழங்குமாறு அதிபர்கள் கோரிக்கை விடுத்தனர். வேம்படி பாடசாலைக்கு மாணவர் விடுதி அமைப்பதற்கான கோரிக்கையும் அந்தப் பாடசாலை அதிபரினால் முன்வைக்கப்பட்டது.

இவற்றக்குப் பதிலளித்த அமைச்சர் பாடசாலைகளினது கோரிக்கை தொடர்பிலான அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறு கூறினார்.

### மாணவர் கௌரவிப்பு

அந்தநிகழ்வில் நடந்து முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய ரீதியில் தமிழ்மொழியில் இரண்டாம் இடம்பெற்ற முல்லைத்தீவு நெத்தலியாறு தமிழ் வித்தியாலய மாணவன் ப.சேதுராகவனுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும், வடமாகாண ரீதியில் இரண்டாமிடம் பெற்ற வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி சர்வானந்தன் சர்மிகாவுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வடமாகாண ரீதியில் மூன்றாம் இடம்பெற்ற யாழ். பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த றமேஸ் நிதுசிகா என்ற மாணவிக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் அமைச்சர் பந்துல குணவர்த்தனாவால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார் எம்.பி, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்பட வடமாகாணக் வலய கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஒ-4-311)

## கௌரவிப்பு...





*வடமாகாணத்தில் தரம் - 5 புலமைப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் நேற்று யாழ்.பொதுநூலகத்தில் கௌரவிக்கப்பட்டனர்.*

*இதன்போது வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி சர்மிளா சர்வானந்தன் (புள்ளி-193), யாழ்.புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலய மாணவி நிதுஷிகா ரமேஷ் (புள்ளி-192) ஆகியோர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-323-4)*

ஓம் ஸ்ரீ சாயிராம்

தெய்வத்தின் அரவணைப்பில்

ஆண்டு இரண்டு

அன்னை மண்ணில்: 08.03.1947

இறைவன் அடியில்: 21.09.2009



அமரர் பொன்னுத்துரை

யோகேஸ்வரராஜா

(முன்னாள் உப தலைவர், சாயி நிலையம் - கொக்குவில், முன்னாள் தொழில்நுட்பவியலாளர் - இலங்கை மின்சாரசபை, சீமெந்துக் கூட்டுத்தாபனம், கல்வித் திணைக்களம்)

இல. 12, இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்

# மும்மொழிப் பாடசாலைகள் அதிகரிப்பதன் மூலம் நாட்டின் இன நல்லுறவும் ஒற்றுமையும் மேம்படும்

## யாழ். வந்துள்ள அமைச்சர் பந்துல கூறுகிறார்.

யாழ்ப்பாணம், செப்.21

நாடு முழுவதும் மும்மொழிப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலமாக பல்லின மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்துவதன் மூலமாகவும் நல்லுறவை பேணி எதிர்காலத்தில் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை அதிகரித்தல் வேண்டும்.

இந்தியாவில் ஹைதராபாத்தைப் போல யாழ்ப்பாணத்திலும் கல்வித்தரம் அதிகரிக்கப்பட வேண்டும்.இவற்றை மனதிலே கொண்டுதான் எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க எதிர்பார்க்கிறேன்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார். வடமாகாணத்திலுள்ள கல்வி நிலை அதன் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் யாழ். பொது நூலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

கல்வி அபிவிருத்தி ஊடாகவே எதிர்கால இளைஞர்களின் அறிவு, ஆற்றல், மனோபாவம் என்பவற்றை வளப்படுத்த முடியும். கடந்தகால வரலாற்றைப் பார்த்தால் வடமாகாணம் கல்வித் தரம் உயர்ந்திருந்தது. விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள் என கல்விமான்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகியிருக்கிறார்கள். இவர்கள் சர்வதேச ரீதியில் புகழ் பெற்றிருக்கிறார்கள் இது தொடர வேண்டும்.

இன்று கொழும்பு, கண்டி உள்ளிட்ட பல பாடசாலைகளில் மும்மொழிப்பாடசாலைகள் உள்ளன. நாட்டின் சகல பிரதேசங்களிலும் இவ்வாறான மும்மொழிப்பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

வடக்கு, தெற்கு என வேறுபாடின்றி பல்லின மாணவர்களுக்கு சித்திரப்போட்டி, நடனப் போட்டி, விளையாட்டுப் போட்டி எனப் பல்வேறு போட்டிகள் நடத்தல்வேண்டும் இவற்றின் ஊடாக மாணவர்களின் நல்லெண்ணம், நல்லுறவு என்பன மேம்படுத்தப்படும். இதனூடாகவே எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையேயான ஒற்றுமையை அதிகரிக்கமுடியும் என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அறிவித்தல்
## யாழ். மாவட்டச் செயலகம்

**வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரல் - 2011**

யாழ். மாவட்டச் செயலகத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவீஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்பப் படிவத்தையும் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக் கிளையில் 22.09.2011 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.2.15 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100 உம், மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000 உம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவீஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம் - 2011 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 07.10.2011 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3 மணிக்குக் கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்கள் விவரம்**

* பிக்க வான் கார் ஜீப்
* மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டி உழவு இயந்திரம்
* லொறி பவுசர் திறந்த பாரவூர்தி (Canter)
* ஏனையவை

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(சி/4062)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

1. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன் உள்ள ஒழுங்கையில் 8 பரப்பு நிலத்துடன் சிறிய வீடு விற்பனைக்கு உண்டு.
2. திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் முன் உள்ள கலைவாணி மில் ஒழுங்கையில்,பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் 2½ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

இரா.ஸ்ரீரங்கன்
தொடர்பு: 0773040162

## தொழில் துறைசார் துறையின் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.09.2011 சனிக்கிழமை

* AAT தமிழ், ஆங்கில மொழி மூலம்
* CIMA Scholarship உடன்
* Banking
  - I. CBF
  - II. DBF
  (தமிழ், ஆங்கில மொழி மூலம்)
* Spoken English
* Business English

BRITISH COUNCIL
* IELTS * CAE
* KET * CPE
* PET * TKT
* FCE * A/L English

A/L வர்த்தக, கணித பிரிவுகளும் ஆரம்பம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்)

spectra skills
No.19, Stanly Road,
(2nd Floor People's Bank,Jaffna
T.P: 021 222 1422 / 1423
E.mail: jaffnaspectraskills.com
web: www.spectraskills.com

## கடைகள் விற்பனைக்கு

303, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணத்தில் இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774109151
0777849251
(8399)

GRACE Electricals,
Palaly Road, Urumpirai. & A9 Road, Pala[illegible]
(Near Kondavil Bus Depot)
Ph - 021 2230900

SALE
70% 70% 70%
All Electrical & PVC items
70% 70%

## தவறிவிட்டது

செங்குந்தா லேன்,திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த தற்போது சிவபூமி முதியோர் இல்லத்தில் வசிக்கும் நல்லதம்பி சிவசுப்பிரமணியம் என்பவாது தேசிய அடையாள அட்டை [211400722V] முதியோர் அ.அட்டை [210519542D] என்பன 02.9.2011 அன்று சங்கானையில் தவறிவிட்டன. இதனை கண்டெடுத்தவர்கள் 0213201083 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் 1000 சதுர அடி முதலாம் மாடிக் கட்டடம், அலுவலகம், கல்வி நிலையம், வியாபாரக் காட்சி அறை அமைக்கக்கூடிய வசதியுடன் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0773126712
(சி/4055)

## வேலை ஆள் தேவை

266/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கோல்டன் இராசையா மோட்டோர்ஸ் எனும் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு:0776141928

## பெண் பணியாளர்கள் தேவை

சங்கானை லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்புக்கு கிராபிக் டிசைனர் தேவைப்படுகின்றனர். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
(சங்கானை இலங்கை வங்கிக்கு அண்மையில்)
T.P.No.0212250390

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## வீடு விற்பனைக்கு

கைலாசப்பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதியில் 1 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776146434

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. V.K.அருந்தவநாதன் அவர்களின் மாமன்

**அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்துரை**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி, ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் வ. மணிவண்ணன்
(பதுர்சனா பல்பொருள் வாணிபம்- சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி வடிவேலு புனிதவதி**

அவர்கள் 17.9.2011 காலமாகிவிட்டார். அவருக்கு எமது மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## பார உருளை சாரதி தேவை

வீதி நிர்மாணத் தொழிலில் அனுபவம் வாய்ந்த 45-60 வயதுக்கு இடைப்பட்ட பார உருளைச் சாரதி (றோட்றோலர்) உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:-0773040162

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### சித்த மருத்துவ அலகு
### 2010/2011 கல்வியாண்டுக்கான கற்றல் செயற்பாடு ஆரம்பம்

சித்த மருத்துவ அலகு 2010/2011 கல்வியண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக விழாவும், கற்றல் செயற்பாடுகளும் எதிர்வரும் 26.09.2011 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவ அலகில் ஆரம்பமாகும். அன்று காலை சகல மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பதிவாளர்
19.09.2011

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்
## கேள்வி அறிவித்தல் - 2011

### சாவகச்சேரி பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09,M08) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தலைவர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம், என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள்சமுகமளிக்கலாம்.
5. கேள்விப் படிவம் வழங்கப்படும் ஆரம்பத் திகதி :- 22.09.2011 முற்பகல் 10 மணிமுதல் (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
   * கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி :- 30.09.2011 நண்பகல் 12 மணிவரை
   * கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- 03.10.2011 பிற்பகல் 1.00 மணிவரை
   * கேள்விகள் திறக்கப்படும் திகதி:- அன்றைய தினம் (03.10.2011) பிற்பகல் 2 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
6. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவம் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT+NBT 12%+2% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | வேம்பிராய் மயானத்தில் திண்மக் கழிவு கொட்டும் பகுதிக்குச் சுற்றுமதில் அமைத்தல் | 4500.00 | 750.00 | 105.00 |

தலைவர்
திரு. சிற்றம்பலம் துரைராஜா,
சாவகச்சேரி பிரதேசசபை, தலைமை அலுவலகம், கொடிகாமம்.
21.09.2011

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

**மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கான கூறுவிலை கோருதல்**

யாழ். மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசலகூடங்களையும் அதனுடன் தொடர்புள்ள ஏனையவற்றையும் துப்புரவு செய்வதற்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 2011.09.22 ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்வதுடன், கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நாள்களில் மு.ப.9 மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000 உம் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கான கூறுவிலைகள்" என குறிப்பிட்டு 2011.10.07 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.
(சி/4063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முழுங்கப்படும் மணலாறு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலி ஓயா (மணலாறு) பிரதேச செயலகம் புதிதாக உருவாக்கப்பட்டு விட்டது. அது குறித்து முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய பிரதேச செயலகத்தை உண்டாக்கும் பொறுப்பு முல்லைத்தீவு அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படாமல், அநுராதபுரம் அரச அதிபரிடம் வழங்கப்பட்டது குறித்து இதே பத்தியில் இம்மாதம் இரண்டாம் திகதி சுட்டிக் காட்டி இருந்தோம்.

வெலி ஓயா பிரதேச செயலகப் பிரிவில் தமிழர் கிராமசேவகர் பிரிவுகள் ஏழு உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் குமுழமுனை, தண்ணீர் முறிப்பு, அளம்பில், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், முந்திரிகைக்குளம், தென்னைமரவாடி ஆகிய தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்கள் பலவும், புதிதாக ஜானகபுர சிங்களக் கிராமசேவகர் பிரிவும் வெலி ஓயா பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கொக்கிளாயில் நேற்று சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டதுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழர்கள் மண் பறிப்பு ஏனைய பகுதிகளுக்கும் விரைந்து தொடரும் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டமை போன்று, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் தொடர் நிலப்பரப்பு அல்ல என்ற நிலையை உருவாக்குவதற்கான திட்டத்தின் முதற்படி நேற்று ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

அது மட்டுமன்று, பெருந்தெருக்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் வடக்கையும் கிழக்கையும் இணைத்த தொடர் பிரதேசம் மணலாறு என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கிலிருந்து கிழக்குக்கும், கிழக்கிலிருந்து வடக்குக்கும் தமிழ் மக்கள் பயணம் செய்வதற்கு மணலாறுப் பகுதியையே பயன்படுத்தினர். வடக்கிலிருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரையாகச் செல்லும் முருகன் அடியார்கள் மணலாறு மார்க்கமாக பொத்துவில், திருக்கோவில், வெருகல் வழிநடந்து வேலவனைத் தரிசிப்பது அண்மைக்காலம் வரை நடைபெற்றது.

இந்தப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றி இரண்டு மாகாணங்களையும், பாக்குவெட்டியால் வெட்டுவது போன்று இருவேறு துண்டங்களாக்கிவிட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் வடக்கும் கிழக்கும் ஒரே நிலப்பரப்பு, அதனால் அது தமிழர் தாயகம் என்றெல்லாம் தமிழர்கள் உரிமை கொண்டாட இயலாது என்ற அடிப்படையுடனேயே, கோட்பாட்டுடனேயே, மணலாறு என்ற பெயர் வெலிஓயா என்று மாற்றப்பட்டது.

முந்திய காலத்திலும் சரி, சுதந்திரத்துக்குப் பிந்திய காலத்திலும் சரி மணலாறுப் பகுதியில் சிங்கள மீனவர்கள், வாடிகள் அமைத்து தொழில் செய்து திரும்புவதைச் சாட்டாக, காரணமாக வைத்து, அதன் பெயரை உத்தியோகபூர்வமாக வெலிஓயா ஆக்கியது முன்னர் பதவியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே. தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி இனப்பாகுபாட்டையும், சிங்களவர்-தமிழர்களுக்கிடையில் துவேசத்தைத் துளிர்விடச் செய்ததும் சுதந்திரக் கட்சி அரசே. எவ்வாறாயினும் தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் கபளீகரம் செய்து முன்னுதாரணம் காட்டியது ஐக்கிய தேசியக் கட்சி என்பது அழிக்கமுடியாத சரித்திரம்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள், தமிழர்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை மட்டுமன்றி, அவர்களின் பூர்வீக நில, காணி- பிரதேச உரிமைகளையும் மற்றும் மொழிதொடர்பான உரிமைகளையும் பெரும்பான்மை என்ற பலத்தைப் பயன்படுத்திப் பிடுங்கி எடுத்தன.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் மாநிலம் என்று ஒன்று உருவாக்கப்படுவதற்கு ஒரு துளியேனும் இடங்கொடுக்கக் கூடாது என்ற கோட்பாடு தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளின் இரத்தத்திலும் ஊறிவிட்டது. மொழி உரிமையை அடுத்து நில உரிமையை மிகக்குறிப்பாக வடக்கு-கிழக்கு இணைந்த தாயகப்பகுதி என்று தமிழர்கள் உரிமை கொண்டாட ஒரு சிறுதுளி இடைவெளியும் (Gap) வைக்கக்கூடாது என்ற கோட்பாட்டில் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் மோதகமும் கொழுக்கட்டையும் போன்றவையே.

இந்தியாவின் மத்தியஸ்தத்தோடு, உருவாக்கப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தில், வடக்கு-கிழக்கு இணைந்த மாநிலம் என்று குறிப்பிடக் கூடாது என்று விடாப்பிடியாக நின்று வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கிள்ளித் தெளித்தது அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு. ஆனால் மஹிந்த அரசு, முதன்முறை பதவிக்கு வந்த சில மாதங்களில் சகபாடியான மக்கள் விடுதலை முன்னணியைக் கொண்டு வடக்கு மாகாண சபையையும் கிழக்கு மாகாண சபையையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வித்து அதற்குச் சார்பாக தீர்ப்பையும் பெற்றுக்கொண்டது.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை நிரந்தரமாக்குவதற்கு, ஒரு வருட காலத்துக்குள் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் சிபார்சு குறித்து எந்தக் கட்சி அரசும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் ஒப்பந்தப் பிரகாரம் இணைக்கப்பட்ட மாகாண சபையை நீதிமன்ற உதவியுடன் பிரித்துவிடுவதில் கங்கணம் கட்டி நின்று வெற்றி கண்டாயிற்று.

அதே வழியில் தடம்பதித்து, தனக்குள்ள அத்தனை வலுவான அதிகாரங்களையும் வாளாகக் கையில் ஏந்தி, நில அமைப்பிலும் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகத் துண்டாடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகுத்த வியூகம் வன்மத்துடன் நிறைவேற்றப்படுகிறது. தட்டிக் கேட்க எவருமில்லை என்பதால், அதிகார பலம் மிதமிஞ்சிப் போனதால், தமிழர் பிரதேசம் தொடர்நிலப்பரப்பாக இருக்கும் பூகோள அமைப்பை வெட்டித் துண்டாடி முழுங்கும் படலம் ஆரம்பமாகி விட்டது; அவ்வளவு தான்!

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி, முற்றிக் கனியாகும் வாய்ப்பு உண்டாகும் பெருங்கால இடைவெளிக்குள், செயற்கையான புவியியல்சார் மாற்றுகை கச்சிதமாக முற்றுப் பெறப்போகிறது. ஐயகோ! தமிழினமே நீ என் செய்வாய்?

# பிளேக்கின் வருகையை எதிர்த்ததன் மூலம் அமைச்சரவைப் பொறுப்பை மீறியுள்ளார் டக்ளஸ்

## சரவணபவன் எம்.பி குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், செப்.21

தெற்காசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கின் வருகையை எதிர்த்ததன்மூலம் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீறியுள்ளார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். வலி மேற்கில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அமெரிக்காவின் மத்திய தெற்காசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து போருக்குப் பின்னான நிலைமைகள் தொடர்பாக பல கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் அபிப்பிராயங்களையும் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக வடபகுதியில் மேற்கொண்ட சந்திப்புக்களின் போது அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு குழுவினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு போருக்குப் பின்னான வட பகுதியின் நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்துகொண்டார்.

அவர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமெரிக்க நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை மேற்கொள்ளவிருந்தபோது அந்த நிலையத்தின் முன்பு ஈ.பி.டி.பியினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு சில பொது மக்கள் வாகனங்களில் கொண்டுவந்து சுலோக அட்டைகள்சகிதம் இறக்கப்பட்டனர். ஆனால் ரொபேர்ட் ஓ பிளேக் அந்த நிலையத்துக்கு விஜயம் செய்வதைத் தவிர்த்துவிட்ட காரணத்தால் அவர்கள் மேற்கொள்ளவிருந்த ஆர்ப்பாட்டம் பயனற்றுப் போய்விட்டது.

எனினும் அங்கு இடம்பெறவிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக அவருக்கு ஊடகவியலாளர்களால் முன்வைக்கப்படவிருந்த பயனுள்ள கருத்துக்களை அவர் அறிவதற்கான வாய்ப்பு கீழ்த்தரமான முறையில் ஈ.பி.டி.பி.யினரால் தடுக்கப்பட்டு விட்டது. இது அப்பட்டமான ஒரு ஜனநாயக விரோத-மக்கள் விரோத நடவடிக்கை என்றே நாம் நம்புகின்றோம்.

ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி இன்னொரு நாட்டின் ஒரு பிரதேசத்துக்கு விஜயம்செய்யும் போது அவரை வரவேற்பது அந்தப்பகுதி மாநகர முதல்வரால் சம்பிரதாய பூர்வமாகப் பின்பற்றப்படும் அரசியல் மரபாகும். ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மாநகர முதல்வரான திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள் ரொபேர்ட் ஓ பிளேக் அவர்களைச் சம்பிரதாய பூர்வமாக வரவேற்காது மட்டுமின்றி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு மக்களை ஏற்றி வருவதற்கு மாநகர சபைக்குச் சொந்தமான பேருந்தையும் வழங்கியிருந்தார்.

இதன் மூலம் ஈ.பி.டி.பியினர் தங்கள் அரசியல் அராஜகத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதில் கேள்விக்குரிய விடயம் என்னவெனில் அங்கு கொண்டுவந்து இறக்கப்பட்ட பெண்களுக்கு ஏன் அங்கு கொண்டுவரப்பட்டனர் என்பது தொடர்பாகத் தெரிந்திருக்கவில்லை. காரணம் கூறப்படாமலும் பலவந்தமாகவும் நாம் ஏற்றப்பட்டதாக சில பெண்கள் தெரிவித்தது மட்டுமின்றி, பத்திரிகையாளர்கள் படம் பிடித்தபோது தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டனர். இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட அறிக்கையில் ரொபேர்ட் ஓ பிளேக் தமிழ்ப் பெண்களை அவமானப்படுத்தி விட்டார் எனத் தெரிவித்தார். எப்போது நடந்தது எனக் கேட்கப்பட்டபோது சில மாதங்களுக்கு முன்பு என அவர் தெரிவித்தார். சில மாதங்களுக்கு முன்பு அப்படி ஒருகருத்து வெளியிட்டிருந்தால் அப்போது ஒரு சிறு எதிர்ப்பு அறிக்கையைக் கூட வெளியிடாத அமைச்சர் இப்போது துணை இராஜாங்கச் செயலர் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாட வந்தபோது மட்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துகிறார் என்றால் அவரின் உள்நோக்கம் தமிழ்ப் பெண்கள் மீதான அக்கறையின்பாற்பட்டதல்ல என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இந்தமுறை இடம்பெற்ற துணை இராஜாங்கச் செயலரின் விஜயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகப் பயனுள்ளதாகவே இருந்தது. மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, அமைதி வாழ்வு, என்பன தொடர்பாக அரசு சர்வதேச அளவில் மேற்கொண்டு வரும் பரப்புரைகளின் உண்மைத்தன்மை பற்றி அவர் பலதரப்பினருடனும் கலந்துரையாடினார். நேரிலும் கண்டுணர்ந்துள்ளார். துணை இராணுவக் குழுக்களின் அடாவடித்தனங்கள் பற்றியும் புரிந்துகொண்டிருந்தார்.

மேலும் அவர் ஊடகவியலாளர்களிடம் பல விடயங்களையும் கேட்டறியும் வாய்ப்பை ஈ.பி.டி.பி.யினர் தடுத்ததன் மூலம் தங்கள் தமிழ் மக்கள் விரோத நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதுடன் இலங்கை அரசின் ஒடுக்குமுறைகள் அம்பலப்படுத்துவதற்கும் இடையூறு விளைவித்துள்ளார்.

ஆனால் ரொபேர்ட் ஓ பிளேக் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் வெளியிட்ட கருத்துக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நயவஞ்சக முயற்சி தோல்வியடைந்து விட்டது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் அவர் இந்தியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இராணுவ முகாம்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அங்கு மீள்குடியேற்றவும், இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணவும் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநிறுத்த பயனுள்ள வகையில் முயற்சிகள் மேற்கொள்ளவும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்ப்பு நடவடிக்கை அவரின் தமிழர் விரோதப் போக்கையும் அரச தரப்பை மனம் குளிர வைக்கும் நிலைப்பாட்டையும் அம்பலப்படுத்தியதே தவிர வேறு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை இந்தியாவில் ரொபேர்ட் ஓ பிளேக் வெளியிட்ட கூற்றுக்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

அமைச்சரவையின் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ரொபேட் பிளேக்கின் விஜயத்துக்கும் அவர் வெளியிட்ட கருத்துக்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். அதே அமைச்சரவையைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா துணை இராஜாங்கச் செயலரைக் கண்டித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவால் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்பது எந்தளவு தூரம் அலட்சியப்படுத்தப்படுகின்றது என்பதை இதன் மூலம் நாம் புரிந்துகொள்ளமுடியும்.

எப்படியாயினும் மக்கள் விரோத சக்திகள் காலப்போக்கில் மக்களால் நிராகரிக்கப்படுவதும் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்படுவதும் தவிர்க்கமுடியாததாகும் என்றார்.

(து)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலாபத்தை மட்டுமல்ல சுகாதாரத்தையும் பேக்கரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்

## 20 ஆவது ஆண்டு விழாவில் சங்கத்தலைவர்

யாழ்ப்பாணம்,செப்.21



பேக்கரிகள் இலாப நோக்கத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படாமல் பொது மக்களின் சுகாதார நலன்களைக் கருத்தில் கொண்டு தமது பேக்கரி சேவைகளை நிறைவேற்றவேண்டும் என யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் இ.பேரின்பநாயகம் கேட்டுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு தின விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தும்போது அவர் இந்த வேண்டுகோளை பேக்கரி உரிமையாளர்களுக்கு விடுத்தார். அத்துடன் யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரிகள் தாய்ச் சங்கத்துடன் தொடர்புகொண்டு மாவினைப் பெறு வதன் மூலம் சங்கத்தை மேன்மேலும் வளர்ப்பதற்குத் தூண்டுதலாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும் அவர் இங்கு முன் வைத்தார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை வடமராட்சி கிளைத் தலைவர் ம.சண்முகநாதனும் நன்றியுரையை யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கா. பாஸ்கரனும் நிகழ்த்தினர். அத்துடன் சங்கத்தின் அங்கத்தவர்கள் பலர் தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

நிகழ்வை முன்னிட்டு சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பேக்கரிகளின் உரிமையாளர்கள், சங்கக் கிளைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-313)

# சகுனப் பிழை காரணமாக போதிய வருமானம் இல்லை

## மண்டைதீவு மீனவர் வருத்தம்

யாழ்ப்பாணம், செப்.21

அதிகாலையில் தமது தொழிலுக்காக வீட்டில் இருந்து புறப்படும் மண்டைதீவு மீனவர்கள் சகுனப்பிழை காரணமாகத் தொழிலில் போதிய வருமானம் கிடைப்பதில்லை என வருத்தப்படுகின்றனர்.

மண்டைதீவில் குடிதண்ணீத் தட்டுப்பாடு உள்ளமையால் அங்குள்ள குடிதண்ணீர் தொட்டிகளின் முன்பாகப் பெருமளவு வெற்றுப் பாத்திரங்கள் அதிகாலை வேளையில் வைக்கப்பட்டு விடுகின்றன.

வீடுகளில் உள்ளவர்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுவதற்காக முதலில் இடம்பிடிக்க வேண்டும் என்பதற்காக தண்ணீர் விநியோகத் தொட்டிகளின் முன்பாக அதிகாலையிலேயே வெற்றுக் குடங்களையும் பாத்திரங்களையும் வைத்து விடுகின்றனர்.

இந்த நிலையில் அதிகாலை தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தாங்கள் வெற்றுக் குடங்களில் விழித்தே தொழிலுக்குச் செல்வதாகவும், இதுவே தமது வருமானக் குறைவுக்குக் காரணம் என்றும், எனவே விநியோக நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

# கெற்பேலி அ.த.கவில் முதல் முறையாக மாணவி சித்தி

தென்மராட்சி, செப்.21

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கெற்பேலி அ.த.க பாடசாலை வரலாற்றில் (50 வருடங்களுக்கு மேல்) ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவியொருவர் சித்தி பெற்றுள்ளார்.

ஸ்ரீஸ்கந்தராசா ஜேந்தினி என்னும் மாணவி புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காகப் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மாணவியைப் பரீட்சையில் சித்திபெற ஊக்குவித்த ஆசிரியை மு.விஜியையும் இந்த நிகழ்வில் கௌரவிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிபர் மு.நடேசலிங்கம் தெரிவித்தார். (த-207)

## தொடக்கம்...



*சரியான பாதையில்:- வேலணைப் பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வேலணை பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் சி.சிவராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (த-7)*

# கொழும்புத்துறை சென்.ஜோசப் 150ஆவது ஆண்டு விழா இன்று

யாழ்ப்பாணம், செப்.21

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் பா.வின்சென்ற் தலைமையில் வணபிதா.கி.பொஞ்சீன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் வே.தி. செல்வரட்ணம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு.றோய் பேர்டினன்ட், வண.பிதா.பே.ப.பிலிப் அ.ம.தி, நுவரெலியா மறைக் கோட்ட முதல்வரும் ஹற்றன் பிரிவுப் பங்கு தந்தையுமான வண. பிதா.க.நேரியோ ஏபிரகாம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக கலை நிகழ்வுகள் இடம்பெறும். 150 ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசளிப்பும் இடம்பெறும். (த-23)

# தீவகத்தில் மக்கள் அடர்த்தியாக வாழும் அனைத்து வீதிகளுக்கும் மின் குமிழ்கள்

## பிரதேசசபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.21

புங்குடுதீவு, நயினாதீவு உட்படபிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் அடர்த்தியாக உள்ள வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்துவது என்று வேலணைப் பிரதேச சபையின் முதல் அமர்வின்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் தலைவர் சி.சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

வேலணைப் பிரதேசத்தின் ஒவ்வொரு பகுதியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அனைத்து தேவைகளிலும் நாம் ஒற்றுமையுடன் இணைந்து முழுக் கவனத்தையும் செலுத்தி அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். பிரதேசத்தின் நலனில் அக்கறையுள்ள மக்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கவனத்தில் எடுத்துப் பரிசீலனை செய்து ஆவன செய்வோம் -என்றார் தலைவர்.

மண்டைதீவில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. குடிதண்ணீர், மின்சாரம் போன்ற முக்கிய விடயங்கள் இன்னமும் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரி வசதிகளும் இல்லை. இவை குறித்து முழுமையான நடவடிக்கைகள் தேவை என உறுப்பினர்கள் ஒரு மனதாக பிரேரித்தனர். மண்டைதீவுப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் அங்கு கூறப்பட்டது.

வரட்சிக் காலங்களில் பொது மக்களுக்கு பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலணைப் பிரதேசத்தில் வரட்சிக்காலங்களில் போதிய அளவு தண்ணீர் கிடைக்காததினால் யாழ்ப்பாணத்தில் ஒரு காணியைக் கொள்வனவு செய்து எமது பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கக்கூடிய வசதிகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனச் சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபை எல்லைக்குள் தற்சமயம் ஆழமாக்கி அணைக் கட்டுப் போடப்படும் மூன்று குளங்களுக்குமான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஆளுநரின் அறிவுறுத்தலின்படி இதற்கான செலவுகள் தற்போது பிரதேச சபையால் வழங்கப்படுகின்றன. ஏற்படும் செலவினங்களை ஆளுநர் பிரதேச சபைக்கு வழங்குவதாகக் கூறியுள்ளதால் அதற்கான உறுதிக் கடித்ததைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத்தீர்மானங்கள் அனைத்து உறுப்பினர்களினாலும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. (எ-07)

# புனரமைப்பின்றி மண்டைதீவு உப அலுவலகம்

யாழ்ப்பாணம், செப்.21

வேலணைப் பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகம் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளதாகவும், இதனால் பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் வேலணைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.மேற்படி உப அலுவலகம் மண்டைதீவில் யுத்த நடவடிக்கைகள் இடம்பெற்றபோது சேதமடைந்தது. எனினும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. (த-7)

# தம்பாலை வீதி மோசமான நிலையில்

யாழ்ப்பாணம், செப்.21

அச்சுவேலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பாலை, இடைக்காடு வீதி புனரமைக்கப்படாமையால், அந்தப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல சிரமங்களை எதிர் கொள்ளவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புப் பணிகளும் இன்றி, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியை அதிகளவான மாணவர்களும் அரச ஊழியர்களும் பயன்படுத்துகின்றனர். வீதி சீரின்மையால் இடைக்காடு, வளலாய் பிரதேசங்களில் உள்ள பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலை செல்ல முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழைகாலத்தில் இந்த வீதிகளில் உள்ள பெரிய குழிகள் குளம் போல் காட்சி தருகின்றன. இதனால் பெரிய வாகனங்கள் செல்வதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அடுத்து வரும் மழைகாலத்துக்கு முன் இந்த வீதிப் புனரமைப்பினை மேற்கொண்டு மக்களின் சிரமங்களை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

# பனம் பொருள் விற்பனை நிலையம் வேலணையில் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், செப்.21

வேலணையில் அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்துவைப்பதாக உறுதி அளிக்கப்பட்ட போதும் குறிப்பிட்ட விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் இன்னமும் மேற் கொள்ளப்படவில்லை என வேலணைப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மாதங்களுக்குள் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படும் என்று ஜூன் மாதத்தில் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் குறிப்பிட்டிருந்ததாக வேலணை வர்த்தக சங்கத் தலைவர் க.ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

பனைவள உற்பத்திகள் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது குறைந்தே காணப்படுகின்றன.

கடந்த காலங்களைப் போன்று பனைவள சார்ந்த பயிற்சி நெறிகளும் தற்போது இடம் பெறுவதில்லை.

இந்த நிலையில் தென் பகுதி மக்கள் கூடுதலாக வந்து செல்வதால் பனை வளங்களைப் பயன்படுத்தக் கூடியதான பயிற்சி நெறிகளை வழங்கவும், விற்பனை நிலையத்தை ஆரம்பிக்கவும் நடவடிகை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாண்டு வருமானம் 5 லட்சம் ரூபாவை விஞ்சினால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

## இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.21

காலாண்டுக்கு 5 லட்சம் ரூபாவை விஞ்சும் வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கான வரியைக் காலதாமதமின்றிச் செலுத்த வேண்டும் என யாழ்.பிராந்திய உள்நாட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மொத்த, சில்லறை வர்த்தகர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த மொத்த விற்பனை வரி கடந்த வருடம் முதல் நீக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை வர்த்தகர்களும், வரி செலுத்துவோரும் அறிவார்கள்.

காலாண்டுக்கு 5 லட்சத்துக்கு விஞ்சும் வருமானத்தை உடைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியைச் செலுத்த வேண்டும். மொத்த விற்பனை வரிக்குப் பதிவு செய்தவர்கள் இந்தப் புதிய வரிக்குப் பொறுப்புடையவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

எனவே எந்தவித காலதாமதமுமின்றித் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிக்குப் பதிவு செய்து உரிய வரிக் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை, எமது திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலர்கள் வரி செலுத்துவதற்குப் பொறுப்பானவர்களை இனங்காணும் வகையில் வர்த்தக நிலையங்களுக்கு வருகை தருவார்கள். எனவே இது தொடர்பில் ஏற்கனவே வரி செலுத்துபவர்கள் உரிய ஆவணங்களை ஒழுங்காகப் பேணி வைத்திருக்க வேண்டும் - என்றார் அவர். (த-14)

# நோய் அபாயத்தை ஏற்படுத்தும் கழிவுப் பொருள்கள் நவாலியில்

யாழ்ப்பாணம், செப்.21

நவாலி தெற்கு கொத்துக்கட்டிப் பகுதியில் மக்கள் வாழும் குடியிருப்புப் பிரதேசத்துக்கு அருகில் உள்ள கேணியடியில் நோய் அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டுள்ளன.

வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைக் காடுகளுக்குள் இந்தக் கழிவுகள் வகைதொகையின்றி கொட்டப்பட்டுள்ளன.

அங்கு கொட்டப்பட்ட கழிவுகளிலிருந்து உருவாகும் பெருமளவிலான கிருமிகள், டெங்கு நுளம்புகள் என்பனவற்றால் நவாலிப் பிரதேச மக்கள் பெரும் நோய் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 6 மாத காலமாகத் தொடர்ச்சியாகக் கொட்டப்பட்டு வரும் இந்தக் கழிவுகளால் நவாலி கொத்துக்கட்டி, கேணியடிப் பிரதேச மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகின்றது.

பிரதேச சபையின் பராமரிப்பு இன்றி சுமார் 200 வருடம் பழைமை வாய்ந்த இந்தக் கேணியும் முற்றாக அழிவு அடைந்துள்ளது.

மேற்படி கேணிக்குள்ளேயும் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளமையால் அந்தபகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான கால்நடைகள் தாகம் தீர்ப்பதற்காகக் கேணியைப் பயன்படுத்த முடியாது தவிப்பதாகவும் அந்தபகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மேற்படி கொத்துக்கட்டி கேணியடி திண்ம கழிவு தொடர்பாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டபோதும் இதுவரை அந்த விடயத்தில் கவனம் செலுத்தப்படவில்லை எனவும் கூறப்பட்டது. (த-302)

# யாழ். சிறைச்சாலையில் கைதிகள் சந்தோஷ நிகழ்வு

## றோட்டறிக்கழக ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். சிறைச்சாலையில் உள்ள 300 கைதிகளின் நலன் பேண் சந்தோஷ நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

யாழ். நகர மைய றோட்டறிக் கழகமும், சுன்னாகம் றோட்டறிக் கழகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளதாகத் திட்டத் தலைவி செல்வி நளாயினி பெருமாள்தேவர் தெரிவித்தார். யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் வகையிலான நிகழ்வுகளும் சிற்றுண்டி பரிமாறும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-302)

## தொழில் தேடி...




வழிகாட்டல்: தேசிய தொழில்வாய்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான கலந்துரை யாடலொன்று யாழ்.'கிறீன் கிறாஸ்' ஹொட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் டியூ.குணசேகர உரையாற்றுகிறார். அருகே மனிதவள மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் மஹிந்த மடிவேவ, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சர்வதேச தொழில் ஸ்தாபன இலங்கைக்கான பணிப்பாளர் லுவான் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டோரும். (த-42)

# ராஜன் கதிர்காமர் மறைவுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராகக் கடமையாற்றி முன்னைநாள் அதிபர் அரசரட்ணம் கதிர்காமர் (ராஜன்) கடந்த 17 ஆம் திகதி கனடாவில் காலமானார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் கல்லூரியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு மிகக் கடுமையாக உழைத்தவர் ராஜன் கதிர்காமர் எனக் கல்லூரிச் சமூகம் தெரிவித்துள்ளது.

கடந்த கால அர்ப்பணிப்புள்ள சேவைக்கு நன்றி செலுத்தும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் இந்த நன்றி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இதில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்லூரி பணிப்பாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் நன்றி செலுத்தவுள்ளனர். (த-302)

# வலி.வடக்குக்கு அமெ.அதிகாரிகள்

அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலர் றொபேர்ட் ஓ பிளேக்குடன் வருகை தந்த அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இந்த மாதம் 13 ஆம் திகதி யாழ்.மாவட்டத்துக்கு அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலர் றொபேர்ட் ஓபிளேக் வருகை தந்தார். இதன்போது அவருடன் வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் யு.எஸ்.எயிட் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மக்கள் மீளக் குடியமர்ந்த வலி.வடக்குப் பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

நகுலேஸ்வரம், இளவாலை வடமேற்கு, தந்தை செல்வாபுரம் ஆகிய இடங்களுக்கு இவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர். அங்கிருந்த மக்களையும் இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்பு தெல்லிப்பழை பிரதேச் செயலர் எஸ்.முரளிதரனுடன் அவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது தொல்லிப்பழை பிரதேச செயலரால் அங்குள்ள மக்களின் வீட்டுத் தேவைகள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. நிரந்தர வீடுகள் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவேண்டும் என்றும், 1,300 வீடுகள் வரை கூரை மட்டும் இல்லாமல் இருப்பதால் அவற்றைத் திருத்தி அமைப்பதற்கான உதவிகள் வழங்க வேண்டும் என்றும் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டார். (த-15)

# நள்ளிரவில் வீட்டுக்குள் நுழைய முயன்ற பொலிஸாரை மடக்கிய மக்கள்

## நெடுந்தீவில் நேற்று முன்தினம் சம்பவம்

நெடுந்தீவு, செப்.21

நள்ளிரவு வேளை வீட்டுக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைப் பொது மக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் நெடுந்தீவில் இடம்பெற்றது.

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தில் உள்ள ஜோர்ஜ் ஆனந்தராஜா இந்திராதேவி என்பவரது வீட்டினுள்ளேயே நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் பொலிஸ் உத்தியோகத்தர் நுழைய முயன்றபோது பொது மக்களிடம் மாட்டிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இந்த பொலிஸ் உத்தியோகத்தரைப் பிடித்த மக்கள் மீண்டும் அந்தப் பொலிஸ் நிலையத்திலேயே ஒப்படைத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வீட்டுக்காரரான இந்திராதேவியின் உறவினர் ஒருவர் தெரிவித்தவை வருமாறு:

நள்ளிரவு வேளை நாய்கள் தொடர்ந்து குரைத்த வண்ணமிருந்தன. வீட்டினுள்ளே உறங்கிக்கொண்டிருந்த இந்திராதேவி, அவரது இரண்டு பிள்ளைகள் ஆகியோர் நாய்கள் குரைக்கும் திசையை அவதானித்தனர்.

அப்போது வீட்டு முற்றத்தில் உள்ள விளாத்தி மரத்தின் கீழே ஒருவர் நடமாடுவதை அவர்கள் அவதானித்தனர். உடனே அவர்கள் கூக்குரலிட்டனர்.

இதனையடுத்து அயலில் உள்ள நாங்கள் சம்பவ இடத்தை நோக்கி ஓடிச் சென்றோம். இதன்போது அங்கு நின்ற நபர் ஓடித்தப்ப முயன்றார். எனினும் பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்தனர். அப்போது அவர் நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரியவந்தது.

அவர் சேட் எதுவும் அணியவில்லை. கறுப்புநிற ஜீன்ஸ் மட்டுமே அணிந்திருந்தார். அவர் பொலிஸார் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் அன்று இரவே அவரை ஒப்படைத்து விட்டோம் - என்றார்.

பாதுகாப்புக் கருதி தனது பெயர் விவரங்களைப் பத்திரிகைக்குக் கொடுக்க வேண்டாம் என அவர் எங்களிடம் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

எமது பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் அந்தப் பகுதியில் சிறு குழப்பம் ஒன்று ஏற்பட்டது. சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் வீதியோரமாக நின்று தொலைபேசி கதைத்துக் கொண்டிருந்த போதே இந்தக் குழப்பம் ஏற்பட்டது - என்று தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கச் சென்றவர்களைக் கடமையிலிருந்த பொலிஸார் மிரட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கடமையிலிருக்கும்போது மதுபானம் பாவித்துள்ளார். அதனால்தான் என்ன செய்வது என்று தெரியாமல் அவர் இப்படி நடந்துள்ளார். எனவே இதனைப் பெரிதுபடுத்த வேண்டாம், பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டாம் என அங்கிருந்த பொலிஸார் கடுமையாக மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
21 செப்ரெம்பர் 2011புதன்கிழமை

# மக்களுடைய ஆணையை மீறி தமிழ்க் கூட்டமைப்பு நடக்காது

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார்

அம்பாறை, செப்.21

எந்த விடயத்திலும் மக்களுடைய ஆணையைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு மீறி நடக்காது; எந்தப் பொறிக்குள்ளும் அது சிக்கவும் மாட்டாது - இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட அரசியல் அலுவலகம் நேற்று முன்தினம்பாண்டிருப்பு -நற்பிட்டி முனை பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பணிமனைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வில்லியம் தோமஸ் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சுமந்திரன்தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பியசேன தமிழ் மக்களுக்கும் கட்சிக்கும் துரோகமிழைத்துச் சென்றதன் பின்னர் அம்பாறை மாவட்டத்துக்கு நாம் வருகை தந்து கட்சி முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட பணி மனை ஒன்றை இங்கு திறந்து வைக்கவேண்டு மென ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எமது எட்டு மாவட்டங்களிலும் பத்து பணிமனைகளை திறக்க முடிவெடுத்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் இரண்டு, அம்பாறையில் இரண்டு ஏனைய மாவட்டங்களில் தலா ஒன்று என்ற அடிப்படையில் கட்சியின் மாவட்டப் பணி மனைகளைத் திறப்பதற்கு உத்தேசித்துள்ளோம். இதில் முதலாவது பணிமனை கல்முனையில் திறந்து வைக்கப்படுகிறது.

எடுத்துக் காட்டாகவும், முன்னோடியாகவும் இப்பணிமனை திகழ்வதுடன் இளைஞர்களது அபிலாசைகளும் இப் பணி மனை மூலம் நிறைவேற்ற வேண்டும். இது தவிர இன்று ஊடகங்கள் விநோதமான விடயங்களை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசோடு ஒரு பேச்சை நடத்தியது. அந்தப் பேச்சு முன்னேற்றம் இல்லையெனச் சொல்லியவுடன் நாங்கள் அதனை இடைநிறுத்தி அரச நிலைப்பாட்டை, அவர்களுடைய பதிலைத் தந்தால் தொடர்ந்து பேசுவோமெனச் செல்லியிருந்தோம். அந்த அடிப்படையில் திரும்பவும் நாங்கள் பேச்சை ஆரம்பித்திருக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேச வேண்டும்; அந்தப் பேச்சின் இறுதி முடிவைத்தான், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் முடிவாக நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று தெட்டத் தெளிவாக சர்வதேச சமூகம் தெரிவித்து விட்டது

இவ்வேளையில் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறைந்து கிடக்கும் பொறிக்குள் விழப் போகின்றது; அதனை நாங்கள் காப்பாற்றி விட வேண்டும், பொறிக்குள் சிக்கப்போகிறார்கள் என்று தீடீரென அங்கலாய்க்கின்றனர்.

இவர்களது நற்சிந்தனைக்கு நன்றி கூறும் அதேவேளை இப்படியான எந்தவித பொறிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிக்காது என்பதையும் எடுத்துக் கூறவிரும்புகின்றோம்.

இன்று தமிழ் மக்களுடைய பிரதி நிதிகளாக சர்வதேச சமூகமே கூட்டமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை அரசு கூட புறக்கணிக்க முடியாத அளவுக்கு, மக்களுடைய வாக்குப் பலத்தினால், தமிழ் மக்களுடைய அபிலாசைகளை எடுத்துக் கூறத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலம் பெற்றுள்ளது.

எனவே நாங்கள் செய்யும் கரு மங்களைப் பொறுப்போடு செய் வோம். முதிர்ச்சியடைந்த, காலா காலமாக நீங்கள் அறிந்த தலை வர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்குகின்ற கட்சி தான் நமது கட்சியாகும். விசேடமாக இளைஞர்கள் அணி திரண்டு கட்சிக்கு மெருகூட்டி மேலும் வலுவடை யச் செய்ய வேண்டும்.- என்றார்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன், முதன்மை வேட்பாளர் கு.ஏகாம்பரம் ஆகியோரும் உரையாற்றினர். (ம-30)

# நோயாளரிடம் விசாரணைக்காக பொலிஸாரை அனுப்பவும்

யாழ்ப்பாணம், செப்.21

பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டிய நோயாளர்ளை வேலணைப் பிரதேச வைத்தியசாலைக்கு ஊர்காவற்றுறை பொலிஸாரை அனுப்பி வைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியைக் கேட் டுள்ளார்.

வேலணைப் பிரதேசத்தில் குடும்பத் தகராறுகள் காரணமாக ஏற்படும் காயங்கள் தொடர்பாக வைத்தியசாலைக்கு வருபவர்களை வைத்திய சட்டப்படி விசாரணைக்கு உட்படுத்த பொலிஸார் வருகை தராமையினால், சம்பந்தப்பட்டவர்களை வீடுகளுக்கு அனுப்ப முடியாத நிலை உள்ளது.

விசாரணை செய்த பின்னரே அவரை அனுப்ப வேண்டி உள்ளதால் பொலிஸாரின் வருகை அவசியம் என்று வேலணைப் பிரதேச வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ-7)

# ஆலயத்துக்கு தேர்த் தரிப்பிடம்

சுழிபுரம், செப்.21

சுழிபுரம், பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய புதிய தேர் அமைப்பதற்காக தரிப்பிட கொட்டகைக்கான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. தேருக்கு அச்சு வைக்கும் வேலைகள் அடுத்த மாதத்தில் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (வ-28)

# தென்மராட்சி கல்வி வலயத்துக்கு மின் பிறப்பாக்கி

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு 5 கே.வி வலுவுடைய மின்பிறப்பாக்கி மாகாணக்கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தினமும் மின் தடை ஏற்படுவதால் வலயக் கல்வி அலுவலகச் செயற்பாடுகள் தாமதமடைவதாகத் தகவல் வெளிவந்ததையடுத்து புதிய மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-207)

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வேதன முரண்பாடுகள் வெளிவந்தன

## அதிகாரிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம்,செப்.21

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையால் முரண்பாடான வேதனங்கள் வழங்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வடிகால் அமைப்புச் சபையின் கீழ் வெளிநாட்டு நிதி உதவித்திட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பெரியளவில் குடி தண்ணீர்த் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் குறிப்பிட்ட அதிகாரிகள், பொறியியலாளர்கள், நிபுணர்கள், முகாமையாளர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட (MS-33(1)) சுற்று நிருபப் படியும்-

ஏனைய அலுவலர்கள், பொறியியலாளர்கள், நிபுணர்களுக்கு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை சுற்று நிருபப்படியும் வேதனம் வழங்கப் பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த வேதனப் பாகுபாட்டு விடயம் அதிகாரிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி வேதனப் பாகுபாட்டினால் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் தமது வேதன பாகுபாடு குறித்து தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின்மேலதிகபொது முகாமையாளர் (திட்டம்) ஊடாகப் பொது முகாமையாளருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் கொண்டு வருவ [illegible] துரிதமாக மேற்கொண்டுள்ளனர். (வ-302)

## வாடகைக்கு



மிகவும் குறைந்த விலையில் அதி நவீன சொகுசு கார்கள் வாடகைக்கு விடப்படும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கும் கிடைக்கும்.
தொடர்பு: 0771698711

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சென்ஜோன்ஸ் பொஸ்கோவில் தரம் 5 இல் கல்வி பயின்று புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்ற

*சத்தியவரதன் குகப்பிரியன்*

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
வே.துவாரகா, வே.துஷ்யந்தன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய மாணவன்

செல்வன் கண்ணதாஸ் சுடரோன்



2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகள் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தில் சித்தி பெற்றமைக்காக அவரைப் பாராட்டி கல்வியில் மேன்மேலும் உயர்க என வாழ்த்துகிறோம்.

அத்துடன் இவருக்குக் கல்வியூட்டிய நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய அதிபர், ஆசியர்களையும், ஆரம்பக் கல்வி புகட்டிய முல்/ தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

கல்யாணிப் பெரியம்மா (கனடா)
அமிர்த வர்ஷினி பெரியம்மா (நோர்வே)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய அதிபராக 15.09.2011 அன்று கடமையைப் பொறுப்பேற்ற தாவடியின் மைந்தனாகிய

*திரு.நாகலிங்கம் சிவநேசன்*

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவ்துடன் உளம் மகிழ்ந்து வரவேற்கின்றோம்.

*தாவடி,*
*கொக்குவில்.*

பாடசாலைச் சமூகம்
யா/ தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

## அகவை 90 இல் பிறந்தநாள் வாழ்த்து

திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம்



சுன்னாகம் தவஶ்ரீ செல்லாச்சி அம்மையாரின் அன்புப் பேர்த்தியும் T.S. முதலியார் விவேகசிந்தாமணிப் பிள்ளையின் ஏக புத்திரியுமான தெய்வநாயகி சுப்பிரமணியம் இன்று (21.09.2011) தனது 90 ஆவது அகவையில் பாதம் பதிக்கின்றார்.

அவரை இறைவன் அருளால் எல்லா நலனும் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

19, கடவைப்புலம்,
சுன்னாகம்.

வாழ்த்துவோர்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
ஆருஜன், ஷாருணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## கட்டைப் பஞ்சாயத்தை நடத்தும் உரிமை அமைச்சருக்கும் உண்டா?

அமைச்சர் மேர்வின் சில்வாவின் அதிரடி நடவடிக்கையால் சிலாபம், முன்னேஸ்வரம் காளி அம்மன் கோவிலில் பலியிடப் படவிருந்த ஆடுகளும், கோழிகளும் உயிர்பிழைத்தன. அவற்றை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்காக எடுத்துச் சென்றபோதும் அவை அங்கு ஒப்படைக்கப்படவில்லை. யாருடைய பசியை அவை ஆற்றிற்றோ? அம்மனுக்கே வெளிச்சம். அவற்றை யால, வில்பத்து சரணாலயங்களில் விட்டு விட்டோம் என்று அவர் கதை விடக்கூடும்.

சார்ள்யுங் என்ற உளவியலறிஞர் கூட்டு நனவிலிச் செயற்பாடுகளே தொன்மங்களாக, ஐதீகங்களாக வெளிப் பாடடைகின்றன என்கிறார். மனித மனத்தில் காலாதி காலமாகப் புதையுண்டு போன விடயங்களே கதைகளாக, வரலாற்றுப் புனைவுகளாக வெளிவருகின்றன. அவ்வகையில் பண்டைய இராஜ கதைகளும், அத்தகைய ராஜ மறுபிறப்புக்களாகத் தம்மைக் கருதும் செயற்பாடுகளும் இன்றளவும் தொடரத்தான் செய்கின்றன.

மேர்வின் சில்வா ஒரு இராஜா மனநிலை கொண்டவர். ஏற்கனவே ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்துள் புகுந்து தர்பார் நடத்தியமை, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டத்துக்குச் சமூகமளிக்காத சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைத்துத் தண்டித்தமை, களனி பல்கலைக் கழக மாணவர்களை பிரதேசத்தின் தாதாக்களைக் கொண்டு அடிப்பித்து, பிரபல விலைமாதர்களைக் கொண்டு முறத்தால் அறைந்தமை ஆகிய அவரது மேதாவிலாசங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து அவரது புகழைப் பறை சாற்றியிருந்தன. அவ்விலாசத்தை ருசுப்படுத்தும் இன்னொரு சம்பவமே வேள்வியைத் தடுத்தமையாகும்.

இந்து மதத்தில் வேள்வி எனப்படும் பலியிடல் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. ஏனைய மதங்களிலும் அது இருந்துள்ளது. இந்து மதத்தில் காணப்பட்ட இத்தகைய போக்குகளை மறுதலித்து தத்துவார்த்தத் தளத்தில் எழுந்தது தான் சமணம் என்று கூறப்படுகிறது.

ஆயினும் இந்து மதத்தில் ஏற்பட்ட ஆகம கால சீர்திருத்தங்கள் பலியிடலை நிறுத்தின. அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையும் மிக அதிகமாகும். வட இந்தியாவில் மீனை கங்கா புஸ்பமெனக் கூறி அந்தணர்கள் உண்பதும், ஆகம நிலைப்பட்ட பல ஆலயங்களில் முட்டை, இறைச்சி வகைகள் படைப்பதும், தேர்த் திருவிழாவின் முன் சேவலுடைய கொண்டைப் புவிலிருந்து இரத்தத்துளிகளைத் தெளிப்பதும் இன்றளவும் நடைபெறும் பலரறியாச் சங்கதிகள்.

உயிர்ப்பலியை நிறுத்துவது நல்லது. அது அன்பையும்,கருணையையும் போதிக்கும் எந்த மதத்துக்கும் ஏற்புடையதல்ல. ஆயினும் ஒரு மதப் பிரிவினரின் நம்பிக்கையில் கை வைத்து அத்துமீறி நடந்து கொண்டது நியாயமாகுமா? என்பது முதற் கேள்வி. புதையல் தேடுவதும், பலியிடுவதும் தென்னிலங்கையில் ஆங்காங்கு நடைபெறுவதாக அவ்வப்போது பத்திரிகைகளில் செய்திவரும். அரசியல்வாதிகளின் நல்வாழ்வுக்காக நடந்த யாகங்களில் ஆகுதியாக்கப்பட்டவை தொடர்பில் வெளியான பழைய செய்திகளும் நெருப்பில்லாமல் புகைந்தவையல்ல.

இலங்கையில் நீதிமன்றங்களும்,பொலிஸாரும் சும்மா இருக்க, சட்டத்தைக் கையிலெடுக்கும் பண்ணையார் பாணிக் கட்டைப் பஞ்சாயத்தைச் செயற்படுத்தும் உரிமையை இவருக்கு வழங்கியது யார்?

உயிர்ப்பலியைக் கண்டிப்பது இந்து மதத் தலைவர்களது கடமை.அதை அவர்கள் காலத்துக்குக் காலம் செய்துள்ளனர். ஆனால் ஒரு மத நிகழ்வில் அத்துமீறி நுழைந்து அடாவடித்தனம் நிகழ்த்தியதைக் கண்டிக்க இந்து மதத் தலைவர்கள் முன்வரவில்லை. முன்வராவிட்டாலும் பரவாயில்லை.இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் நீதிமன்ற உத்தரவுப்படியே அமைச்சர் மேர்வின் நடவடிக்கை எடுத்துள்ளார் எனக் கூறியதாக வெளிவந்த செய்தி வேதனையளிப்பதாகும்.

காளி கோவிலில் மிருக புசையைத் தடுத்தது போல் முஸ்லீம்களால் வழங்கப்படும் குர்பான் எனப்படும் தானத்தைத் தடுக்க அமைச்சர் மேர்வின் முயற்சித்தால் அதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று ஜனாதிபதியால் மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அலவி மௌலானா சூளுரைத்துள்ளார். இந்தத் திராணி எல்லா மதத் தலைவர்களுக்கும் வர வேண்டும்.எதற்கெல்லாமோ தலையாட்டும் ஒணான்களாக இருக்கக்கூடாது.

அமைச்சர் அவர்கள் மிருகங்களை வெட்டுவோரின் கரங்களை வெட்டுவேன் என்றும் கூறியுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறானால், அவரது பஞ்சாயத்தில் மனிதர்களை அழித்தோருக்கு என்ன தண்டனை என விசாரித்து அறிந்து கொள்வது நல்லது.அவ்வாறானால் முள்ளிவாய்க்கால் கோவைகளைத் தூக்கிக்கொண்டு ஐ.நா. சபைக்கு அலைவதை விடுத்து அவரது பஞ்சாயத்துக்கு மனுச் செய்யலாம் அல்லவா?

விழிச்சான் குஞ்சு.

# மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு ஐ.நா பொதுச்சபையில் ஜனாதிபதி உரிய பதிலளிப்பார்

## பிரதமர் கூறுகின்றார்

கொழும்பு,செப்.21

மனித உரிமைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகளின் செயலமர்வின் போது தெளிவான பதிலை அளிப்பார் என்று பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

யுத்தம் நிறைவடைந்த பின்னர் மனித உரிமைகள் தொடர்பாக



பல நாடுகளும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன ஹினும் உண்மைத் தன்மையை எந்தநாடும் அறிந்திருக்கவில்லை.

இந்த நிலையில் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்படவேண்டும்.

இதேவளை, ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ பயணத்தினை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் நியூயோர்க் சென்றுள்ளார்.

ஐ.நா. சபையின் 66ஆவது அமர்வில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஏற்கனவே நியூயோர்க் சென்றடைந்துள்ளார்.

இந்தநிலையில் நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஐ.நா சபையில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்- என்றார். (ச)

# ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை குறித்து ராஜீவ விஜேசிங்க எம்.பி.கேள்வி

கொழும்பு,செப்.21

தருஸ்மன் தலைமையிலான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ராஜீவ விஜேசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பி.பி.சி. உலக சேவையின் 'ஹார்ட் டோக்' நிகழ்ச்சிக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் விடுத்து வரும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாடுகளில் வாழும் வாக்காளர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை தயாரில்லை.

இரண்டு மூலங்களை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளையின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸின் புத்தகம் மற்றும் பிரிட்டன் ஊடகமான 'சனல்-4' வெளியிட்ட ஆவணப்படம் ஆகியவற்றின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்டவும், பயங்கரவாதத்தைத் தூண்டவும் முயற்சிப்பவர்கள், இடம்பெயர் முகாம்களில் தங்கியிருந்தவர்கள் மீள் குடியேற்றப்பட்டமை குறித்து பேசுவதில் மௌனம் காத்து வருகின்றனர்-என்றார். (ச)

# வாக்காளர்கள் அட்டைகள் ஒப்படைப்பு

கொழும்பு,செப்.21

நடைபெறவுள்ள 23 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முதல் வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப் பகுதிக்குள் வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள தபால் மற்றும் உப தபால் நிலையங்களுக்குச் சென்று தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சிறுபான்மைக் கட்சிகளின் பெயரில் அரசின் ஒப்பந்தகாரர்களே போட்டி

## ஐ.தே.க.கொழும்பு வேட்பாளர் முஸம்மில் சாட்டை

கொழும்பு,செப்.21

சிறுபான்மை இனத்தவரின் கட்சிகள் என்ற பெயரில் கொழும்பில் போட்டியிடுபவை தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப் பிரித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் தரப்பை வெற்றிபெறச் செய்யப் போகின்றன. அந்த வகையில் பார்த்தால் இந்தக் கட்சிகளை, அரசின் வெற்றியை உறுதிப்படுத்த அரச ஆதரவுடன் தேர்தல் களத்தில் இறக்கப்பட்ட அரசின் ஒப்பந்தக்காரர்களாகவே நோக்க வேண்டியுள்ளது.

- இப்படி சாட்டையடி கொடுத்திருக்கின்றார் ஐ.தே.கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான பிரதான வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்தவாரம் கொழும்புத் தமிழ் மக்களைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இன்றைய அரசியல் சூழ்நிலையில் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் மிக முக்கியத்துவம் பெறுகிறது. விசேடமாக சிறுபான்மை மக்களுக்கு இது வாழ்வா, சாவா என்ற தேர்தலாக அமைகிறது.

சிறுபான்மை மக்கள் கொழும்பு நகரத்திலே பரம்பரைபரம்பரையாக ஒற்றுமையுடன் இன, மத, குல வேறுபாடுகளின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்களது பூர்வீக வாழ்விடங்களைவிட்டு அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

கொழும்பு நகரிலே ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியின் மூலம் கொழும்பில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை கொழும்பு நகரை விட்டு வெளியேற்றும் அரசின் விரோத முயற்சி முறியடிக்கப்படும்.

இந்த மாநகரசபைத் தேர்தலிலே பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையிலேயே போட்டி நடைபெறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னமாகிய யானைச் சின்னம் தவிர்ந்த வேறு சின்னங்களுக்கு வழங்கப்படும் வாக்குகள் மஹிந்த ராஜபக் ஷவைப் பலப்படுத் தவே வழி வகுக்கும். துரதிர்ஷ்டவசமாக சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் முயற்சியில் சில கட்சிகள் ஈடுபட்டுள்ளன. இந்த முயற்சி வெற்றி பெற்றால் அது சிறுபான்மை மக்கள் தமது தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதாகவே அமையும்.

சிறுபான்மை மக்களை அரவணைக்கும் அரவணைக்கும் கட்சியாக ஐ.தே.கட்சி ஆரம்பம் முதல் செயற்பட்டு வருகின்றது. எனக்கு வழங்கப்பட்டுள்ள மாநகர முதல்வர் வேட்பாளர் பதவி கொழும்பு நகர்வாழ் சிறுபான்மை மக்களுக்கு ஐ.தே.கட்சி வழங்கிய பெரும் கௌரவமாகும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் ஐ.தே. கட்சியின் வெற்றியை உறுதிப் படுத்தும்படி வேண்டுகின்றேன்.

சிறுபான்மைக் கட்சிகள் என்ற பெயரில் கொழும்பு நகரிலே போட்டியிடும் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப் பிரித்து மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஒப்பந்தக்காரர்களாக செயற்படுகின்றன.

இந்தச் சூழ்ச்சிக்கு கொழும்பு நகர் வாழ் தமிழ்பேசும் மக்கள் துணைபோகக்கூடாது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாடத்துக்கு ஆசிரியர் இல்லை; துணுக்காய் மாணவர்கள் கடும்பாதிப்பு

அக்கராயன், செப்.21

கணித ஆசிரியர் இல்லாததால் துணுக்காய் கோட்டைகட்டிய குளம் பாடசாலை மாணவர்கள் பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து பாடசாலை இயங்கத் தொடங்கிய நாளிலிருந்து கணித பாடத்துக்கு ஆசிரியர் இல்லாத நிலையே தொடர்கின்றது.

மேலும் கணித பாடத்துக்கென நியமிக்கப்படும் ஆசிரியர்கள் குறுகிய காலத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர்.

டிசெம்பர் மாதம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் கணித பாடத்துக்கு ஆசிரியர் நியமிக்கப்படாமை மாணவர்களுக்குப் பெரும் பின்னடைவைத் தோற்றுவித்துள்ளது.

இது தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்குப் பெற்றோர்களால் மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

எனவே இனியும் காலதாமதம் செய்யாது ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நிலையை உணர்ந்து கணித ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-410)

# வவுனியா மக்களின் குடிதண்ணீர் பேராறு திட்டத்தினால் கிடைக்கும்

## அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.21

வவுனியா நகர மக்களுக்கு பேராற்றுக் குடிதண்ணீர்த் திட்டத்தின் ஊடாக குடிதண்ணீர்ப் பிரச்சினை தீரும். எனவே வவுனியா மாவட்ட அரச அதிபருக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி உதவுங்கள். இது இன்றைய அபிவிருத்திக்கான முன்னோடித் தீர்மானம்.

- இவ்வாறு அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியா செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் ரிசாட் பதியுதீன் மேலும் கூறுகையில்;

வவுனியாவில் குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 3ஆயிரத்து 680 மில்லியன் ரூபாவைச் செலவிடவுள்ளது.

இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும்போது விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அதற்கான தீர்வை அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் வழங்குவர்.

இதற்கான ஒத்துழைப்பை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் வழங்கியுள்ளார்.

எனவே, இன்றைய தீர்மானத்தோடு திட்டம் விரைவுபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் கேட்டுக் கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் வவுனியா மாவட்டத்துக்கான புற்றுநோய் வைத்தியசாலையைப் புனரமைப்பது உட்பட கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி ஆகிய 34 துறைகள் ஆராயப்பட்டன.

மேற்படி கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், யுனைப் பாரூக், அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், பிரதேச சபைத் தலைவர்கள், செயலாளர்கள், பிரதேச செயலாளர்க்ள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அபிவிருத்தி, முன்னேற்றம் குறித்து விவாதித்தனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது.

(க-302)

# மன்னார் மறை மாவட்ட இளைஞர் கலைவிழா

மன்னார், செப்.21


இளைஞர் ஆண்டையொட்டி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு நடத்தும் இளைஞர் கலை விழா நிகழ்வுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி பி.ப. 6 மணிக்கு நானாட்டான் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மன்னார் ஆயர் கலந்து கொள்வார்.

இதில் நடனம், நாடகம், சிறப்பு உரைகள், கலைஞர்கள் கௌரவிப்பு, பரிசளிப்பு மற்றும் நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களான கத் தோலிக்க இளைஞர் ஆணைக் குழுவினர் தெரிவித்தனர்.

(601)

# சிதைவடைந்து வரும் மன்னார் கோட்டை; தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



மன்னார், செப்.21

மன்னாரில் ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட கோட்டை பாதுகாக்கப்படாமையால் சிதைவடைந்து வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் இதனைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்னார் நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கோட்டையைச் சுற்றிக் கடல் காணப்படுகின்றது. தற்போது கோட்டையின் சுற்றுமதில் கடல் நீரால் அரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மேலும் கோட்டையின் உட்பகுதியிலுள்ள கட்டடங்களும் உடைந்து சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

மன்னாருக்குப் பெருமை சேர்த்து நிற்கும் இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டை அழிவடைந்து வருகின்றமை இங்குள்ள பலருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு இந்தக் கோட்டையைப் புனரமைக்க வேண்டுமென்பதே அனைவரதும் கோரிக்கையாக வுள்ளது.

(க-601)

# முள்ளியவளை வித்தியானந்தா வைர விழா இன்றும் நாளையும்

முல்லைத்தீவு,செப்.21

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் வைரவிழா நிகழ்வுகள் இன்றும், நாளையும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

முதல் நாள் காலை நிகழ்வுகளாக காலை 9 மணியளவில் கட்டடத் திறப்பு விழா மற்றும் கண்காட்சி ஆரம்பித்து வைத்தல் என்பன இடம்பெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் கலந்து கொள்வார் வடமாகாணக் க ல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன.இதில் பெரியோர் கௌரவிப்பு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன இடம்பெற இருக்கின்றன. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமாகிய இ.இளங்கோவன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக முல்லைத் தீவு வலயக் கல்விப் பணிப் பாளர் கி.கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

நிகழ்வுகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாக விருக்கின்றன. இதில் வைர விழா மலர் வெளியீடும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

யாழ். பல் கலைக்கழக விரிவுரையாளர் க.அருந்தாகரன் வைரவிழா மலரின் கௌரவ பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

விழாவில் இறுதியாகக் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(க)

# இடைவிலகிய மாணவர்கள் கல்வியைத் தொடரும் வாய்ப்பு

மல்லாவி, செப்.21

பாடசாலையை விட்டு இடைவிலகிய 14 வயதுக்குட்பட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளும் செயற்றிட்டம் ஒன்று மல்லாவிப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை மல்லாவி மத்திய கல்லூரியின் நூலக உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி இ.றூயினா தலைமையேற்று நடத்தி வருகிறார். தமது சகோதர மாணவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளக் கல்லூரி மாணவர்களும் ஆர்வத்துடன் இவருடன் சேர்ந்து செயலாற்றி வருகின்றனர்.

கிராமத் தரிசிப்புக்களை நடத்தி வரும் இவர்கள் , இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பிரச்சினைக்கு முடிந்தவரை தீர்வைப் பெற்றுக் கொடுத்துப் பாடசாலையில் மீண்டும் இணைத்துக் கல்வியைத் தொடர ஊக்கமளித்து வருகின்றனர்.

குடும்ப வறுமையே இடைவிலகலுக்கான காரணம் எனக் கூறப்படுகின்றது. காலணி, பயிற்சிப் புத்தகம் போன்ற அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதற்குப் பெற்றோருக்குப் போதிய வருமானம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதற்குத் தீர்வாகக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கலாநிதி எதிர்வீரசிங்கம் போன்றோர் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க நிதிப்பங்களிப்பு வழங்கியதைப் போன்று தனிப்பட்டவர்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறான செயற்றிட்டத்தை முன்னெடுக்க உதவின் அனைவரும் கல்வியறிவைப் பெற்று வறுமையையும் தாண்டிச் செல்ல உதவமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-425)

# கணினிப் பயிற்சி நெறி

துணுக்காய், செப்.21

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான சர்வதேச கணினி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பத்தாவது அணி வெளியேறியுள்ளது. இந்தப் பயிற்சி நெறியைத் துணுக்காய் வலயத்துக்குட்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட 20 பேர் நிறைவு செய்துள்ளதாக இந்தப் பயிற்சி நெறியின் ஆசிரியர் சு.சுபநேசன் தெரிவித்தார். இந்தப் பயிற்சியை இதுவரை 200 பேர் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

அத்துடன் இதேயிடத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரம் எழுதிய மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது 15 பிரிவுகளாக 300 மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது. பாடசாலை அதிபர்களுக்கும் கணினிப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(க-425)

# அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவன் சித்தி

அக்கராயன், செப்.21

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனியாக இயங்கத் தொடங்கிய நிலையில் முதலாவது மாணவன் தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான்.

161 புள்ளிகளைப் பெற்று ஜெயக்குமார் கோபிநாத் மாணவனே முதலாவது மாணவனாகச் சித்தியடைந்துள்ளான்.

(க-4[illegible])

# மகாத்மா காந்தியின் பிறந்ததினத்தில் சிறுவர் பராமரிப்பு இல்லம் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.21

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் மகாத்மா காந்தியின் பிறந்த தினமான ஒக்ரோபர் இரண்டாம் திகதி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் சிறுவர் பராமரிப்பு இல்லமொன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த நிலையத்தில் இணையவுள்ள சிறார்களின் விவரங்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிலையத்தில் இணைவதற்கான பதிவு மேற்கொள்ளும் முதலாவது பிள்ளையின் பராமரிப்புச் செலவுத் தொகையாக மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கக் காந்தீயத் தொண்டரும், காந்தி நிலையம், சரஸ்வதி பிருந்தாவனம் அறக்கட்டளை ஆகியவற்றின் அமைப்பாளருமாகிய சோ.க.தம்பிப்பிள்ளை முன்வந்துள்ளார்.

இதேபோன்று நிலையத்தில் இணையும் பிள்ளைகளின் செலவைப் பொறுப்பேற்கப் பல தொண்டுள்ளம் படைத்தவர்கள் முன்வந்துள்ளனர் என்று நிலையச் செயலாளர் வி.ஜி. தங்க வேல் தெரிவித்தார்.

(க-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபகரணங்கள் ஏதுமில்லை வீதிகளில் மீனவர்கள் முடக்கம்

## கிளிநொச்சியில் தொடரும் அவலம்

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு இரு மாதங்களுக்கு மேலாகிவிட்ட போதும் மீன்பிடி உபகரணங்கள் இல்லாததால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாமல் வருமானமின்றி வீடுகளில் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு பொது நிறுவனங்கள் மீன்பிடி உபகரணங்களை வழங்க முன்வர வேண்டுமெனக் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட மீனவர்கள் சுண்டிக்குளம் பேய்ப் பாறைப்பிட்டி கடற்பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்திருந்தனர். அப்பிரதேசத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப் பட்டதைத் தொடர்ந்து சமாசத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஆழ்கடலில் தொழில் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

யுத்தத்தினால் வள்ளம், வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்களை இழந்து வெறும் கையுடன் மீள்குடியமர்ந்த மீனவர்களுக்கு அரசோ, பொது நிறுவனங்களோ இவற்றை வழங்க முன்வராததனால் மீனவர்கள் தொழில் செய்வதற்கு வசதியின்றி வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

எனவே மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு பொது நிறுவனங்கள் மீன்பிடி உபகரணங்களை வழங்கி உதவுமாறு சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது. (க-115)

# மல்லாவி ஒட்டறுத்த குளம் சந்தியில் பயணிகள் காத்திருக்கும் அவலம்

மல்லாவி, செப். 21

துணுக்காய் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பேருந்துகள் ஒட்டறுத்தகுளம் சந்தியில் நிறுத்தி வைக்கப்படுவதால் பிரயாணிகள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் மல்லாவிக்கு வந்ததும் ஒட்டறுத்தகுளம் சந்திப் பகுதியில் நட்டாங்கண்டலில் இருந்து வரும் பேருந்துக்காக மணிக்கணக்கில் காத்து நிற்கின்றன.

இதனால் தமது வேலைகளுக்காக நேரத்தைத் திட்டமிட்டுப் பயணிக்கும் பிரயாணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் துணுக்காயில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப் பட்டதன் பின்னரே தினமும் இவ்வாறான நிலைமை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டறுத்தகுளம் சந்திப் பகுதியில் பேருந்துகள் காத்திருக்கும் நிலையினைத் தவிர்த்துப் பிரயாணிகளின் சிரமங்களை நீக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-425)

## சாதனைப் பயணம்...



முயற்சியின் அறுவடை: கிளிநொச்சி மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் 23 நிகழ்வுகளில் தெரிவுசெய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டியில் பங்குகொள்ளும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 43 மாணவர்கள், அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

# மனித உரிமைகள் நடமாடும் சேவை ஒட்டுசுட்டானில் நாளை ஆரம்பம்

முல்லைத்தீவு,செப்.21

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவில் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக் குழுவினரின் நடமாடும் சேவையொன்று நாளையதினம் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தரத் தீர்வுக்குமான செயற்றிட்டத்தினால் ஒட்டிசுட்டான் பிரதேச செயலக பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளான மணவாளன் பட்டமுறிப்பு, மாங்குளம்,தச்சடம்பன், ஒலுமடு, அம்பகாமம் மக்களுக்கான நடமாடும் சேவை ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளை 22 ஆம் திகதி அன்று காலை 09.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரை கரிப்பட்டமுறிப்பு அ.த.க பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

இந்தநடமாடும் சேவையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம்,இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு,பதிவாளர் நாயகம் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சமூகசேவைகள் திணைக்களம், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸ்நிலையம் (மாங் குளம்), பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களம்,விவசாயத் திணைக்களம், சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தித் திணைக்களம் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபைஆகியன தமது சேவைகளை வழங்கவுள்ளன.எனவே இப்பகுதி மக்கள் இந்தநடமாடும் சேவையில் பங்குபற்றுவதன்மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# துணுக்காய் தென்னியன்குளம் கிராம மாணவர்கள் பாடசாலை செல்வதில் போக்குவரத்துச் சிரமங்கள்

அக்கராயன், செப். 21

துணுக்காய் தென்னியன் குளம் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் கோட்டைகட்டிய குளம் பாடசாலைக்கு வந்து செல்வதில் கடுமையான சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் பஸ்ஸில் ஏறுவதற்கு இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று தென்னியன்குளம் சந்தியை அடைகின்றனர். பின்னர் அங்கு காத்திருந்து ஆறு கிலோ மீற்றர் பயணம் செய்து கோட்டை கட்டிய குளத்தை அடைகின்றனர். பின்னர் பிற்பகல் வேளையில் 4 மணிவரை பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றனர். பஸ் வருவதற்குத் தாமதமானால் இருட்டிய பிறகே இவர்களால் வீடுகளுக்குச் செல்ல முடிகின்றது. இவர் களிடம் சைக்கிள்கள் கூட இல்லை. இவற்றை வாங்கிக் கொடுப்பதற்கான வசதிகளும் பெற்றோர்களிடத்தில் இல்லை.

தற்போது தரம் எட்டுவரை இயங்கும் தென்னியன்குளம் பாடசாலை க.பொ.த. சாதாரண தரம் வரை இயங்குமாயின் பல மாணவர்களின் பிரயாணக் கஷ்டங்கள் தீர்ந்து விடுமெனப் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (க-410)

# அழிந்த குறியீடுகள்

வவுனியா வீதிகளில் வேகத் தடையைக் குறிக்கும் குறியீடுகள் அழிந்து வருவதால் வாகன சாரதிகளும் பொதுமக்களும் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

வீதியோரங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகள், கோயில்கள் ஆகிய முக்கிய இடங் களுக்கு அருகில் வேகத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இவற்றைக் குறிக்கும் குறியீடுகள் அழிந்த நிலையிலுள்ளன. இதனால் வேகமாக வரும் வாகனங்களைக் கட்டுப்படுத்துவதில் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். (க-421)

# புதிய பொலிவு பெறுகிறது வவுனியா தபால் நிலையம்

வவுனியா, செப்.21

வவுனியா மாவட்டத் தபால் நிலையத்துக்கென மேலதிகமாகப் புதிய கட்டடங்கள் அமைக் கப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தற்போதைய தபாலகக் கட்டடம் அனைத்துச் சேவைகளையும் ஒரேயிடத்தில் மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்டிராததால் இந்தப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மலசலகூட வசதிகள், உத்தியோகத்தர்களின் இளைப்பாறும் அறைகள் போன்றவை நவீன முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சமீப காலமாகவே வவுனியா தபால் நிலையத்துக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (421)

# வவுனியா கல்நாட்டிய குளத்தில் தவறி வீழ்ந்து சிறுவன் மரணம்

வவுனியா, செப்.21

வவுனியா கல்நாட்டிய குளம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் 5 வயதுச் சிறுவன் ஒருவன் தவறி வீழ்ந்து மரணம் அடைந்துள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி கல்நாட்டியகுளம் பகுதியில் அமைந்துள்ள குளப்பகுதியில் மீன் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சிறுவன் குளத்தில் தவறி வீழ்ந்து மரணமடைந்ததாக அவனது பெற்றோர் தெரிவித்தனர்.

குளத்துப் பகுதிக்குச் சென்ற சிறுவன் வீடு திரும்பாததால் பெற்றோர்கள் சிறுவனைத் தேடி அலைந்து திரிந்தனர். சில வேளை அருகில் உள்ள கோயில் திருவிழாவுக்குச் சென்றிருக்கலாம் என நினைத்து அங்கும் தேடினர்.

இறுதியாக அடுத்தநாள் காலை மீண்டும் குளத்துக்குச் சென்று தேடியபோது குளத்தில் சிறுவனின் கால் தென்பட்டது.

குளத்தில் இருந்து சிறுவனின் உடல் எடுக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

மரணம் அடைந்த சிறுவன் கல்நாட்டிய குளம் பகுதியில் உள்ளமதுராநகர் பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் பிரியந்தன் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-421)

# சர்வதேச சமாதான தின நிகழ்வுகள் இம்முறை வவுனியா நகரத்தில்

வண்ணை, செப். 21

சர்வதேச சமாதான தினத்தின் இந்த வருடச் சிறப்பு நிகழ்வுகளை யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் வவுனியா நகரில் நடத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

இன்று புதன்கிழமை முற்பகல் 9-15 மணியளவில் வவுனியா, தரணிக்குளம் கணேசா வித்தியாலயத்தில் பணியக இயக்குநர் வண - பிதா பிரவீன் மகேசன் அடிகள் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக யாழ். மாகாண குருமுதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு குரு முதல்வர் வண - றொகான் சில்வா மற்றும் ஸ்ரீவ் அலெஸ்ரன், வன்முறையற்ற படையணி வதிவிடப் பிரதிநிதி வண - கெமலிபிச்சே அ.ம.தி. இயக்கு நர், நீதிக்கும் சமாதானத்துக்குமான பணியகத்தைச் சேர்ந்த றோம் ஆகியோர் கலந்து கொள் வர்.

கௌரவ விருந்தினர்களாக புளியங்குளம், வலயக் கல்விப் பணிப்பாளர், திருமதி பராசக்தி கணேசலிங்கம், வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சாம்ராஜ் அகியோர் கலந்து கொள்வர்.

பிற்பகல் 12.30 மணிவரை நிகழும் வைபவத்தில் பரிசளிப்பு, வரவேற்பு நடனம் மற்றும் கவிதை, நாடகம், வினாடி வினா போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன.

இம்முறை வவுனியாவில் சர்வதேச சமாதான தினத்தின் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறுகின்றமை வவுனியா மக்களிடையே எழுச்சியையும் சமாதானத்தின் மீதான பற்றுதலையும் ஏற் படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (க-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் பால் அருந்தினால் பார்வைக் குறைபாடு ஏற்படாது



நியூயோர்க் நகரில் அமைந்துள்ள பவலோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏமி மில்லன் என்பவர் தலைமையில் வயதுக்கும் பார்வை குறைபாடுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

பெரும்பாலும் 50 வயதை நெருங்கும் பெண்களைப் பாதிக்கும் இந்தக் குறைபாடு, அவர்களின் நாளாந்த செயல்களான வாசித்தல், வாகனம் ஓட்டுதல் மற்றும் தெரிந்தவர்களின் முகத்தை அடையாளம் காணுதல் போன்றவற்றைக் கூட செய்ய இயலாத நிலைக்குத் தள்ளி விடுகிறது.

பிரிட்டனில் வருடத்துக்கு ஏறத்தாழ 2 லட்சம் பேர் இந்தக்குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர். சுமார் 1313 பெண்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் விற்றமின் டி அதிகம் நிறைந்த உணவை உட்கொள்வோர் மற்றும் உடலில் விற்றமின் டி அளவு அதிகமாக உள்ளோரிடம் இந்தக் குறைபாடு அதிகமாகக் காணப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

பால் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட வெண்ணெய் மற்றும் தானியம் ஆகியவற்றை அதிகம் எடுத்துக் கொள்வது நன்மை பயக்கிறது என்பது இந்த ஆய்விலிருந்து தெரியவந்திருக்கிறது.

சூரிய ஒளியில் அதிக நேரம் செலவிடுவதும் நன்மையையே தருகிறது.

எனவே பால், அதிலிருந்து பெறப்படும் வெண்ணெய் போன்ற உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவது இந்தக் குறைபாட்டைத் தவிர்க்கப் பெரிதும் உதவுகிறது என்று இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.


# இலைகளில் உருவாக்கப்பட்ட கலைப் படைப்புக்கள்



இலைகளில் உருவங்கள் அமைத்து, அவைகளைச் சிறந்த கலைப்படைப்புக்களாக மாற்றிய கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அவ்வாறு இலைகளில் உருவாக்கப்பட்ட கலைப் படைப்பு ஒன்றை இங்கே காணலாம்.

# தாய்ப் பசு!



காலத்தின் கோலத்தால் உலகம் சந்திக்கும் விந்தைகளுக்கு அளவே இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. குழந்தை பிறந்தால் அதற்கு முதல் மருந்தும் உணவும் தாய்ப்பால்தான் என்று கூறுவார்கள். ஆனால் கம்போடியாவில் 20 மாதக்குழந்தை நேரடியாக பசு விடம் இருந்து மடிப்பால் உறிஞ்சிக் குடிக்கும் சம்பவம் அனைவரையும் வியப்புக்கு உள்ளாக்கியுள்ளது.


இந்தக் குழந்தையின் பெற்றோர்கள் வேலை தேடுவதற்காக தமது கிராமத்தினை விட்டு ஜூலை மாதம் தாய்லாந்து நாட்டுக்குப் புறப்பட்டு சென்றனர்.

இவர்கள் செல்லும்போது தனது 20 மாதமான குழந்தையை தங்களது பெற்றொருடன் விட்டு விட்டு சென்றுள்ளனர்.

இதன் பின்னர் இந்தக் குழந்தை அங்குள்ள பசுவின் கீழ் தானே சென்று அதன் பாலை அருந்தியுள்ளது.

பசுவும் தாய்மைக்கு பறைசாற்றும் முகமாக எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படுத்தாமல் குழந்தைக்கு பால்கொடுத்து வருகின்றது.

# அதிசய மரங்கள்





கலைநயம் பொருந்திய மரங்களைப் பார்த்ததுண்டா? சொர்க்கபுரி என்று அழைக்கப்படும் காடுகளில் பலவித தோற்றங்களில் அழகாகக் காட்சியளிக்கின்ற மரங்கள் பிரமிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் காணப்படுகின்றன.

# பைபிளின் வரிகளிலிருந்து

- ஆபத்துக் காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மொளி புரண்ட காலுக்கும் சமம்.
- மூடனுடைய முகத்துக்கு விலகிப்போ. ஏனெனில் அறிவுள்ள உதடுகளை அங்கு காணாய்.
- பொய் நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகின்ற சுவாசம் போலிருக்கும்.
- நீதியின் பாதையில் ஜீவன் உண்டு. அந்தப் பாதையில் மரணமில்லை.
- இருமனம் உள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கின்றான்.

ஆ.வதனா.

# உலகில் மிக நீளமான நகங்களைக் கொண்ட பெண்



அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் உலகில் அதிக நீளமான கைவிரல் நகங்களைக்கொண்ட பெண் என்று கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரைச் சேர்ந்த கிறிஸ்டைன் வோல்டன் என்ற இந்தப் பெண்ணின் கைவிரல் நகங்களின் மொத்த நீளம் 19அடி 9 அங்குலம். இவரது வலது கை நகங்களின் நீளம் 9 அடி 7 அங்குலமும், இடது புறத்திலுள்ள நகங்களின் நீளம் 10அடி 2அங்குலமுமாகக் காணப்படுகின்றன. தொழில்சார் பாடகரான கிறிஸ்டைன் தனது 18 ஆவது வயதில் நகங்களை வளர்ப்பதற்கு ஆரம்பித்துள்ளார். இவர் தனது நீண்ட நகங்களை வைத்துக்கொண்டே தன்னை அழகுப்படுத்திக்கொள்ளுதல், வீட்டு வேலைகள் என்பவற்றையும் செய்துக்கொள்கின்றார். எனக்கு வீட்டைச் சுத்தம் செய்வது பிடிப்பதில்லை. ஆனாலும் அதை நான் செய்கிறேன். என்னை அழகுபடுத்துவதையும் சிறப்பாக செய்துகொள்வேன் என்று கிறிஸ்டைன் தெரிவித்துள்ளார்.

இவருக்கு முன் உலகிலே அதிக நீளமான கைவிரல் நகங்களைக் கொண்ட பெண்ணாக அமெரிக்காவின் சோல்ட் லேக் சிட்டியைச் சேர்ந்த லீ ரேமண்ட் என்பவர் இடம்பெற்றிருந்தார். அவரின் நகங்களின் நீளம் 28அடியாகும். ஆனால் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற கார் விபத்தில் அவரின் நகங்கள் முறிந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் கிழக்கு ஆளுந்தரப்பின் நிலைப்பாடு என்ன?

## மாகாணசபை உறுப்பினர் கேள்வி

மூதூர், செப்.21

சம்பூர் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக கிழக்கு மாகாணசபை ஆளும் தரப்பின் நிலைப்பாடு என்ன?

– இவ்வாறு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிழக்கு மாகாணசபை மாதாந்தக் கூட்டம் கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் நடத்தப்பட்டபோது சம்பூர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் அ.பரசுராமனால் தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணைகள் தொடர்பாக அவர் உரையாற்றும் போதே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சம்பூர் மக்களைப் பொறுத்தவரையில் சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர்.

இந்த மக்கள் சம்பூர் மேற்கு, கிழக்கு, கூனித்தீவு, சூடைக்குடா, நவரெட்ணபுரம், கடற்கரைச் சேனையின் சிறுபகுதி, சந்தோசபுரம் ஆகிய பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தவர்கள்.

இவர்களை கூனித்தீவின் பின்பகுதி, இறால்குழி, சந்தோசபுரம் ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்த்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மக்கள் சம்பூர் பகுதியைத் தவிர வேறு எந்த இடத்திலும் மீளக்குடியமர விரும்பவில்லை. சொந்த இடத்திலேயே தங்களை மீளக்குடியமர்த்துமாறு கேட்டுள்ளனர்.

பல வருடங்களாக முகாம்களில் துன்ப, துயரங்களை அனுபவித்துவிட்டு மீண்டும் தற்காலிக கொட்டில்கள் அமைத்து மீளக்குடியமர்த்துவதில் என்ன நியாயம்? இயற்கைவளமுள்ள அனைத்தையும் அழித்துவிட்டு புதிய வளத்தை உருவாக்குவதில் என்ன நோக்கமுள்ளது? சம்பூர் மக்கள் தொடர்பாக கிழக்கு மாகாணசபையின் நிலைப்பாடு என்ன? மத்திய அரசு சம்பூர் மக்களுக்கு இழைக்கும் கொடுமையை கிழக்கு மாகாண சபை ஏற்றுக்கொள்ளப் போகின்றதா?

சம்பூர் பகுதி அல்லாத சில இடங்களில் தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. சம்பூர் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு மட்டுமல்ல, கிழக்கு மாகாணசபைக்கும் உண்டு. கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் ஆகியும் இந்த மக்களின் ஒருசதவீத தேவையும் இச்சபையால் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்தச்சபை இறைமையுள்ள சபையாக இருந்தால், ஏன் சம்பூர் மக்களுக்குப் பொறுப்புக் கூற முடியாது? இந்த மாகாணத்தில் ஏன் மீள்குடியேற்ற அமைச்சு உள்ளது? இதைக் கலைத்து விடுங்கள். ஒரு சதம் கூட இந்த அமைச்சுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த மக்கள் தொடர்பாக மாகாண சபை பொம்மையாகச் செயற்படாமல் மத்திய அரசு சம்பூர் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் ஒரு பக்கச்சார்பான நடவடிக்கைகளுக்குத் துணை போகக் கூடாது. இந்தச் சபையில் விசேட தினம் ஒன்றை ஒதுக்கி சம்பூர் மக்கள் தொடர்பான விவாதத்தை நடத்தி நீதியான, சரியான தீர்வைப் பெற்று சம்பூர் பிரதேசத்திலேயே இந்த மக்களை மீளக் குடியமர்த்த ஆவன செய்தல் வேண்டும் - என்றார்.(ச)

# நானு ஓயா - நுவரெலியா இடையே ரயில் சேவை ஆரம்பிக்க ஏற்பாடு

## அமைச்சர் குமாரவெல்கம நேரில் சென்று ஆராய்வு

மஸ்கெலியா, செப்.21

நானுஓயாவில் இருந்து நுவரெலியா வரை புதிதாக ரயில் பாதை அமைக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

அண்மையில் நானுஓயா ரயில் நிலையத்திற்குச் சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது மாத்தறையில் இருந்து கதிர் காமத்திற்கும், மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும், ஓமந்தை முதல் பளை வரையுமான பாதைகள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

நானுஓயா முதல் நுவரெலியாவரை ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டால் மக்கள் பெரிதும் நன்மையடைவதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் அதிகம் ஈர்க்கப்படுவர்.

புறக்கோட்டையிலிருந்து 'பொடிமெனிக்கே' ரயில் நானுஓயா வரை வந்தடையும்.

நானுஓயாவில் இருந்து நுவரெலியா 7கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. நுவரெலியாவுக்கு அதிக அளவில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகின்றனர். இவர்கள் அனைவரும் நானுஓயா நிலையத்தில் இறங்கி பஸ்கள் மூலமாக நுவரெலியாவுக்குச் செல்வதில் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே, நுவரெலியா வரை ரயில்சேவை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது - என்றார்.

1800ஆம் ஆண்டு காலப் பகுதியில் நுவரெலியாவுக்கும் நானுஓயாவுக்குமிடையே ரயில்சேவை இருந்துள்ளது.

எனவே, இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கில் ரயில்சேவை அத்தியட்சகருக்கு இன்னும் ஒருவாரத்தில் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் குமாரவெல்கம அதிகாரிகளைப் பணித்துள்ளார். (ச)



ஊவா வெல்லஸ்ஸ புற்று நோய் குணப்படுத்தும் சங்கத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுப் பேரணி பதுளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தப் பேரணி புற்றுநோய் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் வகையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மோதியவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லாத சாரதி

## கண்டி பொலிஸாரால் கைது

கண்டி,செப்.21

ஓட்டோவில் மோதுண்டு காயமடைந்த நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதாகச் சொல்லி அவரை இடைநடுவில் இறக்கிவிட்டுச் சென்ற சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் கண்டி, தித்தவெல சந்தியின் வட்டாரந்தென்ன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவரே இவ்வாறு ஓட்டோச்சாரதியால் ஏற்றிச் செல்லப்பட்டு இடைநடுவில் இறக்கிவிட்டுச் செல்லப்பட்டுள்ளார்.

படுகாயமுற்ற நிலையில் வீதியில் துடித்துக் கொண்டிருந்த இவர் பற்றிய விவரத்தை பொது மக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்ததுடன், ஓட்டோவின் இலக்கத்தையும் கூறியுள்ளனர். அதனையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இந்த சாரதியைக் கைது செய்ததுடன், ஓட்டோவையும் கைப்பற்றினர்.

காயமடைந்த நபர் கண்டி வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தேசப்பிரிய கொடிதுவக்குவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

# வெண்சந்தனம் மீட்பு: ஒருவர் கைது

ஹாலி-எல உணுகொல்ல தோட்டத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 35 கிலோ வெண்சந்தனத்துடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் அவசர அழைப்புக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்தே இந்த சந்தனம் பிடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் உணுகொல்ல தோட்டத்தைச் சேர்ந்தவர்.

பதுளை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ரத்னாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

# களவாக மின்சாரம் பெற்ற 15பேர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு,செப்.21

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்மானியில் குளறுபடி செய்த 15 பேரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையின் தலைமையக விசேட புலனாய்வுப் பிரிவினர் பொலிசாருடன் இணைந்து ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (ச)

# பொலன்னறுவை தொழிற்சாலையில் பால் பொதியிடும் யூ.எச்.ரி. இயந்திரம்

## அமைச்சர் ஆறுமுகனால் தொடங்கப்பட்டது

கொழும்பு, செப். 21

பொலன்னறுவைப் பால் உற்பத்தி நிலையத்தில் 35 கோடி ரூபா பெறுமதியான யூ.எச்.ரி. தொழில்நுட்பத்தில் தூய்மையான பாலை பைக்கட் செய்யும் இயந்திரம் ஒன்றை கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

பின்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன இயந்திரம் இதில் பொருத்தப்பட்டுள்ளது. மக்களிடையே பால்மாவுக்குப் பதிலாக திரவப் பால் பாவனையை பழக்கப்படுத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனையின் கீழ் இந்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்த மாதிரியான இயந்திரங்கள் மில்கோ நிறுவனத்தினால் கண்டி, திகன தொழிற்சாலையிலும் பொருத்தப்படும்.

இந்தப் பால் பைக்கட்டுகளை குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமலே ஒருமாதம் வரை பாவிக்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மொனராகல பிரதேசத்தில் கஞ்சாசேனை சுற்றிவளைப்பு

மொனராகல, தம்பகல்ல பொலிஸ் வலயத்துக்கு உட்பட்ட கவ்கொடகம பிரதேசத்தில் ஆறடி உயரத்துக்கு வளர்ந்திருந்த 1,327 கஞ்சா செடிகளுடன் கஞ்சாசேனையொன்று சுற்றிவளைக்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின்பேரில் இந்தச் சேனை கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகநபர் நீண்ட நாள்களாகவே கஞ்சா செய்கையில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்துள்ளது. சந்தேகநபரை கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் மொனராகலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மொனராகல பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

# ஹோட்டல் ரகசிய அறையில் பதுங்கி புகைப்பிடித்த மாணவர்கள் கைது

கண்டி, செப். 21

கண்டி ஹோட்டலொன்றில் பாடசாலை மாணவர்கள் புகைப்பிடிப்பதற்கென இரகசிய அறையொன்று இயங்கி வருவதாகக் கிடைத்த தகவலொன்றின் பேரில் அந்தக் ஹோட்டலைச் சுற்றிவளைத்த பொலிஸார் இந்த இரகசிய அறையில் புகைத்துக் கொண்டிருந்த 9 மாணவர்களைக் கைது செய்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த மாணவர்கள் 13, 14,15 வயதையுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாணவர்களுக்கு சிகரட் விற்றதுடன் அவர்களுக்கு தனியறையும் ஏற்படுத்திக் கொடுத்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் ஹோட்டல் முகாமையாளரும், மற்றொரு ஊழியரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஹோட்டல் முகாமையாளருக்கும், ஊழியருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சோர்வு, சோம்பல் இல்லாமல் நீண்ட நேரம் வேலை செய்யலாம். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பெண்கள் சிலர் மூலம் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். விவசாயிகள் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். உங்களின் பிரச்சினை ஒன்றை நண்பர்களிடம் சொல்லி உதவி கேட்கலாம். பணவரவு உண்டு.

**இடபம்:**
வழக்கமான வேலை ஒன்றை விருந்தினர் வருகையால் இன்று பிற்போட்டு வைக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே மீண்டும் செய்யலாம், நினைத்தது நடக்க வேண்டும் என செய்த பிரார்த்தனை பலிக்கும். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:**
செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து செயற்படுவீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்க வாய்ப்பு கிட்டும். பெண்கள் பெற்றோர் வழியில் உதவிகள் பெறலாம். ஆயுதங்களை, சிக்கலான பொருள்களைக் கையாளும் போது கவனம் அவசியம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். இனியநாள்.

**கடகம்:**
மிகுந்த நம்பிக்கையுடன் இருந்த ஒரு விடயம் கை நழுவிப் போகலாம். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவர் உங்களை விட்டுப் பிரியலாம். முக்கிய வேலையாக திடீரென வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். இறைவழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**சிங்கம்:**
நண்பர்கள் சிலர் உங்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான சில நல்ல யோசனைகளைச் சொல்வர். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உற்சாகமாகக் காணப்படுவீர்கள். ஒரு வகையில் வீண் செலவுகள் ஏற்பட்டாலும், மற்றொரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை சிலர் கொடுக்கலாம். சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம்.

**கன்னி:**
அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக இழுத்தடித்த பணவரவு ஒன்று வரலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெற்றிக் கொடி நாட்டும் நாள்.

**துலாம்:**
நிதி நிலைமையில் முன்னேற்றம் காணலாம். மருத்துவம் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். வீண் பழிகள் விலகி பாராட்டுக்களைப் பெறுவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணலாம். கனவுகளால் குழப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:**
வீண் விவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைக் தவிர்க்க வேண்டிய நாள். சில காரியங்களில் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்காமல் போகலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல்அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். ஓய்வில்லாமல் அடுக்காக பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். வேண்டாத செலவுகளைச் செய்யலாம்.

**தனுசு:**
ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மனதை குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஆடை, ஆபரணம் வாங்கலாம்.

**மகரம்:**
தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். பெண்கள் குடும்ப செலவுகளில் சிக்கனம் காட்ட வேண் டும். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கலாம். உறவினர் ஒருவர் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். இரண்டு மூன்று நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று வரலாம்.

**கும்பம்:**
எடுத்த காரியத்தை இழுபறிக்குப் பின்னர் வெற்றிகரமாக முடிப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். மற்றவர்கள் பெருமை யாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். கடந்த காலத்தில் உதவிய ஒருவருக்கு இப்போது நீங்கள் பதில் உதவி செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**மீனம்:**
சிறிய விடயங்களில் கூட கவனமாக, எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உறவினர்கள் வகையில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசு தொடர்பான விடயங்களில் அலைக்கழிப்புகள் நேரும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். கடன்கள் வசூலாகும்.

# ஒரு பயண

### வலி மேற்கு மக்களின் வேதனை வலிகள்

"போர் ஓய்ந்து விட்டது ஆனாலும் எங்கள் மத்தியில் பீதியும் பயமும் நீங்க வில்லை'' இப்படி கண்ணீர் மல்கக் கூறுகின்றனர் வலி. மேற்கு மக்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கடந்த வாரம் வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.

அவரிடம் மக்கள் தெரிவித்த கருத்துக்களை நோக்கும் போது மழை ஓய்ந்துவிட்டது மக்கள் சற்று நிம்மதியாக இருப்பார்கள் என்று நினைத்தால் தூறல் ஓயவில்லை என்ற நிலையே காணப்படுகின்றது.

### பெருங்காயப் பானைகள்

பெருங்காயம் போட்டு வைக்கப்பட்டிருந்த பானைகள் காலியாகிவிட்டாலும் அதன் வாசனை இலகுவில் போகாது என்பார்கள். அப்டித்தான் இருக்கின்றது வலி.மேற்குப் பிரதேச சபை நிர்வாகமும் அப்படித்தான் இருக்கிறது. முன்பு யாரோ ஒரு தனி மனிதனின் நடவடிக்கைகளுக்கு ஒத்து ஊதிக்கொண்டிருந்த சில பிரதேச சபைச் செயலாளர்கள் இன்னும் தம்மை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலர் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசசபையும் தலைவரும் இருக்கின்றனர் என்பதை இன்னும் கூட ஏற்றுக்கொள்ளத் தயங்கி நிற்கின்றார்.

உதாரணத்துக்குப் பிரதேச சபைக்கு புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்க, அவரது ஒப்புதல் பெறாமல், சபையின் அனுமதியையும் கேட்காமல் சில வேலைகளுக்கான டெண்டர்களை சபைச் செயலாளர் தன்னிச்சையாக விளம்பரப்படுத்திப் பெற்றுள்ளார்.

ஆனால் டெண்டர் பத்திரங்களைப் பிரித்து தெரிவு செய்வதற்கு மட்டும் பிரதே சபைத் தவைரை அவர் நாடி உள்ளார். சற்று விவரமான பிரதேச சபைத் தலைவர் கையெழுத்திட மறுத்துவிட்டார். வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டதால் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று லீவு போட்டுவிட்டு கொழும்புக்குப் போய்விட்டார் சபையின் செயலாளர்.

பிரதேச சபைத் தலைவியும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் நேரடியாகச் சென்ற போது சபையில் அவர் இருக்கவில்லை. இதுதான் அந்தச் செயலரின் புத்தி சாதுரியம்.


### அலுவலக அதிகாரிகள் எவருமே காணப்படாத உபபிரதேச சபைச் செயலகம்

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு சென்ற போது பகல் நேரம், எனினும் உப செயலகம் குடிபெயர்ந்த ஆலிமனை போன்று காணப்பட்டது. எல்லா மேசை நாற்காலிகளும் காலியாகவே காணப்பட்டன. பொறுப்பான உத்தியோகத்தர்கள் எவருமே இல்லை. ஒரே ஒரு பெண் எழுதுவினைஞர் மட்டுமே இருந்தார். அவரிடம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாமல் தடுமாறினார். பொறுப்பதிகாரியைத் தொலைபேசியில் அழைக்க அந்தப் பெண் எழுதுவினைஞர் பல முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது பயன் அளிக்கவில்லை.

அந்தக் காரியாலயத்தில் இருந்த மணிக்கூட்டு நேரத்தின்படி 2.30 வரை எந்த அதிகாரிகளும் அலுவலகப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச சபைத் தலைவியும் வெளியே வந்தபோது '' இன்று மட்டும் இல்லை; எந்தநாளுமே இப்படித் தான்'' என்று அங்கே நின்ற பொதுமக்கள் கூறினர். இது வரைகாலமும் இங்கே இருந்தவர்களைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை. அமைச்சர் புகழ்பாடினால் அவரை இலகுவில் சமாளித்து விடலாம் என்பதும் அதிகாரிகளுக்குத் தெரியும். அதனால் இவர்கள் திருந்தக் கொஞ்சக் காலம் எடுக்கத்தான் செய்யும் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

### அதிகாரிகளைத்தான் காண முடியவில்லை

> அந்தக் காரியாலயத்தில் இருந்த மணிக்கூட்டு நேரத்தின் படி 2.30 வரை எந்த அதிகாரிகளும் அலுவலகம் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை வராததினால் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச சபைத் தலைவியும் வெளியே வந்தபோது 'இன்று மட்டும் இல்லை; எந்த நாளுமே இப்படித்தான் " என்று அங்கே நின்ற பொது மக்கள் கூறினர்.



மக்களையாவது சந்திப்போம் என்ற நோக்குடன் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர். துணைவி-சங்கரத்தைக் கிராம அபிவிருத்திச் செயலகம், மாவடி ஆலயவீதி சன சமுகநிலையம், பண்டத்தரிப்பு பனிப்புலம் குஞ்சங்கடையடி, அராலி கலைமகள் சன சமுக நிலையம் ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் வருகையை அறிந்து கொண்ட பல பிரதேச சபை உறுப்பினர்களும் அவருடன் சேர்ந்து கொண்டு தத்தமது பிரதேசத் தேவைகளை விளக்கினர்.

### மர்ம மனிதனை நேரில் கண்ட முதல் பெண்மணி

பனிப்புலம், குச்சங்கடையடி, பண்டத்தரிப்பு என்ற விலாசத்தில் வசிக்கும் கந்தசாமி மீனலோசினி (41-வயது) என்ற பெண்தான் மர்ம மனிதனை நேரில் கண்டதை விவரித்தார். ''ஐந்து பிள்ளைகளின் தாயாரான நான், எனது கணவன் தொழிலுக்காக வெளி இடங்களுக்குச் செல்வதால் எனது கணவரின் சகோதரனின் குடும்பத்துடன் இரவு வேளைகளில் தங்குவது வழமை. கடந்த 7.9.2011 ஆம் திகதி அதிகாலை 3.30 மணி அளவில் ஆள் அரவம் கேட்டதால் வெளியே எழும்பி வந்தேன். ஓர் உருவம் என்னைத் தள்ளி விட்டதோடு எனது முகத்தை மெதுவாக விராண்டியது. இதனால் நான் அதிர்ச்சியடைந்ததுடன் உரத்துச் சத்தமிட்டேன். அப்போது அந்த மனிதன் ஓடி விட்டான். அவன் ஓடும்போது நான் நன்றாக அவதானித்தேன் கறுப்பு உடையும், முழங்காலுக்குக் கீழ் கறுப்பு இறப்பர் சப்பாத்தும் (ஆமிக்காரர்கள் அணிவது போல்) அணிந்திருந்தான். ஆனால் அவன் எப்படி ஓடித் தப்பினான் என்பதுதான் மர்மமாக இருக்கின்றது'' என்று மூச்சு விடாமல் கூறினார் அவர்.

பின்னர் துணவி-சங்கரத்தைக் கிராம அபிவிருத்திச் செயலகத்தில் மாதர்சங்கத் தலைவிகளுடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. அங்கு பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

### மழை ஓய்ந்தாலும் தூறல் விடவில்லை

போர் முடிந்துவிட்டது. மக்கள் அமைதியாக வாழ்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் உண்மை அதுவல்ல, தினசரி ஏதாவது ஒரு சம்பவம் இடம் பெற்றபடியே இருக்கிறது என்று குமுறுகின்றார்கள் மக்கள்.

''மர்ம மனிதப் பீதி எங்களை வாட்டிவதைக் கின்றது. குழந்தை குட்டிகளுடன் நிம்மதியாக உறங்க முடியவில்லை. விடிய விடிய மூன்று நான்கு குடும்பங்கள் ஒன்றாக ஒரே இடத்தில் தங்குகின்றோம். பயந்து பயந்து வாழுகின்றோம் எங்களுக்குப் பாதுகாப்பு வழங்க எவரும் இல்லை'' என்று கூறுகின்றார் அதேஇடத்தைச் சேர்ந்த மாரிமுத்து தவமணி என்ற குடும்பத்தலைவி.

### யுவதிகளுக்கு இலவச கணினிப்பயிற்சி

சங்கரத்தையில் சந்தித்த மாதர் அணியினர், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தனர். ''படித்த யுவதிகள் தொழில் வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னம் பல குரல்கள்



தமிழரசுக்கட்சி மீதும் கூட்டணி மீதும் பற்றுள்ளவர்கள் தற்பொழுது தமது தலைவர்கள் மத்தியில் ஐக்கியமும் ஒத்த கருத்தும் காணப்படவில்லை என்று வருத்தப்படுகின்றனர். ஒரே கட்சியில் இருந்து கொண்டு மாறுபட்ட வகையில் அறிக்கை விடுகின்றனர்.

**இரா. புத்திரசிகாமணி**

இன்றி சிரமப்படுகின்றனர். தையல் பயிற்சி மற்றும் தொழில் பயிற்சிகளைப் பெற்ற போதும் பொருளாதார வசதி இன்மையி னால் அவற்றையும் இடைநடுவில் விட்டுவிட்டார்கள். இவர்களுக்கு உதவ வேண்டும்'' என்று கேட்டனர். இந்த விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்வதாக உறுதிய ளித்த சரவணபவன், உடனடியாக ஐந்து பேருக்கு இலவசமாகக் கணினிப் பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்வதாகவும் அவர்களை மாதர் சங்கம் தெரிவு செய்து அனுப்ப வேண்டும் என்றார். இந் தச் செய்தி அங்கு கூடியிருந்த பெண்கள் மத்தி யில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

**பகலில் இராணுவம் இரவில் மர்மமனிதன்**

''நாங்கள் வீட்டுக்கு வீடு வேலிகளையும் தடுப்புகளையும் அமைத்துள்ளோம். ஆனால் பகல் வேளைகளில் ஆயுததாரிகளான இராணுவத்தினர் தாராளமாக சந்து பொந்துகளில் எல்லாம் திரிகின் றனர். இரவு வேளைகளில் எவரும் வீட்டுக்கு வெளியே வரக்கூடாது என்று மிரட்டுகின்றனர். எங்களுக்குச் காவல் இருக்கும் இளைஞர்களை விரட்டி விரட்டி அடிக்கின்றனர். வீடுகளுக்குள் திடீரெனக் குதிக்கும் மர்மமனிதர்கள் பெண் களைச் சீண்டிவிட்டு ஓடித்தப்பிவிடுகின்றனர். இராணுவத்தினர் மர்மமனிதர்களையும் பிடிப்ப தில்லை; பிடிக்க முயலும் இளைஞர்களையும் விட்டு வைப்பதில்லை வேலியே பயிரை மேய்வதுபோல். இராணுவத்தினரே எங்களுக்கு அச்சுறுத்தல் என்கின்றனர்'' செட்டிக் குறிச்சி மக்கள். இவர்கள் முகத்தில் பீதியின் சாயல் மறையவே இல்லை.

**தலைவர்கள் மீது கண்டனம்.**

சங்கானை மாவடி ஆலயவீதியில் அமைந் துள்ள சனசமுக நிலையத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு சற்றுவித்தியாசமாகக் காணப்பட்டது. இவர்கள் தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம் ஆகியோரின் வழித்தோன்றல்களாகக் காணப்பட்ட னர்.

தமிழரசுக்கட்சி மீதும் கூட்டணி மீதும் பற்றுள் ளவர்கள் தற்பொழுது தமது தலைவர்கள் மத்தி யில் ஐக்கியமும் ஒத்த கருத்தும் காணப்பட வில்லை என்று வருத்தப்படுகின்றனர். ''ஒரே கட்சியில் இருந்து கொண்டு மாறுபட்ட வகையில் அறிக்கை விடுகின்றனர். தொலைக் காட்சிகளுக் குப் பேட்டியளிக்கின்றனர். சில தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்கள் அரச சார்புத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாறினர். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுச் சிலரைத் தொலைபேசி மூலம் பேசவைத்துக் கட்சியை கொச்சைப் படுத்துகின்ற னர். இது எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும்'' என்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு நடைபெறும்

என பத்திரிகை வாயிலாக அறிந்தோம். ஆனால் அது பிற்போடப்பட்டதாக எந்த அறிவித்தலும் இல்லை. கட்சிப் பொறுப்பாளர்கள், அமைப்பாளர் களுக்குக்கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்க வில்லை என்றும் இவர்கள் கவலை தெரிவித்தனர்.

**ஈ.பி.டி.பி.யினரின் தில்லு முல்லுகள்**

வலி. மேற்கு வட்டுக்கோட்டை பிரதேச மக்கள் அரச சார்புக் கட்சியின் தில்லு முல்லுகளை விவரித் தனர். பிரதேச மக்களின் வீடமைப்புக்காக சமுர்த்தி நிதியத்தின் மூலம் தலா 40 ஆயிரம் ரூபா வழங்க பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போது, வலி. மேற்கு பிரதேச சபைக்கு தெரிவான மூன்று அரச சார்பு உறுப்பினர்கள். பெயர்ப்பட்டியலை எடுத்துக் கொண்டு வீடு வீடாகப் போய் '' நீங்கள் வீட்டுக்குத் தானே வாக்கு போட்டீர்கள். இது நாங்கள் வழங்கும் பணம். இதனை வெட்டி விடுவோம்,'' என அச்சுறுத்தி இருக்கின்றனர்.

'' இது அரசின் பணம் அல்ல. அரசு சமுர்த்தி நிதியத் தின் மூலம் வழங்கப்படுவது, இதனை எவராலும் தடுக்க முடியாது'' என தெளிவுபடுத்தி வருவதாக வலி. மேற்கு பிரதேச சபையின் தலைவர் திருமதி ரஞ்சனிதேவி ஜங்கரன் கூறினார்.

**கலைமகள் சனசமூக நிலையத்துக்கு ஒரு லட்சம்; யுவதிகளுக்கு தையல் இயந்திரம்**

அராலி கலைமகள் சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் பெருமளவு பெண்கள் கலந்து கொண்டனர். '' கிறீஸ் பூதம்'' வந்தால் அதை விரட்டியடிக்கத் தயாராகவே இருக்கின்றோம் என்றனர் அவர்கள். ''நாம் இன்னும் அதனைக் கண்ணால் காணவில்லை, கண்டால் தப்பியோட விடமாட்டோம் '' என்றனர் இப் பெண் கள்.

பல படித்த இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப் புகள் இன்றி இருக்கின்றனர் என்பதை அங்கும் அறிய முடிந்தது. அங்கு அமைந்துள்ள கலைமகள் சனசமுக நிலையத்தின் பணிகளுக்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்குவதாக குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் முதற்கட்டமாக உடனடித் தேவைக்கு தையல் இயந்திரம் ஒன்றையும் வழங்குவதாக வாக்குறுதியளித்தார்.

**விழிப்புக் குழுக்கள் யார் தலைமையில்**

மக்களின் பாதுகாப்புக்காக ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் விழிப்புக்குழுக்களை அமைத்து வருகின் றனர். அதனை வரவேற்கின்றோம். இந்தக் குழுக் களுக்கான பிரதிநிதிகள் அங்கு வாழும் மக்களின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களை மக்களே தெரிவு செய்ய வேண்டும். இங்கு அப்படி நியமிக்கப்படவில்லை. தாம் விரும்பியவர்களை நியமிக்கின்றனர். இந்த விழிப்புக் குழுக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆளுநரின் பொறுப்பிலேயே இயங்கும் என்று குறிப்பிட்டப்படுகின்றது. இது எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை'' என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை வலி. மேற் குப் பிரதேச சபை எல்லையில் வாழும் மக்களை கிராமம் கிராமமாகச் சென்று சந்தித்து மக்கள் குறை கேட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு வரவேற் பளித்த மக்கள் அவரது இந்தச் சேவை ஏனைய உறுப்பினர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைந் துள்ளது என்றும் பாராட்டினர்.

## அன்னரச அமிர்த சஞ்சீவி



அன்னரச அமிர்த சஞ் சீவி என்றால் என்ன வென்று தெரியுமா உங் களுக்கு?

ஒரு கிராமத்தில் இருந்த பழைய காலத்து வீட்டின் இருந்த அலு மாரியைச் சுத்தம் செய்த போது ஒரு பெரிய புத்தகம் கிடைத் தது. அந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்த பின்னர் தான் 'அன்னரச அமிர்த சஞ்சீவி' என்றால் என்ன என்று புரிந்து கொள்ள முடிந்தது.

'அன்னரசம்' என்றால் என்ன? 'அன்னம்' என்றால் சோறு. ரசம் என்றால் சாறு. அன்னரசம் என்றால் நீராகாரம். அதுதான் அன்னரச அமிர்த சஞ்சீவி. அந்த அளவுக்கு அதில் என்ன விசேடம் இருக்கிறது என்று நீங்கள் நினைக்க லாம். நிச்சயமாக இருக்கிறது.

பழைய சோறும் அதன் நீரும் சாப்பிட்டு வந்தால் உடம்புக்கு எவ்வித வியாதிகளும் வராமல் எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்று அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதாம்.

பழைய சோறு எப்படித் தயாரிப்பது என்ற விவர மும் அந்தப் புத்தகத்தில் இருக்கிறதாம். எப்படி யென்றால் ''இரவில் எஞ்சுகின்ற சோற்றில் தண்ணீரை ஊற்றி வைத்தால் மறுநாள் காலை யிலே அதுதான் பழைய சோறு என்று கூறுவார் கள். அப்படி அல்ல. இதற்கும் சில நுணுக்கங்கள் இருக்கின்றன.

குக்கரில் சாதம் தயார் செய்யும் காலம் இது. அந்தக் காலத்தில் அப்படியில்லை. இரவு சோறு வடிக்கப்பட்டதற்குப் பின்னர் ஒரு பாத்திரத் திலே சுத்தமான தண்ணீரை விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும்.

சோறு வடித்த கஞ்சியில் படிந்திருக்கும் ஆடையை நீக்கிவிட்டு அந்தக் கஞ்சியைக் குடும்பத்துக்கு தேவைப்படும் அளவுக்கு எடுக்க வேண்டும். இரண்டு பங்கு கஞ்சி; ஒரு பங்கு கொதித்து ஆறிய தண்ணீர். இது இரண் டையும் ஒரு பாத்திரத்தில் கலந்து வைக்க வேண்டும். இரவு எல்லோரும் சாப்பிட்ட தற்குப் பின்னர் மிகுதியாக இருக்கும் சோற்றில் இதை ஊற்றி மூடி வைத்து விட வேண்டும்.

காலையெழுந்து சாப்பிடத் தயாரானதும் ஒரு பாத்திரத்தில் சோற்றை எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் இரண்டு அங்குல உயரத்துக்கு அந்தத் தண்ணீரை ஊற்ற வேண்டும். உப்புப் போட்டு ஊறுகாயுடன் சோற்றைச் சாப்பிட்டு அந்தத் தண்ணீரையும் குடியுங்கள்.


மழைகாலம், குளிர்காலம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆயுள் முழுவதும் சாப் பிட்டுக் கொண்டே வரலாம். இப்படிச் சாப்பிட் டுக் கொண்டு வந்தால் எந்தக் காலத்திலும் எந்த நோயும் வராது என்கிறார் அந்த நூலின் ஆசிரியர்.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை எல் லோரும்இப்படிச்சாப்பிடலாம். ஆறுமாதம்தொடர்ந்து இப்படிச் சாப்பிட்டு வந்தாலே அதனுடைய பலனை நீங்கள் உணர ஆரம்பித்து விடுவீர்கள்.

இந்தப் பழைய சோற்றில் தயிர், மோர் விட்டு சாப்பிடக் கூடாதாம். ஏனென்றால் சோம்பேறித் தனம், கொட்டாவி, தூக்கம், மந்தபுத்தி எல்லாம் வந்து விடுமாம். இவையெல்லாம் ஒரு மகான் அனுபவத்தில் சோதித்துப் பார்த்து எமக்கு சொல்லியிருக்கின்ற விடயங்கள்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஆலய பெருந்திருவிழாவில் நல்லூர் சைவமகா சபை நடத்திய தெய்வீக இசைப் பேருரை நிகழ்வில் பேருரை நிகழ்த்திய கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ.சிவ.வை.நித்தியானந்த சர்மாவுக்கு சிவத் தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (வ)

# மனிதர்கள் சேவை செய்யும் காலத்திலேயே கொடுக்கப்படும் கௌரவமே உன்னதமானது

## உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

மனிதர்கள் சேவை செய்யும் போது, வாழும்போது கொடுக்கப்படும் கௌரவமே மேலானது; உன்னதமானது. அதை விடுத்து மனிதர்கள் இல்லாதபோது புகழ்பாடுவது விழலுக்குஇறைத்த நீர் போன்றது.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபரின் பிறந்தநாள் நிகழ்வு மாணவத் தலைவி சி.சாம்பவி தலைமையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்புரையாற்றிய அதிபர் திருமதி சிராணி மில்ஸ் மேலும் தெரிவித்ததாவது:

எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது என வேதவசனத்தில் கூறப்படுவது போல் நானும் மகிழ்ச்சியில் நிரம்பி வழிகின்றேன்.

வள்ளுவரின் 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன் கண்ணீர் பூசல் தரும்' எனும் திருக்குறள் நினைவுக்கு வருகின்றது.

மாணவர்களது செயற்பாடு என்மீது உள்ள அன்பை வெளிப்படுத்தியதுடன் மாணவர்கள் ஆளுமைகளையும் திறமைகளையும் வினைத் திறனையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மாணவர்களது ஆளுமை மிக்க செயற்பாடே பாடசாலையின் நன்மதிப்பைப் பேணுகின்றது. 2005 இல் இந்த உடுவில் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றேன்.

இன்றுவரை ஆசிரியர்கள்-மாணவர்களது உதவியோடு பாடசாலையின் பெயர் அன்று போல் இன்றும் மங்காப் பொலிவுடன் திகழ்வதையிட்டு மகிழ்வடைந்து, பெருமையடைகிறேன்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் சிந்தனையும் நோக்கமும் சிறப்பானதாக அமைய வேண்டும்.

மாணவர்கள் பெரியோரை மதித்தல், உதவிசெய்தல், குருவுக்குக் கீழ்ப்படிதல், சமூக விருத்தியில் அக்கறை கொள்வதுடன் சுயநலப் போக்கையும், மற்றவர்களை குறை சொல்லும் பண்பையும் அடியோடு இல்லாது ஒழிக்க வேண்டும்- என்றார். (ம-302)

# மறைந்துபோன கலைகளை ஆராய்ந்து வெளிக்கொணர்வது காலத்தின் கட்டாயம்

## கண்டாவளைப் பிரதேச செயலர்

கண்டாவளை, செப்.21

எமது பிரதேசத்தில் மறைந்து போன கலையம்சங்களை ஆராய்ந்து அதனை வெளிக் கொணர்ந்து இளம் சமூகத்துக்கு எடுத்துக்காட்டுவதுடன் அதனைப் பாதுகாக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் பிரதேச கலைஞர்களை ஊக்குவித்தும் அவர்களுக்கு நாம் களம் அமைத்துக் கொடுக்கவும் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன்.

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையின் நிர்வாக சபையின் முதலாவது அமர்வு அண்மையில் இடம்பெற்றபோது தலைமை உரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

எமது பிரதேசத்தின் புகழ் மிக்க விடயங்கள் பலவற்றைக் கேட்டும் அறிந்தும் இருக்கும் நாம் அதனை ஒரு நூல் வடிவமாக அடுத்த சமூகத்துக்குக் கொடுப்போமானால் அதுவே நாம் முன்னெடுக்கும் திட்டத்தின் முதல் வெற்றியாகும்.

எல்லோரும் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களை இனம்கண்டு அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பது முக்கியம் வாய்ந்ததாகும். -என்றார். (வ-421)

# தகவல் தொழில்நுட்பம், சட்டம் ஆகிய துறைகளில் மாணவர்கள் உயர் நிலைக்கு வர வேண்டும்

## கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி, செப்.21

தகவல் தொழிநுட்பம், சட்டம் போன்ற துறைகளில் கற்று எமது மாணவர்கள் உயர் நிலைக்கு வரவேண்டும் என்று கிளிநொச்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா தெரிவித்தார்.

கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மதிவதனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:-

கடந்த காலங்களில் எமது பகுதிகளில் இடம்பெற்ற யுத்தம், இடப்பெயர்வுகள் போன்றவற்றின் காரணமாக எமது பிள்ளைகள் கல்வியைத் தொடர்ந்து கற்பதிலும், தொழில்நுட்பத் துறைகளில் மேம்பாடடைவதற்கும் ஏதுவான நிலைகள் அற்று பல சிரமங்களை எதிர்நோக்கிய நிலையிலேயே காணப்பட்டனர். எனினும் அந்த வேளைகளிலும் எமது பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக்காட்டப் பின் நிற்கவில்லை.

எமது பகுதிகளில் எத்தனையோ கணினி வல்லுநர்கள் இருந்தார்கள். பலராலும் தீர்வு காண முடியாத கணினிசார் பிரச்சினைகளைக் கூட தொண்டராகப் பணிபுரிந்த ஒருவரால் தீர்க்க முடிந்தது. இது கூட சிறிய எடுத்துக் காட்டுத்தான். எமது பிள்ளைகள் கணினி அறிவை முறைப்படி கற்று மென்மேலும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தகவல்தொழிநுட்பம் பல்வேறு துறைகளில் தமது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. ஆக்கத்துக்கும் அழிவுக்கும் இதனைப் பயன்படுத்தலாம். எனினும் அழிவைவிடுத்து ஆக்கத்துக்கே இதனைப்பயன்படுத்த வேண்டும். பல அழிவுகள் கூட இதன் மூலம் முன்கூட்டியே அறிந்து தவிர்க்கப்படுகின்றன.

பாடசாலைப் பாடத்திட்டத்திலே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொதுத் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனைக் கற்க வேண்டிய தேவைப்பாடு மாணவர்களுக்கு அவசியமானதாகவும் பயனுடையதாகவும் உள்ளது. இதற்கு கணினிப் பயிற்சி நிறுவனங்கள் பெரிதும் கைகொடுத்து உதவுகின்றன.

எமது பிள்ளைகள் தகவல் தொழில்நுட்பத்துடன் சட்டத் துறையையும் கற்க வேண்டும் இதன் மூலம் கல்வி நிலையை மென்மேலும் உயர் நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் -என்றார்.

இந்த நிகழ்வுக்கு கரைச்சிப் பிரதேச சபை உபதலைவர் வ.நகுலேஸ்வரன் பாடசாலை அதிபர்களான பங்கையற்செல்வன், குகானந்தராசா, திருமதி ஜெயராஜ் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (வ-426)

# அதிபர் நியமனம்

காரைநகர், செப்.21

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் அதிபராக வேலுப்பிள்ளை முருகமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ற்ரன் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய தி.சோமசேகரம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் மகாவித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றி வந்த வே.முருகமூர்த்தி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த வாரம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (வ-250)

# அருள் ஞானப் பனுவல் பட்டம் வழங்கி கௌரவிப்பு



அளவெட்டி நாகேஸ்வரன்ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தான ஆலயத்தில் மஹோற்சவ காலங்களிலும்-ஏனைய காலங்களிலும் கூட்டுப் பிரார்த்தனை ஆற்றிய நவாலியூர் சிவஸ்ரீ இ.சபாரத்தின சிவத்துக்கு 'அருள் ஞானப்பனுவல்' சிறப்புப் பட்டம் வழங்கி ஆலயத்தினர் கௌரவித்துள்ளனர்.

சாவல்கட்டு துர்க்கை அம்மன் ஆலயத்தில் இவர் பண்ணிசை மற்றும் பஜனை நிகழ்வுகளை மேற்கொண்டமைக்காக பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அருள்கவி வினாசித் தம்பியால் இ.சபாரத்தின சிவத்துக்கு சைவச்சுரபி எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலயத்தின் பிரதம குருவும்- ஆலய உரிமையாளரும் ஆக இருந்து ஆன்மிகப் பணிஆற்றி சமூக சேவை செய்து வருபவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-302)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள்

**பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

ம.கேசிகன்-168, க.சாரங்கன்-155, பி.அனோஜன்-156, சு.யசோதினி-157, மோ.மகிஜா-157, ம.ஜனனி-158.

**உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

ஜெ.அகிலன்-181, இ.கலைப்பருதி-180, ஞா.கயானி-171, த.சமரழகன்-170, செ.கௌசிக்-169, அ.ரிசாளினி-166, த.புனர்வசன்-163, பா.துளசிகா-163, கோ.கோமைந்தன்-160, சி.ரிஷிகீதன்-157, ர.ஜிந்திசன்-155.

**கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

ப.டனோஜன்-178, அ.அனுசியா-171, மை.மதுபாலன்-168, ஜெ.ஜனுஸ்சன்-168, அ.அபிராஜ்-167, சு.கணுஜன்-166, ஜெ.துபாகரன்-165, யே.டிலக்சன்-163, ந.சுஜீவன்-162, வ.கிருசாந்-156, நா.கிரிஜன்-154, ம.பிரிந்தன்-153, அ.வர்ணன்-151, வ.லவன்ஜன்-149.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் ஒதுக்குகிறோம்?

சம்பவம்-1

இப்போது பனம்பழ சீசன் என்பதால் பனாட்டு வாங்கி அனுப்பும்படி அந்த வயதானவரைப் புலம்பெயர் உறவு ஒன்று கரைச்சல்படுத்திக் கொண்டிருந்தது. அந்த ஆய்க்கினை தாங்க முடியாமல் ஒருநாள் பனாட்டு வாங்கும் பணிக்காகப் பெரியவர் புறப்பட்டார். கடையில் வாங்கும் பனாட்டு சிலவேளைகளில் காலைவாரிவிடும் என்பதால் வழமையாகப் பனாட்டுப் போடுகின்ற சொந்தக்காரர்களின் வீட்டுப்பக்கமாக அவரது கால்கள் சென்று மீண்டதுதான் மிச்சம். ஓர் இடத்திலும் பனாட்டு இல்லை.

''இப்ப வேலையள் கூடிப்போச்சு. அதுக்குள்ள உந்தப் பனாட்டைப் போட எங்க ரைம்? அப்பிடி வார்த் தாலும் உங்களை மாதிரி ஆரும் தெரிஞ்சவை வந்து வாங்கினாத்தான் அது விலைப்படும்.இல்லாட்டி வரியம் முழுக்கக் கிடந்து நாறவேண்டியதுதான். எங்கட பெடி பெட்டையளும் பனாட்டைச் சாப்பிடுறேலை''.

இப்படிப் பல காரணங்கள் அடுக்கப்பட்டன. என்றாலும் தோல்வியோடு செல்வதற்கு அவரது மனம் இடமளிக்கவில்லை. எப்படியாவது பனாட்டை வாங்கிக் கொண்டே செல்வது என்பதில் உறுதிகொண்டவராக, பயணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார். அவரது கழுகு மூக்குக்குப் பனாட்டு வாசனை சட்டென அடித்தது. வாசனை வந்த பக்கமாக எட்டிப்பார்த்தார்.வீட்டின் பின்புறமாகத் தடுக்கில் பனாட்டுக் காய்ந்து கொண்டிருந்தது. தன்னுடைய தேடுதலுக்கு முடிவு வந்துவிட்டதை எண்ணி மகிழ்ந்து கொண்டே அந்த வீட்டினுள் பெரியவர் நுழைந்தார்.

''வாங்கோ! என்ன திடீரெண்டு இந்தப்பக்கம்?''

பல்கலைக்கழகத்தில் பயிலும் அந்தவீட்டுப் பிள்ளை புன்னகையோடு அவரை வரவேற்றாள்.

''பனாட்டு வாங்குவமெண்டு வெளிக்கிட்டன். உங்கட வீட்டை இருக்கெண்டு கேள்விப்பட்டன்.''

வந்தவிடயத்தைச் சொன்னதும் அந்த யுவதியின் முகம் ஒருமாதிரிச் சுருங்கிவிட்டது.

''பினாட்டோ? இப்ப அம்மா அதைப் போடுறதில்லைப் போல.எதுக்கும் அம்மாவோட கதையுங்கோ'' என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டே- ஏதோ சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்ட பாவனையில்- அந்தப்பெண் அகல, அவளின் தாயார் வெளிப்பட்டார்.

''நான் பினாட்டைக் கேட்டவுடனேயே பிள்ளையின்ர முகம் மாறிட்டுது. ஏன்?'' என்று எடுத்த எடுப்பிலேயே அவர் கேட்டுவிட்டார்.

''அதொண்டுமில்லை. அவளுக்கு உதுகள் போடுறது பிடிக்காது. மரியாதைக் குறைவா நினைக்கிறாள். அவளின்ர ப்ரண்ட்ஸ் அண்டைக்கு வீட்டை வரேக்க நான் பனாட்டுக்குப் பனம் பழம் பினைஞ்சு கொண்டு நிண்டனான். அதை அந்தப் பெட்டையள் பிறகு நக்கலடிச்சதுகளாம்.அதுக்குப் பிறகு இவளும் பனாட்டுப் போடவேண்டாமெண்டு ஒற்றைக் காலில நிக்கிறாள்.''

புலம்பியவாறே உள்ளே சென்று பனாட்டை எடுத்துக் கொடுத்தார் அந்தத்தாய்.

## கோணல் கோலங்கள்

சம்பவம்-2

மண்டைக்கு நேரே சம்மணமிட்டு உட்கார்ந்தபடி சூரியன் வெக்கையால் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான்.நாக்கில் ஒரு சொட்டுத்தண்ணீர் இல்லை. ஏதாவது குடிக்கவேண்டும் போல இருந்தது. அருகில் இருந்த நண்பருக்கும் தாகத்தில் தொண்டை வரண்டிருக்கவேண்டும்.

''சோடா ஏதாவது குடிப்பமா?''

வாய்விட்டே கேட்டுவிட்டார். சரியென்று தலையாட்டிவிட்டு, பஸ்ராண்டுக்கருகில் சைக்கிளில் வைத்து இளநீர் விற்பனை செய்துகொண்டிருந்தவரிடம் இரண்டு இளநீர்களைச் சீவித் தரச்சொல்லிவிட்டு, 'எப்பிடி என்ர வேலை?' என்பது போல நண்பரின் முகத்தைப் பார்த்தேன். அவர் சங்கடப்படுவது தெரிந்தது.

''இளநீ உங்களுக்குப் பிடிக்காதோ?'' என்று மனசில் இருந்ததை வாய்விட்டே கேட்டுவிட்டேன்.

அப்பிடியெண்டில்லை. சோடாவை றோட்டில நிண்டு குடிக்கலாம்.ஆனா இளநீயை றோட்டில நிண்டு குடிக்கிறதை ஆரும் பார்த்தால் என்ன நினைப்பினம்?'' தன் சங்கடத்துக்கான காரணத்தை அவர் சொன்னார்.

றோட்டில நிண்டு சாராயம், கசிப்பு குடிச்சாத்தான் பிழை. இளநீ குடிக்கலாம் என நக்கலாகச் சொல்லிக்கொண்டே இளநீரை ஒரேமூச்சில் குடித்து முடித்துவிட்டு நிமிர்ந்த போது, நண்பரும் இளநீரைக் காலி செய்திருந்தார்.

''அடப்பாவி! இவ்வளவு விடாயை வைச்சுக் கொண்டோ இளநீ குடிக்க வெக்கப்பட்டனீ?'' எனக் கேட்டுக்கொண்டே அவருடன் நகர்ந்தேன். நண்பரைப் போலவே பல இளைஞர்களும் யுவதிகளும் இளநீரைப் பார்த்து வாயூறியபோதும், வெட்கம் காரணமாக அவ்விடத்தைவிட்டு அகன்று சென்று, கடைகளுக்கு வெளியே ஸ்டைலாக சோடாப்போத்தல்களை கைகளில் ஏந்திக் கொண்டிருந்தனர். இவ்வாறான நிறையச்சம்பவங்களை நீங்களும் பார்த்திருப்பீர்கள்.நமது உள்ளூர்த்தயாரிப்புகளை மரியாதைக் குறைவான விடயமாகக் கருதும் மனோநிலை இளைய சமுதாயத்தினரிடையே பெருகி வருகின்றது. உடலுக்குத் தீமை பயக்கக்கூடிய - பன்னாட்டு நிறுவன உற்பத்திகளை- ஸ்டைலாக, நாகரிகமாகக் கருதிப் பயன்படுத்தும் இளைஞர்கள் அவற்றைவிட ஆரோக்கியமும், சுவையும் கூடிய உள்ளூர் உற்பத்திகளை அரியண்ட மான பொருளாக நினைத்து வெறுத்து ஒதுக்குகிறார்கள். ஆனால் நமது உள்ளூர்த் தயாரிப்புகளுக்கு வெளியிடங்களில் இதற்கு எதிர்மாறாக மவுசு பெருகி வருகின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனம் பொருள்கள் உள்ளிட்ட உற்பத்திகள் , இங்கு நுகரப் படுவதையும்விட, தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருப்போரால் பயன்படுத்தப்படும் விகிதம் அதிகம்தான். அண்மையில் உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்யும் கடையொன்றுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கும் ஆவலோடு அந்தப் பொருள்களை சிங்கள மக்களும், வெளிநாட்டுப் பிரஜைகளும்தான் வாங்கிக்கொண்டிருந்தனர். சற்றுத் தூரத்தே ''ஏனடா உதுகளையெல்லாம் உவங்கள் வாங்குறாங்கள்'' என ஆச்சரியமும் கேலியும் கலந்து பார்த்துக் கொண்டிருந்தனர் எங்கள் இளைஞர்கள் சிலர்.

**ஓடுகாலி**

அவர்களை நினைக்க பாவமாகத்தான் இருக்கிறது. பக்கத்தில் இருக்கும் போது வைரமும் கூழாங்கல் போலத்தான் இருக்குமாம். அதைப்போல நமக்கு இலகுவில் கிடைக்கும் பொக்கிஷங்களை நாங்கள் தொடர்ந்து உதாசீனப்படுத்திக் கொண்டேயிருக்கிறோம். ✱


## வாழ்த்துகின்றோம்



பாலசுப்பிரமணியக்குருக்கள்-கௌரீஸ்வரி
தம்பதியினரின் செல்வப் புதல்வி
**பாலமயூரி**
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் கல்வியிலும் பல துறைகளிலும் சிறந்து விளங்க எமது கொண்டலடி விநாயகரின் அருளாசியுடன் வாழ்த்துகின்றோம். மேலும் இவருக்கு கல்வி புகட்டிய வகுப்பாசிரியர் மற்றும் அதிபர்,உப அதிபர், ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்த்துபவர்கள்
பாசமிகு அண்ணன்மார், அக்காமார்.


## யாழ்.மதுவரித் திணைக்களத்தால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களத்தினால் மதுபாவனை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பிரதேசங்கள் தோறும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 14ஆம், 15 ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்.மதுவரித் திணைக்களமும், விழுது நிறுவனமும் இணைந்து விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தியது.

பலாலி, கொடிகாமம், மட்டுவில், யாழ்.நகர், இருபாலை, உரும்பிராய் செல்வபுரம் ஆகிய பிரதேசங்களில் இந்தக் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

இதில் யாழ்.மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் நா.சோதிநாதன், யாழ். மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி கே.கிருபாகரன், சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ந.ஸ்ரீகாந் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இந்தக் கருத்தரங்கில் மதுபாவனையால் சமூகத்தில், குடும்பத்தில் உண்டாகும் விளைவுகள், மதுபாவனையாளர் உடல் ரீதியாகப் பெறக் கூடிய தாக்கங்கள் மதுபாவனையைத் தவிர்ப்பதற்கான அறிவுரைகள், போன்ற பல்வேறு கருத்துரைகள் [illegible]


## சேவை நலன் பாராட்டு

திரு.ம.செபஸ்தியாம்பிள்ளை S.L.P.S -I
முன்னாள் அதிபர் யா/ சென்மேரிஸ் வித்தியாலயம் (OLR)
கடந்த 07.05.1999 தொடக்கம் 21.09.2010 வரை எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி 21.09.2011 உடன் ஓய்வு பெற்றுச் சென்ற எமது பாடசாலை அதிபர் திரு.ம.செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் சிறந்த முறையில் கழிப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் அவருக்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ சென்மேரிஸ் வித்தியாலயம் (OLR)
யாழ்ப்பாணம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா நவநீதநாதன் (நவம்)

தோற்றம் : 12-12-1945 மறைவு : 02-10-2010



அன்புடன் எப்பொழுதும் என்னை அரவணைத்தவரே
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது என் துயர்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அணையாது என் துயர்
குடும்பத்துக் நல் குல விளக்காய்
நானிலம் போற்ற நல் கணவனாய்
தரணிவியக்க நல் தந்தையாய்
உறவுகளுக்கு உற்ற நண்பனாய்
சமூகத்தாரோடு நல் சகோதரனாய்
நிமிர்ந்த உம் நடை காண என் நிந்தை ஏங்குகின்றது
நித்தமும் நீர் என்னோடு இருக்க நினைக்கிறது நெஞ்சம்
உம் முகம் காணாது ஏங்குகின்றேன் தினம்
உமது ஆத்மா சாந்தியடைய வேண்டி [illegible]

ஓடக்கரை வீதி,
சங்கானை.

மனைவி


(வ-313)


## 3 ஆம் வருட இதய நிழல்கள்

அமரர்
பொன்னையா குணசேகரம்
(பாஸ்கர்-வர்த்தகர்)
திதி:21.09.2011



சந்ததியாக
25-07-1965

சரித்திரமாக
23.09.2008

ஓடும் வருடங்கள் மூன்று ஆனதே- உம்மை
தேடிடும் கண்களில் சுண்டிடும் நீர்த்துளிகள்
வாடிய மனங்களில் அழியாத உம் உருவம்
சுமக்கின்றோம் நாம் நீர் சுமந்த கனவுகளை
விதியை வெல்ல மதியால் முடியுமோ?
மனித சதியை வெல்ல விதியால் முடியுமோ?
மாலையும் கழுத்துமாய் காண நினைத்தீர்-எம்மை
பாடையும் பறைமேளமுமாய் அடைந்தீர் விண்ணை
மீண்டும் வந்து பிறந்திடும் எம்மிடம்- அதுவரை
மீளாத் துயில் கொள்ளும் மண்ணிடம்

செல்ல மகால்,
செல்வநகர், நாவற்குழி

மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sub Woofers

KARAOKE SPEAKER 2.0 10500W

2.0 Channel with low noise
With wireless mic
output power:
10500W (PMPO)
Distortion 0.1% at 1 Khz
Available in:
Reddish brown, Black

IT-2425 (with FM & USB)

INTEX
DEMAND MORE

2.1Channel surround sound system
Beats sounds clarity
Aesthetically superior
Slim Satellite Speakers
FM Function with Remote control
Available in: Black

Rs. 4,500/- upwards



Home Theater 4650 Elegant

Home Theatre 5.1 Channel USB SD IT-5450

Sub Woofer 3000W 2.2

IT-1825 Beats



Headphone

USB Headphone Oasis — Rs. 1750/-

Wireless Headphone IT-005FM — Rs. 1750/-

Sensation IT-7000 — Rs. 950/-

IT-HP893SM — Rs. 680/-

Smart HP-311SB — Rs. 600/-

IT-NP826B Back Neck — Rs. 420/-



MICRO PC SYSTEMS

No.115C, W.A.SILVA Mw., Colombo - 06.
Tel: 0112367405, 0114016764 Fax:011 2367675

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | : 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 021 222 5893 |
| நெல்லியடி | : கொடிகாமம் வீதி, நெல்லியடி. | 021 226 2929 |
| கிளிநொச்சி | : 854,தொண்டமான் நகர், ஏ-9 வீதி. | 021 228 5593 |
| வவுனியா | : 73, 2 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. | 024 222 1969 |
| கொட்டாஞ்சேனை | : 82, புதிய செட்டித் தெரு. | 011 239 5775 |
| கொழும்பு | :115 C,W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06. | 011 236 7405 |


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## FACULTY OF AGRICULCURE

### ADMISSION OF PUBLIC OFFICERS

### FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2010/2011)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2010 / 2011.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Senior Assistant Registrar, Students Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna Account Number 162100160000880, University of Jaffna Branch.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 7th October 2011.**

No application will be entertained after the closing date of application.

Applications should be forwarded through the relevant Heads of Department. Applications that are not routed through the relevant Heads of Departments will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

19.09.2011 REGISTRAR


பாராட்டி வாழ்த்தும் 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



மானிப்பாய், சோதிவேம்படி
மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி
கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் 169
புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததுடன்
இன்று 21.09.2011 தனது 10ஆவது பிறந்த
நாளைக் கொண்டாடும்
திரு. திருமதி சுதர்சன் - சுகிர்தா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
துலக்ஷன்
அவர்களைப் பாராட்டுவதுடன் இனிவரும்
காலங்களில் உயர் கல்விகளைப் பெற்று சீரும்
சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா
பிள்ளைகள் மற்றும் சித்தா, சித்தி
பிள்ளைகள் மற்றும் சித்தா (பிரபா)

நவாலி வடக்கு, மானிப்பாய்



சாருகா
உடற்பயிற்சி நிலையம்



இடம் :- அம்மன் கோயிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி
(குஞ்சர் கடைச் சந்திக்கு அருகில்)
10.09.2011 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது
சேவை நேரம் :- காலை 6.00 - 10.00 மணி வரை
மாலை 4.00 - 8.00 மணி வரை

தொடர்பு:- 0789135060,0217911850


## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடங்கள்

மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படுகின்ற பதவிகளுக்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.பதவி :-தட்டெழுத்தாளர்(தமிழ்)
வெற்றிட எண்ணிக்கை :-01
சம்பளக் குறியீட்டு இலக்கம்:-305/15
சம்பள அளவுத்திட்டம் :-9450-11000
75X10-80X10

தகைமைகள்:-
(அ) க.பொ.த (சா/த)இல் தமிழ் மொழியை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தியும், தமிழ்த் தட்டெழுத்தாற்றல் நிமிடம் ஒன்றுக்கு 20 சொற்களாகவும் இருத்தல் வேண்டும்.

2.பதவி :-காசாளர்
வெற்றிட எண்ணிக்கை :-01
சம்பளக் குறியீட்டு இலக்கம் :-306/15
சம்பள அளவுத்திட்டம் :-9450 -11000
75X10-80X10

தகைமைகள் :-
(அ) கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு(2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சா/த) சான்றிதழ் அல்லது க.பொ.த .(சா/த) இல் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றின் காசாளர் பதவியில் அல்லது வியாபார நடவடிக்கைகளில் ஒரு (01) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

3.பதவி :-சாரதி
வெற்றிட எண்ணிக்கை :-01
சம்பளக் குறியீட்டு இலக்கம் :-312/15
சம்பள அளவுத் திட்டம் :-9450 -11000
75X10-80X10

தகைமைகள்:-
(அ) எட்டாம் வகுப்பு கல்விச் சான்றிதழும் மோட்டார் கார் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வாகனம் செலுத்துதலில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

4.பதவி :-களஞ்சிய முகாமையாளர்
வெற்றிட எண்ணிக்கை :-03
சம்பளக் குறியீட்டு இலக்கம் :-208/16
சம்பள அளவுத் திட்டம் :-9200 -10650
70X10-75X10

தகைமைகள்:-
(அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையிலான பதவியொன்றில் இரண்டு(2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சா/த) சான்றிதழ் அல்லது க.பொ.த.(சா/த) இல் எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

5. பதவி :-அலுவலக சிற்றூழியர்
வெற்றிட எண்ணிக்கை :-01
சம்பளக் குறியீட்டு இலக்கம் :-317/17
சம்பள அளவுத் திட்டம் :-8950 -10300
65X10-70X10

தகைமைகள்:-
(அ) 8 ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

ஏனைய விவரங்கள்:-
6.கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.
7.விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். வேறு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8.விண்ணப்பப்படிவங்களை *மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம், பிரதான வீதி, மானிப்பாய்* என்னும் முகவரியில் அமைந்த சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வார நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
9. விண்ணப்பம் முடிவு திகதி-05.10.2011
10. வயதெல்லை : 18-45
11. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
12. தட்டெழுத்தாளர், காசாளர் போன்ற பதவிகளுக்கு கணினி அறிவும், க.பொ.த.(உ/த) வணிகத்துறையிலான சித்தியும் மேலதிக தகைமையாக எதிர்பார்க்கப்படும்.
13. சங்க எல்லைப்பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்
20.09.2011 மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,பிரதான வீதி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் நூற்றாண்டு விழாக் காணவுள்ள கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்



தொண்ணூற்றி மூன்று வருடங்களைத் தாண்டி அடுத்து வரும் ஏழு ஆண்டுகளில் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ளது கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம் ஆரம்பத்தில் ஒரு ஓலைக் கொட்டிலாகவும் பின்பு நிரந்தரக் கட்டடத்தோடும் தற்போது மேலும் பல கட்டடங்களைக் கொண்ட தாகவும் உள்ளது.

''கல்லான் நெஞ்சில் நில்லான் ஈசன்'' என்ற வாசகத்தை இலட்சியமாகக் கொண்ட இந்தப் பாடசாலை சைவப் பிள்ளைகளுக்கென ஒரு பாடசாலை இல்லை என்ற குறையைப் போக்க சுவாமி மகாதேவா மூலம் ஆரம்பிக் கப்பட்டது. இதனால் இங்கிருந்த கிறிஸ் தவப் பாடசாலை ஒன்று மக்கள் ஆதர வின்றி மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

1918 ஆம் ஆண்டு 80 அடி நீளமான ஓலைக் கொட்டிலில் இது ஆரம்பமானது. வைரவநாதர் ஏரம்பு ஆ.சோமசுந்தரம் பிள்ளை, த.தருமலிங்கம், சி. அம்பலவாணர் போன்ற பலரின் ஒத்துழைப்புடன் சுவாமி மகாதேவா இதனை ஆரம்பித்தார்.

இந்தப் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பாளராக கிறிஸ்தவராக இருந்து சைவராக மாறிய ஆசிரியர் ஒருவர் விளங்கினார். இங்கு ஆரம்பக்கல் வியைப் பயின்றவர்களில் ஊர்காவற்று றைத் தொகுதியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் வ.நவரத்தினம், முதலியார் குலசபாநாதன், பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை, எழுத்தாளர், சோ.சிவபாதசுந்தரம், நாதஸ்வர வித்துவான் க. துரைசாமி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்

அந்தக் காலத்தில் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு பிடியரிசி முக்கி யம் பெற்றிருந்தது. அதற்கு சண் முகநாத வித்தியாலயமும் தப்பவில்லை. இந்தப் பாடசாலையின் புதிய கட்டடம் 1921 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் அமைப்பதற்குத் தேவையான பனை மரங்களை ஊர்மக்களும் தீராந்தி மரங்களை மட்டக்களப்பு வள்ளல் வைத்திலிங்கம் குடும்பத்தினரும் கூரை ஓடுகளை நல்லெண்ணம் கொண்ட பெருமக்களும் வழங்கினார்கள். சுவாமி மகாதேவா வீடு வீடாகச் சென்று பிடி யரிசி சேர்த்தார்.

இந்தப் புதிய கட்டடத்தைக் கட்டி முடிக்க முக்கியமாகப் பங்காற்றியவர் மேசன் வேலுப்பிள்ளை சீனித்தம்பி இதன் அத்திபாரம் இராம கிருஷ்ண மடத் துறவியாக இருந்த சுவாமி சர்வானந்தாவினால் இடப்பட்ட தாகும். புதிய கட்டடம் அமைக்கப்பட்டதும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஏ.ரி. இராசையா அதிபரானார். அன்றைய கல்வி நிலை மிகவும் உயர்ந்து காணப்பட்டதாகவும் சேவையில் இருந்த ஆசிரியர்கள் ஆங்கிலப் புலமை மிக்க வே. தம்பிப்பிள்ளை தமிழில் புலமை மிக்க ஆ. சோம சுந்தரம்பிள்ளை மண்டைதீவைச் சேர்ந்த சி. கந்தையா தம்பதியினர் இசை வள்ளல் கட்டுடை வ. கணபதிப்பிள்ளை ஆகியோர் மறக்க முடியாதவர்கள் என் கின்றனர் அந்தப்பகுதிமக்கள்.

புதிய கட்டடம் கட்டிய இரண்டாவது ஆண்டில் பரிசளிப்புவிழா சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. அன்றைய நாளில் அவரது கையினால் நிறைய பரிசில்களைப் பெற்றுக் கொண்டவர் எழுத்தாளர் கோ. சிவபாத சுந்தரமாவார்.

கரம்பொன் மேற்கு சண்முகநாதன் திருக்கோயிலுக்கு குஞ்சரியம்மா என்னும் பெண்மணி வழங்கிய காணியில் இந்தப் பாடசாலை அமைந்ததால் சண்முகநாத வித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டதாகும். ஊர்மக்களின் சிறிய அளவிலான உதவிகளுடன் இயங்கி வந்த இந்தப் பாடசாலை 1924இல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் இணைந்து கொண்டது. இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல கதாப்பிரசங்கி களான ஸ்ரீசங்கரசுப்பையா சுவாமிகள், நாகலிங்கம் என்பவர்களின் கதாப்பிர சங்கங்கள், சொற்பொழிவுகள் என்பன அதிகமாக இடம்பெற்றுள்ளன. நாகலிங்கம் அம்பலவாணர் முகாமையாளராக இருந்த 1935 காலப்பகுதிகளில் தமிழ், ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. கணிதத்தில் வல்லுநரான வி.தம்பர் (முன்னைய வேலணை ம.வி.அதிபர்), சிவகுரு நாதன், வித்துவான் இ. பொன்னையா ஆகியோர் உட்பட சிவலிங்கம், இராதா கிருஸ்ணன், ஆறுமுகராசா, திருநாவுக் கரசு கதிர்காமத் தம்பி சபாரத்தினம், பாலசுப்பிரமணியம் ஸ்ரீரங்கநாதன், செல்வராஜா ஆகியோர் அதிபராக இருந்துள்ளனர். தற்போது அதிபராக க.தேவராஜா கடமையாற்றுகின்றார்.

இங்கு கடமையில் இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலையின் அபிவிருத்தியில் துரித அக்கறை காட்டினார்கள். கல்வியில் உயர்ந்த நிலை காணப்பட்டதால் 1962 இல் இருந்து மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஏ.கந்தையா இதற்கான நடவடிக்கையை எடுத்ததுடன் பல்வேறு உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார். பாடசாலையில் சரவானந்தா மண்டபம் உருவாகவும் விஞ்ஞான உபகரணங்களைப் பெறுவதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.நவரத்தினம் உதவினார்.

### லக்ஸ்மன்

திருமதி ஆறுமுகராஜா அதிபராக இருந்த சமயம் இங்கு வருகைதந்த உதவிக் கல்வி அமைச்சர் வீ.வை. துடாவை அளித்த உறுதிகளின்படி பாடசாலை விஸ்தரிப்புக்கு நிதியுதவி கிடைத்தது. புதிய கல்வித்திட்டத்தில் விவசாய மரவேலைப் பாடங்களும் இடம்பெற்றன. இளம் விஞ்ஞான ஆசிரியர்களையும் தேடிப் பெற்றுக்கொண்டு அயலில் கல்லூரிகளின் தரத்திலும் உயர வேண்டும் என்பதில் அக்கறை காண்பிக்கப்பட்டது.

(தொடரும்)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF MEDICINE
Academic Programme
The Academic Programme for the New Batch of Medical Students (34th - 2011) will commence on 03rd October 2011.
Registrar
19.09.2011

அபரக்கிரியை, அந்தியேட்டிக் கிரியை போன்ற
சமயக் கிரியைகள் செய்வதற்கு
தொடர்பு கொள்ள வேண்டிய இடம்
தர்ப்புருஷ தேசிக, சிவஸ்ரீ. க.சிவராசக் குருக்கள்
9/1, காளிகோயிலடி, குருமன்காடு,
வவுனியா.
024 222 1075, 024 4907603,
0776016649

## மரண அறிவித்தல்



திருமதி
**தெய்வேந்திரன் சரஸ்வதி**
(நாகம்மா)

இல.7, பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வேந்திரன் சரஸ்வதி (நாகம்மா) 19.09.2011 திங்கட்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரமு-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் பாலகணேஷின் பாசமிகு தாயும் பிரேமலதாவின் அன்பு மாமியும் தணிகைவாணனின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி பாக்கியம், பொன்னுத்துரை, கந்தையா, அப்புத்துரை, மாணிக்கம் அன்னம், ஐயாத்துரை, நடராசா, நவரத்தினம் மற்றும் திருமதி மைக்கல் மகேஸ்வரி, திருமதி பெனடிக்ற் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2011) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.7, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
தெ.பாலகணேஷ் (மகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்:
05.01.1943

விண்ணில்:
22.08.2011

**திருமதி விக்ரர் கிறெஸ்மணி**

*மாதமொன்றாகியும் எம் விழிநீர் ஓயவில்லை*
*எண்ணாத நேரமதில் எமைவிட்டு சென்றதேனோ?*
*பூமியின் பொறுமையே! புண்ணியத்தின் பெருமகளே!*
*உறவுகளை உபசரித்து உளமகிழ வரவேற்ற*
*புன்சிரிப்பு வதனமும் கனிவான பார்வையும்*
*காணாது ஏங்குகின்றோம் கவலையினால் வாடுகின்றோம்*
*உம்மாத்மா சாந்தியடைய அனுதினமும் வேண்டுகின்றோம்*

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

பிரிவால் துயருறும்:
சாந்தி குடும்பம்
மற்றும் - மருமக்கள்

பணிப்பெண் தேவை
கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள, வெளிநாட்டைச்சேர்ந்த சிறிய தமிழ்க்குடும்பத்துக்கு வீட்டுப் பணிப் பெண் தேவை. வீட்டு வேலைகளையும், குழந்தையையும் பராமரிக்க வேண்டும். தங்குமிடம், உணவு என்பன வழங்கப்படும்.
சம்பளம் - 10,000/=
தொலைபேசி - 0776256505, 0112361984

தவறிவிட்டது
108/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த ஜெகநாதன் இராஜேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (887923728V), மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேஸ் கடந்த (13.09.2011) அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அனுப்பி உதவவும். தொடர்பு: 0777110970

வீடு வாடகைக்குண்டு
நவாலி வடக்கு, புலவர் வீதி, மானிப்பாயில் 7 பரப்புக் காணியில் 3 படுக்கை அறைகள், இரண்டு விறாந்தைகள், இணைந்த குளியல் அறை மற்றும் நவீன வசதிகள் வாகனத் தரிப்பிடம் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 8350478

வீடு விற்பனைக்கு
பயன்தரு மரங்கள்,சுற்றுமதில்ஆகியவற்றுடன் கூடிய 1½ பரப்பளவுக் காணியில் அமைந்த புதிய வீடு கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: 0779633993

ஸ்ரீ கருமாரி
அம்மன் ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரபல
ஜோதிடர் K.M.ராஜீ சுவாமிஜி
'இவர் வெளிநாடுகளிலும் மக்களது பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார்.'
கைரேகை, கல்வி, உத்தியோகம், தொழில், குழந்தைப்பாக்கியம் அனைத்து பிரச்சினைகளும் தீர்த்துத் தரப்படும்.
T.P 072 3811189,
075 2551018
(சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்)
இல: 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - மு.ப. 8.00 - பி.ப 7.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை இராணுவ அட்டூழியத்தை யாழ்.படைத் தளபதி ஏற்றுக் கொள்கிறார்

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

நாவாந்துறையில் இடம்பெற்ற இராணுவ அட்டூழியங்களை ஏற்றுக் கொண்ட யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, இப்படியான துர்ச் சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கமாட்டேன் என்று உறுதி கூறுகின்றார் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் நாவாந்துறை புனித நீக்கிலஸ் சன சமூக நிலையத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது, தெரிவித்ததாவது:

நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவம் முற்று முழுதாக தனிமனித மீறல் என்பதை மனிதாபிமானம் உள்ள எவரும் மறுக்கமுடியாது.

நாவாந்துறை சம்பவத்தையும் இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களையும் இன்று ஜெனிவா மாநாட்டிலும் எதிரொலிக்கச் செய்துள்ளோம்.

இலங்கையில் எதுவுமே நடக்கவில்லை. சிங்களவர்களும் தமிழர்களும் ஒற்றுமையாகவே வாழ்கின்றனர், தமிழர்களுக்கு ஏதும் பிரச்சினைகளே இல்லை, அரசு தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணி வருகிறது என்ற தொனியில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனிவா மாநாட்டில் வாய் கூசாமல் பொய் கூறி உள்ளார்.

அந்த மாநாட்டில் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் வக்காலத்து வாங்கும் வகையிலேயே அவர் பேசியுள்ளார். வாய் கூசாமல் இவர்கள் பொய் கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முயலும் போது நாம் வாய் மூடி மௌனமாக இருக்க முடியாது. இதனால் நாவாந்துறையில் இராணுவம் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனமான செயல்கள் உட்பட இங்கு அன்றாடம் இடம்பெறும் இராணுவ அடாவடித் தனங்களையும், அவற்றுக்கு அரசின் அனுசரணையையும் படம் பிடித்துக் காட்டுவது போல் அறிக்கை ஒன்றை ஜெனிவாவில் வெளியிட்டோம். இது அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் பொய்ப் பிரசாரத்தை தவிடு பொடியாக்கி விட்டது.

சுழிபுரத்தில் இராணுவத்தினர் இருவருக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களை ஓரிடத்தில் திரட்டித் தாக்குவதற்குத் தயாரானார்கள் இராணுவத்தினர்.

இதனை அந்தப் பிரதேச மக்கள் எனக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தனர். உடனடியாக வட பிராந்திய கட்டளைத் தளபதி ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க விடம் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினேன். அதற்கு அவர் சொன்ன பதில் ஆச்சரியமாக இருந்தது. நாவாந்துறையில் இடம்பெற்ற துர்சம்பவங்கள் இனிமேல் எங்கும் நடக்கவிட மாட்டேன். நாவாந்துறையில் தப்பு நடந்து விட்டது என்று கூறினார். அத்துடன் சுழிபுரம் பிரதேசத்தில் அப்படி நடக்காமல் பார்த்துக் கொண்டார்.

தடுமாற்றமான நிலையிலும் கூட நாவாந்துறையில் இராணுவத்தினர் தப்புச் செய்து விட்டனர் என்பதைத் தளபதியே ஒப்புக் கொண்டுள்ளார் -என்றார்.

(த-02)



நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக பாதுகாப்புக் கருதி இந்தியா சென்ற தமிழ் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 42 பேர் நேற்றுமுன்தினம் கொழும்பு, பண்டாரநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

# விசாவுக்கு போலி ஆவணம் சமர்ப்பித்த மாணவி கைது

கொழும்பு,செப்.21

இலங்கை மாணவி ஒருவர் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பிரிட்டன் விசா கோரியபோது கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பில் அமைந்துள்ள பிரிட்டிஷ் தூதரகம் ஊடாக இந்த விசா விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, போலியான கல்வித் தகைமை சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரிட்டன் எல்லை முகவர் நிறுவன அதிகாரிகள் இலங்கைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். போலியான ஆவணங்களைத் தயாரிப்பதற்காக முகவர் ஒருவருக்கு பணம் வழங்கியதாக குறித்த மாணவி ஒப்புக் கொண்டுள்ளார் .

இதேவேளை, போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் என்று பிரிட்டன் எல்லை முகவர் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. விசா விண்ணப்பங்கள் மிகவும் தீவிரமான முறையில் ஆராயப்படுவதாகவும் சிலரின் பிழையான வழிகாட்டல்களைக் கேட்டு போலி ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம் எனவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விண்ணப்பதாரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பத்து ஆண்டுகளுக்கு பிரிட்டன் செல்லத் தடை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூரில் வீடு வாடகைக்கு

நல்லூரில் குளிரூட்டப்பட்ட மூன்று அறைகள், சமையலறை மற்றும் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய தனியாக அமைந்துள்ள வீட்டின் கீழ் மாடி வீடு வாடகைக்கு உண்டு. முன்பு ஐரோப்பியர்கள் மற்றும் பிரபல்யமான அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று வாடகைக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி வீட்டை வாடகைக்குப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

முருகேசு & நீலகண்டன்
சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 03
தொலைபேசி – 0112371100 / 0712723456
தொலைநகல் - 0112371111
மின்னஞ்சல் - neela@mnlaw.lk

## பாடசாலைகளில் கண் பரிசோதனை

தென்மராட்சி,செப்.21

சுகாதார அமைச்சின் விஷன் 2020 செயற்றிட்டத்திட்டத்தின்கீழ் தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர் களுக்கான கண்பரிசோதனை முகாம் கடந்த 17 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

யாழ்.போதனாவைத்தியசாலை கண் சிகிச்சைப்பிரிவு கண் சிகிச்சை நிபுணரினால் நடத்தப் பட்ட பரிசோதனையில் பார்வை யில் குறைபாடு காணப்படும் 39 மாணவர்களுக்கு இலவச மாக மூக்குக் கண்ணாடிகள் வநியோகிக்கப்பட்டன.

மேலும் ஐந்து மாணவர்களை யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சைப் பிரிவுக்கு வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(த-207)

## HOUSE FOR LEASE IN NALLUR

A separate compact house (ground floor) with air-conditioned 3 bed rooms with pantry (also with a garage) is available for lease in Nallur. Earlier occupied by Europeans and a well recognized NGO. Those interested in taking on lease please contact

Murugesu & Neelakandan
Attorneys-at-Law & Notaries Public
No.2, Deal Place, Colombo 3
Telephone - 0112371100 / 0712723456
Fax - 0112371111
E-mail: neela@mnlaw.lk



## KET, PET Level - I பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

லண்டன் (UK) மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு Sponser மூலம் செல்பவர்களுக்கான Ket, Pet பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் பிரிவு 02 24.09.2011 (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு ஆரம்பம்.

★ மேற்படி பரீட்சைக்கான பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்
★ வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர்களின் பயண வசதிக்கேற்ப தனியான நேரம் ஒதுக்கித்தரப்படும்.

விரிவுரையாளர் : B.முரளி M.Sc (U.K.)

ஏனைய மொழிப்பயிற்சி வகுப்புக்கள்

IELTS → Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது
FRENCH → பிரான்ஸ் செல்பவர்களுக்கானது

★ Spoken English
★ Spoken Sinhala
அரச ஊழியர், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கானவை
★ Grade - 5 Scolorship Class
★ Kids Program

ACS Computer Education இன் சகல கற்கை நெறிகளும் 75% கட்டணக்கழிவுடன் நடைபெறுகின்றன

English Academy
10 th Lane, Vairavapuliyankulam Vavuniya.
T.P: 0243243265, 0772169370.

## அதி கூடிய வட்டியினை வழங்கும் SDB நிலையான வைப்புக் கணக்கு





*நிபந்தனைகளுக்கு உற்பட்டது
0112 832567
சனச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி
www.sdb.lk
Fitch Rating BB+
RAM Rating BBB
ARTBOX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் பயிற்சியா? உடன் ரத்துச் செய்யுங்கள்

### இந்திய அரசு மீது ராமதாஸ் சீற்றம்



இலங்கைக் கடற்படையுடன் இணைந்து இந்திய அரசு கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வது குறித்து ராமதாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் உடன டியாக அதனை ரத்துச் செய்ய வேண் டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:

இலங்கைக் கடற்படையுடன் இந்திய கடற்படையினர் கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர். இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய அளவில் இரு நாட்டு கடற்படையினரும் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்த பயிற்சியைத் தொடர்ந்து இலங்கை கடற்படைக்கு பல்வேறு உதவிகளை வழங்க இந்தியா முடிவு செய்திருப் பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் களை கொன்று குவித்ததற்காக உலக அரங்கில் போர்க்குற்றவாளியாக நிறுத் தப்பட்டிருக்கும் இலங்கைக் கடற்படை யுடன் இந்தியா கூட்டுப் பயிற்சி மேற் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. ஆனால் இதையெல்லாம் பொருள்படுத் தாமல் இலங்கை அரசுக்கு இந்தியா உதவி களை வாரி வழங்கி கொண்டிருக்கிறது.

காங்கேசன் துறைமுகத்தை பல நூறு கோடி ரூபா செலவில் புதுப்பித்து வரும் இந்திய அரசு அடுத்த கட்டமாக இலங் கைக் கடற்படைக்கு பயிற்சியும், ஏனைய உதவிகளையும் வழங்க இருக்கிறது.

இலங்கையுடன் எந்த உறவையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒட்டு மொத்த தமிழகமே வலியுறுத்தி வரும் நிலையில் அந்தநாட்டு கடற்படையு டன் இணைந்து இந்தியக்கடற்படை கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது சரியானதல்ல.

அப்பாவித் தமிழ் மீனவர்களைக் கொன்று குவித்ததற்கு பரிசாகத்தான் இந்த பயிற்சியை இலங்கைக்கு இந்தியா வழங்குகிறதா என்ற கேள்வி தமிழகத்தில் உள்ள தமிழர்களின் மனதில் எழுந்திருக் கிறது. எனவே தமிழர்களின் உணர்வு களை மதித்து இலங்கைக் கடற்படையு டனான கூட்டுப் பயிற்சியை ரத்து செய்ய வேண்டும்.

இலங்கையுடனான ராணுவ உறவு களை முறித்துக் கொண்டு அந்நாட்டு அரசுக்கு எதிரான போர்க்குற்ற நடவடிக் கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்- என்று அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. (வ)

# தமிழ் நாடு அரசு கேபிளில் நேற்று முதல் விஜய் டிவி, போகோ அலைவரிசை

### நீங்கியது சன். ரி.வி அலைவரிசை

சென்னை, செப்.21

தமிழ்நாடு அரச கேபிள் தொலைக் காட்சி நிறுவனத்தில் இணைப்புப் பெற்றுள்ள அனைவரும் நேற்று முதல் விஜய் தொலைக் காட்சி போகோ உள் ளிட்ட கட்டண அலைவரிசைகளைக் காண லாம் என்று முதல்வரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்:

கேபிள் தொலைக்காட்சி இணைப் பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சி களை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பொது மக்களிடம் இருந்து அதிக அளவில் கட் டணம் வசூலிக்கப்படுகிறது என் பதைக் கருத்தில் கொண்டு தமிழக முதல மைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத் தின் நடவடிக்கைகளை புனரமைப்பதற் கான அனைத்து நடவடிக்கைக ளையும் மேற் கொண்டது என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரச கேபிள் தொலைக் காட்சி நிறுவனத் தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள கேபிள் தொலைக்காட்சி விநி யோகஸ்தர்கள் மூலம் தொலைக் காட்சிச் சேவையைப் பெறும் சந்தாதாரர்களிடம் இருந்து மாதம் 70 ரூபா மட்டுமே கேபிள் தொலைக்காட்சி விநியோகஸ்தர்களால் வசூலிக்கப்படுகிறது.

# பத்மநாப ஆலய வரலாறு திரைப்படமாகிறது

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயில் பொக்கிஷங்கள் மற்றும் திருவாங் கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் வரலாறு ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் பிரமாண்டமான திரைப்படமாகத் தயாரிக் கப்படவுள்ளது.படத்தின் பெயர் 'மார்த் தாண்ட வர்மா' என்பதாகும்.

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் உள்ள பத்மநாப சுவாமி கோயிலில் பாதாள அறைகள் இருப்பதும் அவற்றில் குவியல் குவியலாகத் தங்கம், வெள்ளி மற்றும் நவரத்தின நகைகள் இருப்பது கடந்த ஜூன் மாத இறுதியில்யில் அம்பலமானது.

மேல்நீதிமன்ற உத்தரவின்படி இதற் காக அமைக்கப்பட்ட குழுவினர் முன்னி லையில் பலத்த பாதுகாப்புடன் பாதாள அறைகள் திறக்கப்பட்டன. அறைகளில் ஏராளமான தங்க நகைகள், வைரம், வை டூரியம், பவளம், வெள்ளி இருப்பது தெரிந் தது. இதன் மதிப்பு ரூ.1.5 லட்சம் கோடி யைத் தாண்டும் என்று கூறப்படுகி றது.

# சிக்கிம் நில நடுக்கம்; உயிரிழப்பு 68 ஆகியது

சிக்கிம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட நில நடுக்கத் துக்கு பலியானோர் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது. நேபாளம் மற்றும் திபெத் தில் 15 பேர் பலியாகி உள்ளனர். சிக்கிம்-நேபாள எல்லையை மையமாக கொண்டு கடந்த திங்கட்கிழமை மாலை 6.11 மணிக்கு சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இது, கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத மிகப்பெரிய நில நடுக்கம் ஆகும். இதனால் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும், நேபாளம், வங்காள தேசம், திபெத் போன்ற அண்டை நாடுகளிலும் பெருத்த உயிர்ச்சேதமும், பொருள்சேதமும் ஏற்பட்டது.

யாழ் மண்ணில் முதன்முறையாக,
உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட
CADD CENTRE (India)
ஆனது நேரடியாக, தமது இந்திய விரிவுரையாளர்களினால்

Auto CAD

Earn an Internationally Recognized Certificate
We provide Professionally Developed Course Material

CADD CENTRE



LEVEL- 1
- Introduce to computer & windows
- Fundamentals of Computer Graphics
- Drawing Entities
- Modifying Commands
- Hatching Utilities
- Using Layers to effectively organize the drawing entities
- Assigning Line types and line weights through layers
- Increasing productivity by the use of Dynamic blocks
- Attributed blocks, external references, OLE, etc
- Dimensioning
- Preparing and managing layouts
- Using predefined and user defined title blocks
- Plotting with Plot styles

LEVEL- 2
- 3D modeling (wire frame models, surface models, solid models)
- Generating 2D drawings from the 3D model
- Material Rendering and producing photo realistic perspective images
- Exporting/Linking to 3ds max

Duration :120 Hrs
Contact : Shandra- 0773 181656
Bravo - 0777 315262
Tele : 021 7200406
E-mail :info.jaffna@ewisl.net
Web :www.ostcaddcentre.com
Course Fee :
Level - 1 : 12,500.00
Level - 2 : 10,000.00
Level 1&2 : 20,000.00

SLIIT Jaffna Centre
No.154A, Navalar Road, Jaffna
Manage By : e-wis

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி அருமை

புத்தூர் வடக்கு, மருதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருமை 19.09.2011 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சின்னத்தம்பி - செல்வி தம்பதியரின் அன்பு மகனும் நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்- செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கந்தசாமி, இராசு, ஆசை, குணரத்தினம், மாணிக்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தர்மகுலசிங்கம், தவராசா, தனராசா, ரஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாகேஸ்வரி, இந்திர வதனா, புஸ்பலீலா, வாசன் ஆகியோரின் மாமனும் மிதுஷா, யதுஷா, சன்ஸ்சானி, சகானா, சாருஜன், காலஞ் சென்ற தீபராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.09.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கிந்து சிட்டி இந்து மயானத் துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதடி,
புத்தூர் வடக்கு,
புத்தூர்.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்





## சின்னத்துரை தனபாலசிங்கம்
## (கிளி அண்ணர்)

(முன்னாள் உரிமையாளர், சுகந்தினி விளையாட்டுக்கழகம்,
தற்போதைய உரிமையாளர்,
Jaffna Rest & Bar கல்வியங்காடு)

திருநெல்வேலி கிழக்கு, புதிய செங்குந்தா வீதியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனபாலசிங்கம் கடந்த [17.09.2011] சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சிவகுரு சின்னத்துரை மற்றும் சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் தனபாலசிங்கம் சிவசோதியின் [கிருபா] பாசமிகு கணவரும் சுவேதன் [ஆஸ்திரேலியா], அஜந்தன், சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மகுலசிங்கம் [லண்டன்], பத்மாவதி [இந்தியா], சுசிலாதேவி [இந்தியா], நிர்மலாதேவி [ஜேர்மனி], நித்தியாதேவி [கனடா], தவீந்திரசிங்கம் [டென்மார்க்], குணபாலசிங்கம் [டென்மார்க்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஐயம்பிள்ளை சின்னையா மற்றும் காலஞ்சென்ற சின்னையா பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் கரிகாலன் [கரன்-கனடா], அன்புச் செல்வி [கனடா] ஆகியோரின் பாசமிகு அத்தானும் வைஸ்ணவி, கோபிகா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [22.09.2011] வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

'தாயகம்',
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம் நேற்று நியூயோர்க்கில் ஆரம்பம்

ஐ.நா. பொதுச் சபையின் இந்தாண்டுக்கான கூட்டம் நியூயோர்க்கில் நேற்றுத் தொடங்கியது. 130 நாடுகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். அதனால் அந்த நகரில் வரலாறு காணாத பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்தாண்டுக்கான கூட்டம் 13ஆம் திகதியே ஆரம்பித்து விட்டாலும் கூட்டத்தின்மிக முக்கியமான நிகழ்ச்சிகளான உலகத் தலைவர்களின் உரைகள், பொது விவாதம் போன்றவை நேற்றிலிருந்து 27ஆம் திகதி வரை நடக்க உள்ளன. இதில் பல்வேறு உலக விவகாரங்கள் விவாதிக்கப்பட இருந்தாலும் மிக முக்கியமான ஐந்து விவகாரங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக் கூடிய விதத்தில் விவாதிக்கப் பட உள்ளன.

**பலஸ்தீனத்துக்கு உறுப்பினர் அந்தஸ்து**

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இழுபறியில் உள்ள இஸ்ரேல், பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் ஒரு படியாக பலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் முழுமையான உறுப்பினர் அந்தஸ்து வேண்டும் என அந்த நாட்டின் அதிபர் முகமது அப்பாஸ் கோரியுள்ளார். தனது கோரிக்கையைப் பொதுச் சபை விவாதத்தில் வைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**மையப்புள்ளியாகும் துருக்கி**

அரபுலக நாடுகளின் எழுச்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ள துருக்கி, ஈராக்கில் நிலையான அரசியல் வேண்டும் எனக் கோரி வருகிறது. அதோடு லிபியாவுக்கு ஆதரவளித்துள்ளது. அதன் அதிபர் தாயிப் எர்டோயனை அமெரிக்க அதிபர் ஒபாமா சந்திக்க உள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எர்டோயன் பலஸ்தீனத்தின் உறுப்பினர் அந்தஸ்துக்கு தனது ஆதரவை உறுதிப் படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

**லிபிய விவகாரம்**

லிபியா அரசு சார்பில் பங்கேற்பதற்கு எதிர்ப்பாளர்களின் இடைக் கால அரசின் பிரதிநிதிகளுக்கு ஐ.நா. ஏற்கனவே அனுமதி அளித்துவிட்டது. இதையடுத்து அந்தநாட்டின் பொருளாதார முன்னேற்றம், சர்வதேச சமூகத்தில் புதிய லிபிய அரசுக்கு ஆதரவு, முன்னாள் தலைவர் கடாபியைத் தேடும் பணியை முடுக்கி விடுதல் ஆகிய விவாதங்கள் இடம் பெறும்.

**சிரியா மீது மேலும் தடைகள்**

ஏற்கனவே ஐ.நா. ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா என மூன்று தரப்பும் இணைந்து சில தடைகளை விதித்திருந்த போதும் தனது மக்கள் மீதான அடக்கு முறையை சிரிய அதிபர் பஷர் கைவிடவில்லை. இது குறித்த விவாதமும் இடம்பெறவுள்ளது.

**தெற்கு சூடான் வன்முறை**

புதிய நாடாக அதிகார பூர்வமாக உதயமாகியுள்ள தெற்கு சூடான், மற்றும் சூடான் இடையே நடந்துவரும் சில வன்முறைத் தாக்குதல்கள் இன்னும் நிற்கவில்லை. இது குறித்த விவாதமும் நடக்க உள்ளது.

## லிபியாவின் கடைசி நகரும் வீழ்ந்தது வெற்றிக் களிப்பில் புரட்சிப் படையினர்



திரிபோலி,செப்.21

லிபியாவின் தென் பகுதியில் உள்ள சாபா நகரில் உள்ள விமான நிலையத்தையும் பல பகுதிகளையும் புரட்சிப் படையினர் நேற்றுமுன்தினம் கைப்பற்றினர். இதனால் கடைசி நகரமும் ராணுவத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இது குறித்து புரட்சிப் படையின் செய்தித் தொடர்பாளர் அகமது பனி கூறுகையில்:

இப்போது எல்லா இடங்களிலும் எங்கள் கொடி பறக்கிறது. இது எங்களுக்கு மிகப் பெரிய வெற்றி என்றார்.

லிபியாவில் கடந்த 42 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த கடாபிக்கு எதிராக மக்கள் புரட்சியில் இறங்கினர். அவர்களை ஒடுக்க ராணுவத்தை பயன்படுத்தினார் கடாபி. இருதரப்புக்கும் நடந்த சண்டையில் பலர் கொல்லப் பட்டனர். புரட்சிப் படைக்கு ஆதரவாக நேட்டோ படைகளும் களத்தில் இறங்கியதால் பல நகரங்கள் ராணுவத்தின் கட்டுப் பாட்டில் இருந்து புரட்சி படையினர் வசம் வந்தன. குடும்பத்துடன் கடாபி தலைமறைவானார். எனினும், ஒன்றிரண்டு நகரங்கள் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. அந்த நகரங்களும் கைப்பற்றப்பட்டு விட்டதாக புரட்சிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

## ஏமன் தலைநகரில் கலவரம் 20 க்கும் அதிகமானோர் சாவு

சனா,செப்.21


ஏமன் தலைநகர் சானாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலவரத்தில் 20க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருவோருக்கும், அரச படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. அரச படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் குழந்தை உள்ளிட்ட பலர் உயிரிழந்துள்ளதாக நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவித்துள்ளன.

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் சலேயைப் பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டங் கள் நடைபெற்று வருகின்றன. 1978 ஆம் ஆண்டு முதல் சலே ஆமனில் ஆட்சி நடத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் காயமடைந்த சலே சவூதி அரேபியாவில் சிகிச்சை பெற்று வருகின்றார். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அரச அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசு நிராகரித்துள்ளதாகக் குறிப் பிடப்படுகிறது.

அல்குவைதா அமைப்புடன் தொடர்புடைய சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலவரங்களை மேற்கொண்டு வருவதாக அரச குற்றம் சுமத்தியுள்ளது.



ஐ.நா.வில் நடக்க இருக்கும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த சவூதி அரேபியா வெளியுறவுத்துறை அமைச்சர் சாவுத் அல்-பைசல், ஐ.நா., தலைவர் பான் கீ-மூனைச் சந்தித்துப் பேசினார்.

## திபெத்தில் நிலநடுக்கம்: 7பேர் சாவு

பெய்ஜிங், செப்.19

இந்திய-நேபாள எல்லையில் ஞாயிற்றுக்கிழமை உருவான நிலநடுக்கத்தால் திபெத்தும் கடுமையாகப் பாதிப் படைந்துள்ளது. திபெத்தின் யதோங் மாவட்டத்தில் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர் என்று அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள காலிங்காங் கிராமத்தில் 150 வீடுகள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகின. இதனால் நூற்றுக் கணக்கான மக்கள் வீடுகளையும், தங்களது உடைமைகளையும் இழந்து பரிதவித்து வருகின்றனர். அந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது. 500 கூடாரங்கள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன என்றும் குறிப் பிட்டனர்.

## டென்மார்க் கண்காட்சியில் டைட்டானிக் நெக்லஸ் திருட்டு

கோபன்ஹேகன்,செப்.21



டைட்டானிக் கப்பலின் எஞ்சிய பாகங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி, டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்தது. கப்பலின் பாகங்கள், பயணிகள் வைத்திருந்த பொருள்கள் உள்படப் பல்வேறு அரிய பொருள்கள் இதில் காட்சிக்கு வைக்கப்பட்டன. கப்பலின் முதல் வகுப்பில் பயணித்த அமெரிக்க பெண் எலினார் வைடனருக்கு சொந்தமானதாகக் கருதப்படும் தங்க நெக்லஸும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. பெறுமதி மிக்க இந்த நெக்லஸை யாரோ திருடிச் சென்று விட்டனர்.

இதுபற்றி கண்காட்சி உரிமையாளர் லூயிஸ் பெரைரோ கூறும்போது, அலுமாரி உடைக் கப்படவில்லை. அலாரமும் அடிக்கவில்லை. திகைப் பூட்டும் படி இந்தத் திருட்டு நடந்துள்ளது. கண்காட்சியில் இதை விட விலை அதிகமான நகைகள் இருக்கின்றன. நெக்லஸை மட்டும் திருடியது ஏன் என்பது தெரியவில்லை என்றார். நெக்லஸ் திருடியவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

## மதுபானக் கடையில் துப்பாக்கிச்சூடு; புஜும்புராவில் 36 பேர் மரணம்

ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள புருண்டி தலைநகர் புஜும்புரா அருகே மதுபானக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 36 பேர் பலியாகினர்.

ஐம்பத்துக்கும் மேற்பட்டவர்கள் ராணுவ சீருடையுடன் கடைக்குள் நுழைந்து அங்கிருந்த அனைவரையும் தரையில் படுக்கச் சொல்லிவிட்டு துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர் என இந்தச் சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவர் தெரிவித்தார்.

இதையடுத்து அந்தநாட்டு அதிபர் பீர் நுருன்சிசா தனது நியூயோர்க் பயணத்தை ரத்துச் செய்துவிட்டு சம்பவ இடத்தை நேரில்சென்று பார்வையிட்டார்.

## வட, தென்கொரிய நாடுகளுக்கு இடையில் பேச்சு

வட மற்றும் தென் கொரிய நாடுகள் அணு விவகாரம் தொடர்பில் இன்று உயர்மட்ட பேச்சு நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இரு நாடுகளினதும் பிரதிநிதிகள் சீனத் தலைநகர் பீஜிங்கில் பேசவுள்ளதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. இதில் வட கொரியாவின், அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கான ஊக்கத்தைக் குறைக்கும் நோக்குடன் இந்தப் பேச்சு இடம்பெறவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பேச்சை நடத்துவதற்கு இரண்டு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இதன்பிரகாரம் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ள இரண்டு நாடுகளினதும் பிரதிநிதிகள் ஏற்கனவே பீஜிங்கில் இதற்கான தயார்படுத்தல்களை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் டெங்கு காய்ச்சலால் 25 பேர் சாவு; 6,400 பேர் பாதிப்பு

**அமெரிக்கா மீது குற்றஞ்சாட்டுகிறது பாகிஸ்தான்**

லாகூர்,செப்.21

பாகிஸ்தானின் லாகூர் நகரில் டெங்குக் காய்ச்சலுக்கு இதுவரை 25 பேர் இறந்துள்ளனர். ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் காய்ச்சலில் அவதிப் பட்டு வருகின்றனர். இதே வேளை திடீரென டெங்கு பரவ அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.தான் காரணம் என்று பரபரப்பாகப் பேசப்படுகிறது.

பாகிஸ்தானில் இதுவரை 6400 பேர் காய்ச்சலில் பாதிக் கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் லாகூரைச் சேர்ந்தவர்கள் மட்டும் 6000 பேர் அடங்குவர். கடந்த 2 மாதங்களில் மட்டும் 25 பேர் இறந்துள்ளனர். அவர்கள் அனைவருமே லாகூரை சேர்ந்தவர்கள். இதனால் லாகூரில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன என்று சுகாதாரத் துறைச் செய்தித் தொடர்பாளர் இக்லக் அகமது தெரிவித்தார்.

இந்தநிலையில் லாகூர் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஹூசைமா புகாரி, இக்ராமுல் ஹக் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரை செய்தித் தாள்களில் நேற்றுமுன்தினம் வெளியானது.

அதில், ''கடந்த 1980ஆம் ஆண்டுதான் பாகிஸ்தானில் டெங்குக் கிருமிகளை அமெரிக்காவின் சி.ஐ.ஏ பரப்பியது. ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்திருந்த சோவியத் படைகளுக்கு எதிராக உயிர்க் கொல்லி கிருமிகளை பரப்பியது அமெரிக்கா அப்படியே பாகிஸ்தானுக்கும் அதை அனுப்பி வைத்தது'' என்று குறிப்பிட்டுள்ளனர்.

டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதால், வெளியிடங்களுக்குச் செல்ல பொது மக்கள் அஞ்சுகின்றனர். மருத்துவமனைகளில் ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறக் குவிந்துள்ளதால் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பற்றிக்ஸை வென்று தேவரையாளி இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.21

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே, 15 வயதுப்பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் இறுதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதிக்கொண்டது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு மோதிக் கொண்டனர்.

தேவரையாளி இந்துக் கல்லூரி அணிக்கு கோல் போடும் சந்தர்ப்பம் கிடைத்த போதும் அதனைத் தவறவிட்டனர். இரண்டு அணிகளும் தத்தமது அணிகளுக்கான கோல்களை போடுவதற்காக எதிர் அணிகளின் கோல்பரப்பினுள் முற்றுகையிட்ட போதும் பின்கள வீரர்களால் அது தடுக்கப்பட்டது.

முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்கையில் சென்.பற்றிக்ஸ் அணி வீரன் எசல்ராஜ் தனது அணிக்கான முதலாவது கோலினைப் போட்டார்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்து.

இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரு அணி வீரர்களும் மேலும் தமது அணிக்கு கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு களம் புகுந்தனர். இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தும் கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை இரு அணி வீரர்களும் தவறவிட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் முடிவதற்கு ஒரு நிமிடம் இருக்கையில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரன் உதயசாந் தனது அணிக்கான முதலாவது கோலினைப் போட்டார். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வெற்றி கொண்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக் குழு, குழுத் தலைவரும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப தலைவருமான சுரேந்திரன் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசினை வழங்கினார். (எ-23)

# வென்றது ஆதிசக்தி

யாழ்ப்பாணம், செப்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளை யாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இதில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வல்வெட்டி ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# மாவட்டங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.21

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பிரதேச விளையாட்டுத்துறை வளர்ச்சி நிதியம் மாவட்டங்களுக்கு இடையே உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் ஏனைய மாவட்ட செயலகங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்களிடமும் பெற்று அதனைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-23)

# வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், செப்.21

மட்டக்களப்பு உதைபந்தாட்டலீக் அங்கத்துவ கழகங்களின் ''பி'' பிரிவு அணிகளுக்கு இடையே லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மட்டக்களப்பு வெவ்வர் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவற் குடா நியூகிறீன்லைட் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டக்களப்பு சக்தி விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் நாவற்குடா நியூ கிறீன்லைட் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஒட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டக்களப்பு விபுலானந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஒட்டமாவடி வளர்பிறை விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# வென்றது கே.ஸி.ஸி.ஸி அணி

வலி.வடக்கு, செப்.21

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு வெற்றி விழாவையொட்டி கே.ஸி.ஸி.ஸி வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணி 07 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும் அரியாலை மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

நிரஞ்ஜ் இராகுலன் தலா 32 ஓட்டங்களையும் கோபி 29 ஓட்டங்களையும் நிரோசந் 24 ஓட்டங்களையும் நிதன் 19 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த பங்குஜன் 03 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ரம்மி இராகுலன் 04 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சாம்பவன் 06 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் உத்தமகுமாரன் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் 24.5 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.



இராகுலன் 64 ஓட்டங்களையும் சாம்பவன் 35 ஓட்டங்களையும் பங்குஜன், உத்தமகுமாரன் தலா 24 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த துஷ்யந்தன், வசி, நிக்ஷன் முறையே 16, 33, 37 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (த-86)

# குளமங்கால் றோ.கவுக்கு ஹொக்கி உபகரணங்கள்

வலி-வடக்கு, செப்.21

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலைக்கு ஹொக்கி விளையாட்டுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டப் பாடசாலை மட்டத்தில் ஹொக்கி விளையாட்டில் முன்னணியில் காணப்படும் இந்தப் பாடசாலை ஹொக்கி உபகரணங்கள் அற்ற நிலையில் அயல் விளையாட்டு கழகங்களின் உபகரணங்களைப் பெற்று பயிற்சி பெறுவதுடன் மாவட்டம், மாகாணம் வரை சென்று வெற்றிகளைஈட்டியுள்ளது.

தேசியமட்டத்திலான போட்டிகளிலும் மாணவர்கள் கடந்த பல வருடங்களாக கலந்து கொண்டு வருகின்றனர்.

வடமாகாண ஆளுநரின் செயல்திட்டத்தின் கீழ் இந்த விளையாட்டு உபகரணங்களை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளரும் வழங்கியுள்ளனர்.

200க்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலையாக இது உள்ள போதிலும் விளையாட்டுத்துறையில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# றஜீவ்குமார், றொகான் ஓட்டங்கள் விளாச ஓல்ட் கோல்டை வென்றது யாழ்.சென்றல்

யாழ்பாணம்,செப்.21

றஜீவ்குமார்,றொகான் ஆகியோரின் இணைப்பாட்டம் கைகொடுக்க யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் ஓல்ட்கோல்ட் அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டு கால் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையே நடத்தும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஓல்ட்கோல்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட் அணியினர் 30 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றனர்.

மயூரன் 62 ஓட்டங்களையும் நிரோஸன் 29 ஓட்டங்களையும்,மௌசன் ஆட்டம் இழக்காமல் 61 ஓட்டங்களையும், திலீபன் ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.பந்துவீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக ...... ...... ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

208 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணியினர் 27.2ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றனர்.

சுபிரேதேவ் 49 ஓட்டங்களையும், பாலேந்திரா 12 ஓட்டங்களையும்,றஜீவ்குமார் ஆட்டம் இழக்காமல் 90 ஓட்டங்களையும், றொகான் ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ட் விளையாட்டு கழக அணி சார்பாக சிறிகுகன், 2விக்கெட்டுக்களையும் திலீபன் ஒரு விக்கெட்டையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (த-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப .3 மணி: உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகம் எதிர் கரவெட்டி கலட்டி விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4 மணி: மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம். (த-23)

# இன்றைய தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம்செப்.21

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் தென்மராட்சி ரீதியாக நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டு கழக 'பி' அணிமோதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிந்தது ஆட்டம்



இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 488 ஓட்டங்களைக் குவித்தது. பதிலளித்த இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

## வெற்றிக் கிண்ணம் ஆஸியின் வசம்

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் 3 டெஸ்ட் ஆட்டங்கள் இடம்பெற்றது. இதில் காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸி அணி வெற்றிபெற்றது. பல்லேகளவில் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்த நிலையில் கொழும்பில் 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் 16ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.



முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 316 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மைக்கல் ஹஸி 118, மார்ஷ் 81, பொன்டிங் 48, ஹடின் 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இவர்களைத் தவிர மற்ற வீரர்கள் எல்லோரும் ஒற்றை ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் இந்த டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமான எரங்க 4 விக்கெட்டுக்களையும், வெலகெதர 3 விக்கெட்டுக்களையும், லக்மால் 2, ஹேரத் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 473 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மத்தியூஸ் ஆட்டமிழக்காமல்



105 ஓட்டங்களையும், டில்ஷான் 83, சங்ககார 79, மஹேல 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஆஸி. சார்பில் சிடில் 4, ஹோப்லண்ட, ஜோன்ஷன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



இலங்கை அணியைவிட 157 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸி. அணி சிறப்பான அடித்தளத்தை அமைத்தது. நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின் போது ஆஸ்திரேலிய அணி 209 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. ஹியூயெஸ் 122, மைக்கல் கிளார்க் ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஹியூயெஸ் மேலதிகமாக 4 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஹேரத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் இணைந்த கிளார்க் - ஹஸி ஜோடி இலங்கை அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இருவரது இணைப்பாட்டத்தை பிரிக்க முடியாமல் இலங்கை அணி தடுமாறியது. சிறப்பாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடிய கிளார்க் 139 பந்துகளில் தனது 16 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார்.

இறுதியில் 5 ஆவது விக்கெட்டுக்காக 176 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் கிளார்க்கின் விக்கெட் ஹேரத்தினால் வீழ்த்தப்பட்டது. 178 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகளுடன் 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கிளார்க் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து ஹஸி 93 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்களில் ஹடின் 30 ஓட்டங்களையும், சிடில் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 488 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் இலங்கை சார்பில் ஹேரத் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 432 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி ஆட்டம் முடிவடையும் போது விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களைப் பெற்றது. பரணவிதாரன 2, திரிமனனே 4 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததன் மூலம் இலங்கை, ஆஸி. இடையிலான 3 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடர் 1-0 என்ற அடிப்படையில் நிறைவடைந்துள்ளது. ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் ஆஸ்திரேலியாவின் மைக்கல் ஹஸி தெரிவானார். (15)



## மெனிக்பாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சுக் கூறி உள்ளது.

மெனிக் பாம் முகாமில் எஞ்சியுள்ள 2,097 குடும்பங்களைச் சேர்ந்த 7,394 பேரையும் புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் மீளக்குடியமர்த்தப் போவதாகவும் பாதுகாப்பு அமைச்சுக் கூறுகின்றது. ''ஒவ்வொரு குடும்பங்களும் தமது வாழ்வை மீளக்கட்டி எழுப்புவதற்கு ஏற்றவாறு 40 பேர்ச் துண்டுக் காணி வழங்கப்பட்டு அரை நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும்'' என்று அமைச்சுத் தெரிவித்தது.

மெனிக் பாம் முகாமில் தற்போதும் தங்கி இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிகளைச் சேர்ந்த மக்களும் கணிசமான அளவில் அதற்கு அடங்கி உள்ளனர். இவர்களையே கோம்பாவிலில் மீளக்குடியமர்த்தப் போவதாக பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

முன்னதாக, முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிக்கப்போவதில்லை என்று அரசு அறிவித்திருந்தது. (உ)

## அமைச்சர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே இச்சம்பவம் இடம்பெற்றது. இம்மாநாட்டில் வட மாகாணத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களான ப.சேதுராகவன், நிதுர்ஷிகா ரமேஷ், சர்மிளா சர்வானந்தன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது ஏனைய மாணவிகள் இருவரும் அமைச்சரின் காலில் விழுந்து வணங்கியபோதிலும் சேதுராகவன் மாத்திரம் அமைச்சரின் காலில் விழ மறுப்புத் தெரிவித்து அவ்விடத்திலிருந்து அகன்றான்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தமிழ் மொழி மூலத்தில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடம்பெற்ற (194 புள்ளி) முல்லைத்தீவு மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவன் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற மறுத்துவிட்டார். இதனால் அமைச்சர் பந்துல குணவர்த்தன கல்வி அதிகாரிகளுக்கு மத்தியில் பெரும் சங்கடத்துக்குள்ளாகி அவஸ்தைப்பட நேர்ந்தது.

மாணவனை அமைச்சரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறும்படி அங்கு நின்ற சில கல்வி அதிகாரிகளும் மாணவனின் பெற்றோரும் கேட்டுக்கொண்ட போதும் மாணவன் அதற்கு சம்மதிக்கவில்லை.

இதுபற்றி மாணவனின் தந்தையான பரமேஸ்வரனிடம் கேட்டபோது ''எனது மகன் கோயிலுக்குச் சென்றாலும் கூட விழுந்து வணங்குவதில்லை எவரையும் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவதுமில்லை இது அவரின் இயல்பான குணம்'' என்றார்.

இந்த நிகழ்வின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்திரகுமார் எம்.பி. வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி உட்பட கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-4)

## முல்லை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக குடியேற்றப்பட உள்ளனர் என அறிவிக்கப்பட்டதன்படி மேற்படி குடும்பங்கள் முகத்துவாரம் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இதுவரையில் 67 சிங்களக் குடும்பங்கள் முகத்துவாரம் பகுதியில் பல்வேறு அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில் தற்காலிக பதிவில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கு கருநாட்டுக் கேணிக்கும் கொக்கிளாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் புதிதாகக் காணிகள் வழங்கப்பட்டு விரைவில் குடியேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முகத்துவாரப் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ள சிங்களக் குடும்பங்களுக்கென மருத்துவ நிலையம், தபால் நிலையம், சந்தை, குடிதண்ணீர் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் குடிதண்ணீர் கொக்கிளாய் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியிலிருந்து குழாய் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

யுத்த காலத்துக்கு முன்னர் அதாவது 1983 இற்கு முன்னர் இந்த இடங்களில் 280 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டு, இப்போது படிப்படியாக சிங்களக் குடும்பங்கள் தென்னிலங்கையிலிருந்து அழைத்து வரப்பட்டு சட்டவிரோதமாகக் குடியமர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் முகத்துவாரத்தில் 11 சிங்களக் குடும்பங்கள் நீர்கொழும்பில் இருந்து பருவகாலத் தொழிலுக்காக அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டதாகவும் இவர்களில் 26 பேருக்கு மட்டும் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாக்காளர் பதிவு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-10-06)

## நியூயோர்க்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் ஏற்கனவே ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்ற அழைப்பாணை இருக்கின்றது. அந்த அழைப்பாணை இலங்கையில் அலரிமாளிகைக்கு அனுப்பப்பட்டபோது அதனை ஏற்க ஜனாதிபதி மறுத்துத் திருப்பி அனுப்பி இருந்தார். இலங்கையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையிலேயே ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. தற்போது எதிராளிகள் இல்லாமலேயே அந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், ஜனாதிபதி அமெரிக்கா வருவதைத் தடுத்து நிறுத்துமாறு நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்கனவே அமெரிக்க அரசைக் கேட்டுக்கொண்டிருந்தது. எனினும் ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா வருவதற்கான ராஜதந்திரப் பாதுகாப்பை அமெரிக்க அரசு வழங்கி இருந்தது. இருப்பினும் அவர் நியூயோர்க்கைவிட்டு வெளியே சென்றால் தேவையற்ற சங்கடங்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டிவரும் என்று அமெரிக்க அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மஹிந்தவுக்கு எதிராகப் போராட்டங்கள் நிகழ்த்தப்படவும் சட்ட ரீதியாக அவரை முடக்கவும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் முயற்சிக்கக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். எனவேதான் நியூயோர்க்கைவிட்டு வெளியே எங்கும் செல்வது உசிதமானது அல்ல என்று அவர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறிஉள்ளனர்.

இதனால் மகிந்த ராஜபக்ஷவின் அமெரிக்கப் பயணத் திட்டங்கள் பெரும் அடிவாங்கி உள்ளன என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனது உறவினர்களைச் சந்திப்பதற்கும், மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும், அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களுக்கும் செல்ல ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார். இப்போது அமெரிக்க அதிகாரிகளின் ஆலோசனையினால் அவரது திட்டங்கள் கைவிடப்பட்டு நியூயோர்க்கிலேயே அவர் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே ஐ.நா. பொதுச்சபையின் 66ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நேற்றுமுன்தினம் நியூயோர்க்கைச் சென்றடைந்த ஜனாதிபதியை விமான நிலையத்தில் வரவேற்க அமெரிக்க அதிகாரிகள் எவரும் செல்லவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுக்கான அரசுமுறைப் பயணமாக அவர் செல்லாததால், அமெரிக்க அதிகாரிகள் எவரும் ஜனாதிபதியை வரவேற்கச் செல்லவில்லை. சிறிலங்கன் விமானசேவை அதிகாரிகளும், நியூயோர்க்கில் உள்ள மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா உள்ளிட்ட இலங்கைத் தூதரக அதிகாரிகளுமே ஜனாதிபதியை வரவேற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜெயசீலன் (டிஸ்மன்)-தேவி
தம்பதியரின் செல்வப்புதல்வி

செல்வி **துஸ்யந்தினி**

யாழ்/புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயம் (குருநகர்) 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் பல துறைகளிலும் சிறந்து விளங்க இறைவனை அருள்வேண்டி வாழ்த்துகிறோம்!

மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்க உறுதுணையாகவிருந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
*மாமி (ஜெயசிலி), மச்சான்மார், மச்சாள்மார்.*

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

### வெற்றிடங்கள்

**1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)**

தகைமைகள்
க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு
1. நல்ல தேக ஆரோக்கியமும் நல்ல கண் பார்வையும் இருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5' 4"
(ii) 21 வயதுக்கு மேற்பட்டோர் (சம்பளம் மாதமொன்றுக்கு EPF & ETF மற்றும் வருகை ஊக்குவிப்புப் பணம் உட்பட 14,000/

**2. காரியாலய இலிகிதர் (பெண்)**
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி மற்றும் கணினி அறிவு (MS Office) பெற்றிருத்தல் வேண்டும்

**3. காரியாலய உதவியாளர் (ஆண்)**
- க.பொ.த. (சா/த).

குறிப்பு (2,3)
1. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
2. EPF & ETF வழங்கப்படும்.
3. யாழ்.நகரின் 3Km இக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

- நேர்முகப் பரீட்சை 337 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணிமனையில் 24.09.2011 சனிக்கிழமை, 26.09.2011 திங்கட்கிழமை, 27.09.2011 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 – பி.ப.1 மணிக்கும் இடையில் நடைபெறும்.

கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமூகமளிக்கவும்.
1. கிராம சேவகரின் நற்சான்றிதழ் பத்திரம் (6 மாதங்களுக்குட்பட்டது). 2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். 3. கல்வித்தராதரப் பத்திரங்கள். 4. தேசிய அடையாள அட்டை இவை அனைத்தினதும் உண்மைப்பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டுவரவும்.

337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**பணிப்பாளர்.**


# கணித பாட பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சி, செப்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதா ரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நாளை வியாழக்கிழமை சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

# வலி.தென்மேற்கில் விழிப்புக்குழுக்கள்

நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் இளைஞர்கள் விழிப்புக் குழுக்கள் அமைத்து இரவு வேளையில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இந்தப் பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகமாக இருந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 10 மணிக்குப் பின்னர் வீதிகளில் பயணிக்கும் வெள்ளை வான்கள் குறித்தும் இளைஞர்கள் விழிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# புதுமெருகு பெறும் யாழ்.இறைவரி அலுவலகம்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய அலுவலகம் புது மெருகு பெற்று வருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி முகாமைத்துவ புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த அலுவலகம் நவீன மயப்படுத்தப்படுகின்றது.

அலுவலகத்துக்கு வர்ணம் தீட்டப்படுவதுடன் குளிரூட்டி வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றது. அத்துடன் இருபதுக்கும் மேற்பட்ட கணினிகளும் அலுவலகத்தின் பயன்பாட்டுக்காகக் கிடைத்துள்ளன.

மேலும் கொழும்புத் தலைமையகத்துக்கும் யாழ். பிராந்திய அலுவலகத்துக் கும் இடையில் இணைய வழித்தரவுப் பரிமாற்றப் பணிகளுக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-4)


**SHAMROCK**
A/L 2013, 2012
இணைந்த கணிதம்
G.கண்ணன் B.Sc.
2012- Tue 3.30 Sat, Sun 2 pm
2013- Wed, Fri 3.30 pm

PHY - S. சசி B.Sc.
2012- Tue, Thurs 6 pm
2013- Tue, Thurs 5 pm

CHE - M.A. நிரோஜன் B.Sc.
2012- Mon, Wed, Thurs 6.15 am
2013- Thurs, Fri 6.15 am

BIO - R. குகானந்தன் B.Sc.
2012- Wed, Fri 5 pm
2013- Wed, Fri 4 pm



## கண்ணீர் அஞ்சலி



அமரர் அரசரத்தினம் ராஜன் கதிர்காமர்

யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகவும், தொழில்நுட்ப, விவசாய நிறுவனங்களின் ஆளுநர் சபை செயலாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற ராஜன் கதிர்காமர் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி அறிந்து துயருற்று எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
விவசாய நிறுவனத்தினர்.

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

### தரம் 06 இற்கான அனுமதி 2012

எமது பாடசாலை தரம் 06 இற்குரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகிறது. விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் 05.10.2011 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை 30.10.2011 இற்கு முன்பாக பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

அதிபர்.

## மரண அறிவித்தல்



### Dr. இ. சிறிசண்முகநாதன் (Retd) R.M.O

(மருத்துவர் – வெள்ளவத்தை மெடிக் கிளினிக்)

யாழ்ப்பாணம் இடைக்காடு பூமகள் மாமனையை சொந்த இடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த **Dr. இ. சிறிசண்முகநாதன்** கடந்த 19.09.2011 திங்கட்கிழமை காலை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் பாலசரஸ்வதியின் அன்பு கணவனும் அமரர்கள் பண்டிதர் இராமசாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த அருமைப் புதல்வனும் அமரர்கள் பத்திநாதர் - நாகமுத்து தம்பதியினரின் மதிப்பார்ந்த மருமகனும் சிவகாமசுந்தரி (லண்டன்), குமாரதாசன் (ஓய்வுபெற்ற மாவட்ட மருந்காளர்), கந்தசுவாமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிறிபாலன் (நெதர்லாந்து), ஜனகன் (கனடா), ஜமுனா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரன் (லண்டன்), சுகிர்தன் ஆகியோரின் நேசத்துக்குரிய பெரிய தந்தையும் தாரணி (நெதர்லாந்து), மிதிலா (கனடா), செந்தில்பிள்ளை (கனடா), மற்றும் பாலகுமார் (லண்டன்), பாலகணேஸ் (நோர்வே), மைதிலி (லண்டன்), ஆகியோரின் அபிமான மாமனும் சிறினி (நெதர்லாந்து), பிரணாஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார். அமரரின் இறுதிக் கிரியைகள் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 22.09.2011 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியை 2.00 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

86-1/2 Fussels Lane
Colombo - 06. TP: 0112367911

தகவல்
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சிவபாதசுந்தரம் வள்ளியம்மை



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் வள்ளியம்மை கடந்த (19.09.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை–நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா – பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கண்ணம்மா காலஞ்சென்றவர்களான பரிமளம், நாகராசா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அருமை இரத்தினம், பூமணி ஆகியோரின் மைத்துனியும் விஜயகுமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பார்பாத்தி), சிவகுமார் (சிவா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோ ரின் பாசமிகு தாயும் விஜயலதா (பிரான்ஸ்), கேமலா, விஜிதா ஆகியோரின் மாமியும் தீபிகா, விஸ்ணுதாஸ் (பிரான்ஸ்), கோபிகா, கரி கரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முனைப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம்,*
*பெருங்காடு, புங்குடுதீவு.*

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

A-9 வீதியில் 17.09.2011 சனிக்கிழமை கச்சேரிக்கும் -இயக்கச்சிக்கும் இடையில் பாடசாலை ஆவணங்கள் அடங்கிய, Commercial Bank என பெயர் பதிக்கப்பட்ட நீலநிற பிரயாணப்பை தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் 0776257960, 0776164116 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறியத் தரவும்.

## காணி, வீடு, விற்பனைக்கு

பளை புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும், பளை கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும், 56 அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசல கூட வசதி சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகள்: 0779592051, 0774346417

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250

7ம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு
மாபெரும் புலமைப் பரிசில் 80% OFFER

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Microsoft office | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Desktop Publishing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Web page Designing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Graphic Designing | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | 10000 | 2000 |
| Diploma in Computerized Accounting | 3 Months | 15000 | 3000 |
| Diploma in Computer Science | 4 Months | 12500 | 2500 |
| Hon. Diploma in Computer Science | 4 Months | 12500 | 2500 |
| Hon. Diploma in Programming | 3 Months | 10000 | 2000 |
| AUTO CAD | 3 Months | | 2000 |

Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking
3000/=

A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான
Quick Book, Acc Pac, MYOB, Tally
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
T.P: 021 222 8250
0774907444

Batch Time:
I) 21/09/2011
II) 22/09/2011
III) 24/09/2011
IV) 25/09/2011
9AM or 3PM

## A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION

75% OFF

Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
பயிற்சிமையம்.
veta®
Experts in English Training

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாட நூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு V - 24/09/2011 9.30 am
பிரிவு VI - 26/09/2011 9.30 am

DMI COMPUTER EDUCATION
No.413, ... திட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (சக்தி மகளிர்கல்லூரி முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நீதிமன்றில் வைத்து சந்தேக நபர் தாக்கப்பட்டார்

# பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்து சட்டத்தரணிகள் அமர்வுகளை புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தாக்கி, இழுத்துச் சென்ற சம்பவத்தைக் கண்டித்து சட்டத்தரணிகள் தமது வழக்காடும் பணிகளை காலவரையறையின்றி நிறுத்தி நேற்றுத் தொடக்கம் புறக்கணிப் பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சிவில் உடையில் நுழைந்த கோப்பாய் பொலிஸார் அங்கு விசாரணைக்காக காத்திருந்த சந்தேகநபர் ஒருவரை அடித்து இழுத்துச் சென்றனர்.

இதனால் நீதிமன்றில் இருந்தவர்கள் அதிர்ச்சி, ஆச்சரியத்துடன் விழி பிதுங்கி நின்றனர்.

சம்பவத்தை அறிந்து கொண்ட நீதிவான், பொலிஸாரைத் தொடர்பு கொண்டு இழுத்துச் செல்லப்பட்ட நபரை உடனடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து தமது நீதிமன்ற அமர்வுகளை நேற்றுத் தொடக்கம் புறக்கணித்து வருகின்றனர்.

நீதிமன்றில் சட்டவிரோதமாகச் செயற்பட்ட ஏழு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என உத்தரவாதம் தரவேண்டும் என்று அவர்களது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று சட்டத்தரணிகளின் புறக்கணிப்பால் விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த வழக்குகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன.

தமக்கான உரிய பதில் கிடைக்கும் வரை புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை நீதிவானின் உத்தரவின்பேரில் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட பொலிஸாரால் தாக்கப்பட்ட சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டதோடு மருத்துவப் பரிசோதனைக்கும் அனுமதியளித்தார். அத்துடன் மன்றில் நடந்த சம்பவம் குறித்து உரிய விளக்கத்தைத் தருமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார்.

நேற்றுவரை தாக்கப்பட்ட சந்தேகநபர் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லையென சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஒ-4-10)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களது கூட்டம் அடுத்த மாதம் ஆஸ்திரேலிய பேர்த் நகரில் நடைபெறவுள்ள நிலையில், போர்க்குற்ற விசாரணைகளை முழுமையாக நடத்தும்வரை பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து இலங்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யவேண்டுமென்று கிறீன் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது. இதுகுறித்து மின்னஞ்சல் மூலம் லீ ரிஹானொன் செவ்வியொன்றை வழங்கினார்.

அவர் அதில் கூறியவை வருமாறு:-

இலங்கையின் இறுதிப் போரில் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை குறித்து நீதியான - சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டுமென்று வலியுறுத்தி அதில் வெற்றிகாண கிறீன் கட்சி கடுமையாகப் பாடுபடும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆஸ்திரேலியாவின் முக்கியமான பிரமுகர்களான சர்வதேச யூதர்மார் சம்மேளனத்தின் ஆஸ்திரேலிய உறுப்பினர் ஜோன் டௌவ்ட், ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸின் டாக்டர் ஸாம் பாரி, சிட்னி பல்கலைக்கழகத்தின் சமாதான மற்றும் முரண்பாடு கற்கை நிலையத்தின் பேராசிரியர் ஜேக் லைன்ச், சிட்னி பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டக்கல்விகளுக்கான நிலையத்தின் பேராசிரியர் டாக்டர் பென் சோல், பிரிஸ்பேன் சமாதானஆணைக்குழுவின்நிறைவேற்று அதிகாரி பீற்றர் ஆர்ன்ட் ஆகியோர் இதற்கு ஆதரவாக இப்போதே குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

சர்வதேச சுயாதீனமான விசாரணைக் குழு ஒன்றுக்கான ஆதரவு பெருகிவருவதை என்னால் உணரமுடிகிறது. பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன், கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர் ஆகியோரும், அமெரிக்க செனட் சபையும் சர்வதேச விசாரணைக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன. ஆஸ்திரேலிய செனட் சபையும் இது தொடர்பான தீர்மானத்திற்கு ஏகமனதான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யவேண்டிய அவசர தேவை ஒன்று உள்ளது. மோசமான குற்றங்கள் குறித்து நான் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழர்கள் பலரிடம் அறிந்துகொண்டேன். அந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் எனது பணியைத் தொடர்வேன். அதேநேரம், இலங்கைக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணை வருமானால், அதனை நான் வரவேற்பேன் - என்றார் லீ ரிஹானொன். (ஒ-சி)

## ஜெனீவா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலவற்றிலும் இருந்து 10ஆயிரம் வரையான மக்கள் இந் நிகழ்வில் மிக மிக எழுச்சியுடன் பங்குபற்றினர் என்று தகவல்கள் தெரிவித்தன.

ஐ.நா சபை முன்றிலில், ஐரோப்பிய தமிழர்கள் ஒன்று கூடிய மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வு பிற்பகல் 2.00 மணியளவில் கொட்டிய மழைக்கு மத்தியில் ஜெனிவா ரயில் நிலையத்திலிருந்து ஐ.நா சபை நோக்கி அணிவகுப்பு நிகழ்வுடன் ஆரம்பமாகியது.

பேரணியை வரவேற்று ஐ.நா. முன்றிலில் இருந்து பிரான்ஸ் தமிழ்ச்சோலை சோதியா கலைக்கல்லூரி மாணவர்களின் இன்னியம் நிகழ்வு மற்றும் தேசிய அணிநடை நிகழ்வுகள் இடம்பெற்றன. இது அனைவரையும் கவர்ந்தது.பிற்பகல் 3.00 மணியளவில் ஜெனீவா ஐ.நா சபை முன்றிலை வந்தடைந்த மக்கள் பெருவெள்ளம், மேடையின் முன் ஒன்றுதிரண்டது.

தமிழீழ தேசிய கொடியேற்றல் நிகழ்வு, ஈகச்சுடர் ஏற்றல் நிகழ்வுகள் என்பன அடுத்ததாக இடம்பெற்றன.

தொடர்ந்து இறுதி யுத்தத்தை நிறுத்தக்கோரி, ஐ.நா முன்றிலில் தன்னை தீயுடன் ஆகுதியாக்கிக்கொண்ட ஈகபேரொளி முருகதாசன் உட்பட, தமிழகத்தில் ஈழத்தமிழர்களின் விடுதலைக்காக உயிர்தியாகம் செய்தோரின் ஈகச்சுடரொளி ஏற்றல் வைபவம் அடுத்து இடம்பெற்றது.

இதில் முருகதாசனின் தந்தை உட்பட ஈகிகளின் உறவினர்கள் கலந்து கொண்டு அவர்களின் திரு உருவப்படங்களுக்கு ஈகச் சுடர் ஒளி ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து பல நாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்த மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், சகோதர இனப் பிரமுகர்கள் பொங்குதமிழ் நிகழ்வின் நோக்கம் பற்றியும் தமிழ் மக்களுக்கு தமது ஆதரவு குறித்தும் தமிழிலும் ஏனைய மொழிகளிலும் உரைநிகழ்த்தினர். இதற்கு தமிழில் மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டது.

தொடர்ந்து ஜேர்மன் மாணவர்களின் எழுச்சி நடனமும் இடம்பெற்றது. இது அனைவரையும் உணர்வுடன் எழுச்சி நடனம் ஆடவைத்தது.

தொடர்ந்து பொங்குதமிழ் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக 'வெல்வது உறுதி'' என்னும் குறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.கலந்து கொண்ட மக்கள் அந்த குறுவட்டை வாங்குவதற்கு முண்டியடித்தமையையும் காணமுடிந்தது.

அங்கு சிறப்புரையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி நிகழ்த்தினார்.

இறுதியாக சுவிஸ் தமிழர் இசைக் குழுவினால் ''நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்'' பாடல் இசைக்கப்பட்டது. இதன்போது அனைவரும் எழுந்து நின்று தமிழீழத் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு நடனம் ஆடியமை அனைவரையும் உணர்ச்சிபொங்கச் செய்தது. (ஒ-10-323)

**பணியாளர் தேவை**

* விற்பனையாளர்
* காசாளர் (அனுபவமுள்ளவர்)
* சாரதி - AD ஐந்து வருடங்கள் அனுபவமுள்ளவர்)

நேரில் வரவும். **பேப்பர் ஹவுஸ்**
*300, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.*

**அபூர்வ ஜோதிடம்**

கொலஸ்ரோல், சிறுநீரகக்கல், மூச்சுத்திணறும் முட்டு, குழந்தை இன்மையை தரும் கெற்ப நோய்க் கான சாதனை படைத் துள்ள சிகிச்சை
8.30 am - 2.00 pm
3.00 pm - 7.00 pm
T.P - 0773212740

## அரசின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் நேற்று புதிதாக சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இந்தக் குடும்பங்களுக்கு புதிதாகக் காணிகளும் வழங்கப்பட்டன. இலங்கைத் தீவில் யார் வேண்டுமானாலும் எங்கும் வாழலாம் என இலங்கை அரசு அறிவித்து ஒருசில நாள்கள் மாத்திரமே கடந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான சிங்களக் குடியேற்றங்கள் இன்று முல்லைத்தீவு வரை படர்ந்து சென்றுள்ளன. இது ஒரு திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கை என தமிழ்த் தலைமைகள் விசனம் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு, கொக்கிளாய்ப் பகுதியில் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டது தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே சுரேஷ் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தெற்கிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்த சிங்களக் குடும்பங்கள் அன்று கடலோரக் கிராமங்களின் தற்காலிகமாகத் தொழில் நிமித்தம் குடியேறின. இது தற்காலிகம்தான்.

எனவே, இவர்களை அடிப்படையாகக் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே சிங்களவர் இருந்ததாகக் கூறி இலங்கை அரசு தமிழ் நிலங்களை அபகரிக்க முயற்சிக்கின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அநுராதபுர மாவட்டத்தின் சில பகுதிகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளையும் இணைத்து வெலிஓயா பிரதேச செயலகமொன்றை இலங்கை அரசு திட்டமிட்டு நிறுவியுள்ளது. தனித் தமிழ் மாவட்டங்களை சிங்கள கலப்பு மாவட்டங்களாக மாற்றும் அரசின் வியூகங்களுள் இதுவும் ஒன்றுதான்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியினுள் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. இப்பொழுது இலங்கைத் தீவில் தமிழினம் என்ற ஒன்று இருக்கக்கூடாது என்ற முனைப்புடனேயே இலங்கை அரசு செயற்படுகின்றது. அதன் செயற்பாடுகளும் இதனை நிரூபிக்கின்றன. இதன் ஓர் அங்கமே தமிழர் பிரதேசங்களில் அரங்கேற்றப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமாகும்.

இலங்கை அரசின் திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நாம் சர்வதேசத்திடம் முறையிடுவோம். ஏனென்றால், இன ஒழிப்பு நடவடிக்கைகள் கூடாது என்றே ஐ.நா. சாசனத்திலும் உள்ளது என்பதைப் புரிந்து இங்குள்ளவர்கள் செயற்படவேண்டும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழர் தாயகப் பிரதேசங்கள் இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராய்ந்து உறுதியான சில முடிவுகளை முன்னெடுக்கவுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியதொரு நிலை ஏற்பட்டால் அதனையும் செய்ய நாம் தயாராகவே உள்ளோம். அரசின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கவுள்ள சில முக்கிய விடயங்களைப் பின்னர் அறிவிப்போம் என்றார் சுரேஷ். (ஒ-சி)

## கொக்கிளாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ் விடத்திலேயே விகாரை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதியில் பௌத்த பிக்கு ஒருவர் தென்னிலங்கையிலிருந்து அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளார்.

விகாரை அமைப்பதற்கான கட்டுமான பொருள்கள் குறித்த காணியில் பறிக்கப்பட்டுள்ளதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-10-6)

**மரண அறிவித்தல்**

**சின்னத்தம்பி கணேசமூர்த்தி (J.P)**

(ஓய்வு நிலை அதிபர்)



அல்வாய் வடமேற்கு மாறாம் புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசமூர்த்தி 18.09.2011 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராமுப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், புதியாக்குட்டி - செல்வம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான மகேசன் வள்ளிப்பிள்ளை, இளையதம்பி பொன்னம்மா, சின்னத்தம்பி ஏகாம்பரம், சிவஞானபண்டிதர் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் சுபத்திரா (ஆசிரியை, யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை) சந்திரிக்கா (ஜேர்மனி), சுரேந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன் (பொறியியலாளர் - கனடா), தவீந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தொழிற்றிணைக்களம்-திருகோணமலை), பிறேமினி (ஆசிரியை, பாணந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயம் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராஜலிங்கம் (நிர்வாக அலுவலர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு), பேரின்பதாஸ் (ஜேர்மனி), நிர்மலா (ஜேர்மனி), துளசி (கனடா), நிசாந்தினி (ஆசிரியை, புனித சூசையப்பர் கல்லூரி-திருகோணமலை), மகாவலிராஜன் (நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், கல்வியமைச்சு - கொழும்பு) ஆகியோரின் மாமனும், மஞ்சரிக்கா, மீராஞ்சலி, ஸ்ரீராம், கீர்த்திகா, பிருந்தா, சஜிந்திரன், இலக்கியா, அர்வின், ஆதிரன், சுரபிகா, கேசிகா, கிருஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2011) புதன் கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

''திருவடி நிழல்''
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ஊறணியில் மக்கள் மீள்குடியமர தளபதி ஹத்துருசிங்க அனுமதி

## அரச அதிபர் நேற்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஊறணி பிரதேசம் அடுத்த கட்டமாக மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் நேற்றுக்காலை பலாலியில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் பின்னர் நேற்றுமாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியமர்வுகளின் ஒரு கட்டமாக ஊறணி பிரதேசம் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை பாதுகாப்புப் படைத்தளபதி தந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை ஜே/249 தையிட்டி கிராம சேவகர் பிரிவில் அடங்கும் ஊறணி கிராமத்திலிருந்து மக்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்திருந்தனர். 90 ஆம் ஆண்டில் 439 குடும்பங்களைச் சேர்ந்த 1522 பேர் வரையில் வாழ்ந்தனர். தற்போது 217 குடும்பங்களைச் சேர்ந்த 827 பேர் மீள் குடியமர்வுக்காக விண்ணப்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இறுதியாக மாவிட்டபுரம் சந்தி வரையிலான பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். மாவிட்டபுரம் சந்தியிலிருந்து இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்திலுள்ள காங்கேசன்துறைச் சந்தியிலிருந்து பலாலியை நோக்கியதாக ஒரு கிலோமீற்றரில் ஊறணிப் பிரதேசம் அமைந்துள்ளது. அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் பலாலி விமான நிலையத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே இது அமைந்துள்ளது.

ஊறணியில் அமைந்துள்ள தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கு வழமையாக அனுமதிக்கும் படைத்தரப்பினர் இந்த வருடம் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-15)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், மற்றும் இம்முறை பல்கலைக்கழக நுழைவு மாணவர்களுக்கான இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 21.09.2011 காலை 11-1 மற்றும் 23.09.2011 காலை 11-1
பிரிவு 2 : 22.09.2011 காலை 11-1 மற்றும் 23.09.2011 காலை 11-1
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

Diploma Course fee Free5
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English
6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
இன்றே உங்கள் <Name>,<Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
MCS Supported By UNDP/JRRP
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324, Palaly Road, Parameswara Junction
facebook - mcsitcampus email: info@mcsitcampus.org www.mcsitcampus.org

தேவை
பெண்பிள்ளைகள் தேவை (வயது: 18 - 21) நேரில் வரவும்.
மயில் அழகுக்கலை நிலையம் வீடியோ அன்போட்டோ.
இல.137, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. 0776914123

ENGLISH, SINHALA & COMPUTER CLASSES
IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்
வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
சிங்கள வகுப்புக்கள்
பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
கணனி வகுப்புக்கள்
MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390. Fax : 222 4460.

Hotline 077 309 9 308
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
ஆங்கிலத்தில் ஆசியாவில் மட்டுமல்ல சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
City & Guilds -UK English Course @ ESOFT
IESOL-International English for Speakers & other Languages
ISESOL-Internationl Spoken English for Speakers of other Languages
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch I 24-09-2011
Batch II 26-09-2011
Batch III 28-09-2011
Esoft Computer Studies
No.166/3, Navalar Road
Jaffna.
TP: 021-2224142
Jaffna 021-2224142 Nelliyadi 021-2264940
Kilinochchi 021-2285444 Kodikamam 077-6250789
Chavakachcheri 077-6250789 Uduppiddy 021-3201303

# மரண அறிவித்தல்

## கணபதிப் பிள்ளை சின்னத்துரை



உடுவில் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னத்துரை 19.09.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், கஜவதனி, சிவகுமார் (சிவகுமார், ஸ்ரோர்ஸ் மானிப்பாய்), காலஞ்சென்ற ரமணி மற்றும் ரஜகீர்த்தினி (லண்டன்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசதுரை (குடிவரவு, குடி அகழ்வு அதிகாரி), செல்வரட்ணம், அன்னம்மா மற்றும் அன்னலட்சுமி, சரஸ்வதி, குமாரவேலு (ஓய்வுபெற்ற பொறியியலாளர், Canada), மகேஸ்வரி, குணமணி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருந்தவநாதன் (யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர்), இரஞ்சிதமலர் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி ), சிவபாலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வவுனியா), வசந்தன் (Real Estate Agent, London), செல்வகுமார் (டோகா) ஆகியோரின் மாமனும், அனோஷன், நிருஷன், யாதுஷன், டிரோசன், டிரோசினி, கேஷாயினி, வைஸ்ணவி, விஷ்ணுகா, பிருந்தா, அபிஷிதா, டனோஷன், சபிந்தன், பிரணவன், சாகித்தியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (21.09.2011) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

*தகவல்:*
சின்னத்துரை சிவகுமார் (மகன்).

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



நிகழும் கரவருஷம் ஆவணித் திங்கள் 5 ஆம் நாள் (22.08.2011) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம்

**செல்வன் செல்வராசா ஜனகன்**

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளும், சபிண்டீகரணமும் இன்று (21.09.2011) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி ஆத்ம சாந்தி நிகழ்வுகளிலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*கலைமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி
எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.
தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.
எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் 24.09.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 a.m பிரிவு III 01 - 03 p.m
பிரிவு II 10 - 12 a.m பிரிவு IV 03 - 05 p.m
03 மாத பயிற்சிநெறிக் கட்டணம் ரூபா 3000.00
பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு , மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்) Tel:0776214567

NALIN Information Technologies Pvt Ltd.
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் நல்வாழ்த்துக்கள்
NALIN CITY SHOW ROOM
Laptop, Branded PC, Assemple PC,
புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு
எந்த கணனி நிறுவனமும் வழங்காத விலைக்கழிவுகளில் நளின் நிறுவனம் வழங்குகின்றது.( 3 நாட்கள் மட்டுமே)






Free
Computer Table
Head Phone
Delivery
Service
356, Luxan Plaza, Kasthuriyar Road, Jaffna.
www.nit.lk nalin@nit.lk Tel: 021 222 0838/ 0777667975 Fax: 021 222 4994
Nalin Information Technology Pvt Ltd
Palaly Road Parameswara Junction, Thirunerveli
Tel: 021 222 1166/ 0777667974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




# திராட்சையில் எண்ணற்ற சத்துக்கள்



பழங்காலத்தில் இருந்து உலகம் முழுவதும் பயிரிடப்படும் திராட்சைப் பழத்தில் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.


ஊட்டச்சத்து நிறைந்த பழங்களுள் ஒன்றான திராட்சையில் விட்டமின் சத்துக்கள் உள்ளன. இவைத்தவிர பொஸ்பரஸ், இரும்புச்சத்தும் அதிக அளவில் காணப்படுகின்றன.

இப்பழத்தைச் சாப்பிட்டால் பித்தம் தணியும், உடல் வறட்சியை நீக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தி, புதிய இரத்தத்தை ஊறவைக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது. அதனால் மூளையும், இதயமும் வலிமை பெறும். கல்லீரலின் பலவீனத் தால் உணவு செரிமானமாகாத தொல்லையை நீக்கும். உஷ்ணத்தால் உடலில் ஏற்படும் நமைச்சல், சிறுநீர் கடுப்பை குணப்படுத்துகிறது.

சிறுகுழந்தைகளுக்கு பல்முளைக்கும் காலங்களில் மலச்சிக்கல் உண்டாகும்.

ஒரு சில குழந்தைகளுக்கு வலிப்பு நோயும், உண்டாகும். இதற்கு திராட்சைச் சாறு அருமருந்தாகிறது.



ஜலதோஷத்தால் ஏற்படும் நீர்வடிதல், இருமல், தும்மல் போன்றவற்றை திரட்சை பலச்சாறு குணப்படுத்துகிறது.

மார்புச் சளியை போக்குகிறது. நுரையீரலை பாதுகாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

இரத்த சோகைக்கும் காமாலை நோய்க்கும் கூட இது சிறந்த மருந்தாகிறது. குடல் மற்றும் உடல் புண்ணையும் ஆற்றும் தன்மை கொண்டது. களைப்பைப் போக்கி ஆழ்ந்த உறக்கத்தைத் தரும். அஜீரணம், பசியின்மை, வயிறு உப்புசம் போன்றவற்றுக்கு திராட்சை சிறந்த மருந்து.

சீரற்ற மாதவிடாய் சீராடைகிறது. மாதவிடாய் சமயத்தில் ஏற்படும் வயிற்று வலியை போக்குகிறது. இதய பலவீனமானவர்களுக்கு திராட்சை சிறந்த மருந்து. தலைவலி போன்றவற்றை குணப்படுத்தகிறது.

சிறிய அளவில் எடுத்துக்கொள்ளப்படும் சிவப்பு வயினுக்கு புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலும், இதயத்தை வலுப்படுத்தும் ஆற்றலும் உண்டு.

அதிகம் சளி பிடித்திருக்கும் போதும், ஆஸ்துமா நோயுள்ளவர்களும், வாத உடம்புக்குள்ளானவர்களும், அதிக அளவில் திராட்சைப் பழத்தை சாப்பிடக் கூடாது என்பது மருத்துவர்களின் அறிவுரை.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ESOFT
The Leader in Professional IT Education

# Esoft Computer Studies.

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக் கல்லூரி

## எமது நிறுவனத்தில் 2011 இல் யாழ் மாவட்டத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றோம்.






## கிளிநொச்சி மாவட்டத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்களை வாழ்த்துகின்றோம்.




**2011 இல் A/L பரீட்சையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான 5, 6 ஆவது புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.**

24-09-2011
28-09-2011

## Diplomas

- DiTEC — Diploma in Information Technology
- DiBM — Diploma in Business Management
- DiSE — Diploma in Software Engineering
- DiWE — Diploma in Web Engineering

## Degress

- BIT — Bachelor of Information Technology
- bucks new university — Higher Education Qualifications (HEQ
- bcs The Chartered Institute for IT — B.Sc. (Hons) in Computing
- BIT UoM — Bachelor of Informatic Technology (External)

**Esoft Computer Studies.**
**166/3, Navalar Road**
**Jaffna.**
Hotline:077-3099308

### வடமாகாணக்கிளைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Chavakachcheri | 077-6250789 | Uduppiddy | 021-3201303 |
| Nelliyadi | 021-2244940 | Kodikamam | 077-6250789 | Mannar | 023-2223377 |
| Kilinochchi | 021-2285444 | karainagar | 021-3202236 | Vavuniya | 024-2226060 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org